உ

சுவாமியே சரணம் ஐயப்பா

## சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்

# 'அருளமுதம்'

## தத்துவப் பாமாலை

21வது ஆண்டு

மண்டல பூஜை



சிறப்பு மலர்

வெளியிடுவோர்:

**அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்**

சபரிமலை தீர்த்தயாத்திரைக் குழு

(ஆன்மீக, சமூக சேவை நிலையம்)

இல 11. ஆட்டுப்பட்டி ஒழுங்கை, கொழும்பு 13. ஸ்ரீ லங்கா.

தொலைபேசி இல. 433841, 431189

**26-12-1996**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மயூரபதி அம்பாளின்
நல்வாழ்த்துக்கள்
அடியவன்

# பொன். வல்லிபுரம் ஜே.பி

அறங்காவலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா

# சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்

# 'அருளமுதம்'

## தத்துவப் பாமாலை

## 21வது ஆண்டு

## மண்டலபூஜை சிறப்பு மலர்

தொகுத்தவர்:

***அமரர். க. ரவீந்திரகுமார், ஐயப்பனடிமை***

ஸ்தாபகர் - அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்

வெளியிடுவோர்

**அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்**

(அகில பாரத ஐயப்ப சேவா சங்கம் இலங்கை கிளை

சபரிமலை தீர்த்த யாத்திரை குழு, பதிவு எண் : 1764)

பொருளாளர்:

**குருசுவாமி பொ.ரவீந்திரகுமரன்**

இல 11,ஆட்டுப்பட்டி ஒழுங்கை,

கொழும்பு 13.

தொலைபேசி : 433841, 431189

செயலாளர்:

**கே.மோகன்குமார்**

G 1/6, சாஞ்சியாராச்சி தோட்டம்

கொழும்பு 12.

தொலைபேசி: 335506

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு : அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்

தொகுப்பு : குருசுவாமி அமரர். க.ரவீந்திரகுமார் அவர்கள்

உதவி : செயலாளர் K.மோகன்குமார்
குலபதி ஆறுமுகம் கந்தையா J. P.

கணனி அமைப்பு : Mayoori Graphics, Colombo 13.
Crystal Graphics, Colombo 13.
BBC Graphics, Colombo 13.

அட்டைப்படம் : க.ஜெயகுமார்

அச்சிடுவோர் : EXCELLENT PRINTERS
FG 1, Samagipura Flats,
St.Josephs Street, Colombo 14.
Tel: 347099

சங்க வளர்ச்சி நிதிக்காக நன்கொடை ரூபா 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



*நினைவுகளில் சங்கமித்து*
*நெஞ்சினிலே வாழ்கின்றீர்*
*கனவுகளில் நிஜங்களாக*
*கதைகள் பல சொல்கின்றீர்*
*அணைந்துவிட்ட உமது ஒளி*
*அழியவில்லை எம் மனதில்*
*உமது நாமம் பதிந்திருக்கும்*
*உயிருள்ளவரை எம் நெஞ்சில்*

அன்பின் குருசுவாமியே
உமது பொற்பாதங்களுக்கு எமது சங்கத்தின் வெளியீடான இந்த அருளமுதத்தை காணிக்கையாக சமர்பிக்கின்றோம்.

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமியே சரணம் ஐயப்பா

# முன்னுரை

"பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய சதுஷ்க்ந்தாம் தர்ம -
ஸம்ஸ்தர்பனார்தாய ஸ்ம்பவாமி யுகே யுகே"
நல்லோரை பாதுகாத்து,தீயோரை ஒழித்து தர்மத்தை நிலை நாட்ட
யான் யுகந்தோறும் அவதரிக்கறேன் என்கிறார் கிருஷ்ணபரமாத்மா

கடவுளை பற்றிய சிந்தனையுடையவனே அதர்மத்துக்கு அஞ்சவும் தர்மத்தை போற்றவும் துணிகிறான் தற்கால மனிதன் வாழ்கை முறை தர்மத்தை பேணவிடாமல், அதர்மத்தை செய்யவே தூண்டுகிறது.மனித மனம் எப்பொழுதும் சஞ்சலமுடையது சந்தோஷம், விருப்பு, வெறுப்பு, இன்பம்,துன்பங்களில் உழன்று வருகிறது. மனதை ஒருவழிப்படுத்த இறைவழிபாட்டில் மட்டுமே முடியும். எனவேதான் மேலத்தேய நாட்டினர் அமைதி வேண்டி ஆச்சிரமங்களை நாடுவது கண்கூடாக காண முடிகிறது.

இறைவனை வழிபட அன்பு வேண்டும்
இறைபணி செய்ய வேண்டும்
இறைவனை வாயாலும் மனதாலும் போற்றவேண்டும்

அகமும் புறமும் தூய்மைபெறின் இறையருள் தானாகவே வந்தடைகிறது.வாழ்வைப் பற்றிய சிக்கலில் மனதை ஈடுபடுத்திக்கொண்டு குழம்பித் தவிக்கும் கோடான கோடி மக்களுக்கு மனதையும்,உடலையும் தூய்மையாக்கி, எண்ணியதை எண்ணியபடி நடத்தி வைக்கிறான் கருணா மூர்த்தியான ஸ்ரீ ஐயப்பன் சுவாமி.

மனிதன் தன்னைத்தானே அழித்துக்கொள்ளும் காமம்,குரோதம்,லோபம்,மதம், மதார்ச்சாரியம் போன்ற தீய எண்ணங்களிலிருந்து விலகி நல்லதோர் வாழ்க்கையை அமைத்திட ஆறறிவு படைத்த மானிடவர்க்கத்திற்கு ஐயன் விரதமுறை கிடைத்தற்கரிய பேறாகும்.

புனிதமான யாத்திரைகளிலேயே சபரிமலை யாத்திரை மிக உன்னதமானதாகவும்,சக்திவாய்ந்ததாகவும் கருதப்படுகிறது. ஆதலால்தான் ஸ்ரீ பொன்னம்பல வாசனின் அருளைவேண்டி கோடிக்கணக்கான பக்தர்கள் அவனை நாடி வருகின்றனர்.அப்படி நாடிவரும் நம் இலங்கை வாழ் பக்தர்களை,முறையாகவும் நெறியாகவும் சபரிமலை யாத்திரைக்கு அழைத்துச் சென்று சர்வ வியாபியான ஸ்ரீ அரிஹரசுதனின் அருளை இலங்கை வாழ் பெருமக்களுக்கு வாரி வாரி வழங்கும் பணியில் கடந்த 20 ஆண்டு காலமாக தன்னை ஐக்கியப்படுத்தி பெரும் இறைபணியாற்றிய எமது வணக்கத்திற்குரிய குருசுவாமி அமரர் க. ரவீந்திரகுமார் அவர்களின் பாத கமலங்களுக்கு இம்மலரைகாணிக்கையாக்குகிறோம் அவர் விட்டுச் சென்ற இவ்இறைப்பணியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம் தொடர்ந்தும் குருசுவாமி பொ. ரவீந்திரகுமரன் தலைமையில் தீர்த்தயாத்திரையை மேற்கொள்ள இறைவன் அருளினால் திடசங்கற்பம் பூண்டுள்ளது.

ஏனைய தெய்வங்களை வழிபடும் பக்தர்களுக்கும் ஒரு சிறந்த மாறுதல் உண்டு ஸ்ரீ ஐயப்பன் மாலை அணிந்து கொண்டு விரதமேற்கொண்டு விட்டால் அவருள் ஐயப்பனே ஐக்கியமாக்கி விடுகின்றார். பிறகு அவர்களிடையே உயர்ந்தவர் தாழ்ந்தவர்,ஏழை,பணக்காரன் என்ற பாரபட்சமோ,பாகுபாடோ கருதாமல் அனைவரும் ஒன்றே அனைவரும் ஸ்ரீ ஐயப்பனின் அடிமை என்ற மிக உயர்ந்த சமத்துவ தத்துவத்தை அறிவுறுத்துவதும். கடைபிடிப்பதும் ஸ்ரீ ஐயப்பன் வழிபாடு ஒன்றே. ஹரிஹர புத்திரன் ஸ்ரீ தர்மசாஸ்தா, மணிகண்டன் என பல நாமங்களில் மிளிருகின்ற ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் அற்புதங்களையும் பெருமைகளையும் திருவருட்சிறப்புகளையும்,அனைவரும் அறிந்து அவன் திருவடி சரணமடைந்து பேரின்ப பெருவாழ்வு பெற்றுய்ய வேண்டும் என்ற நன்நோக்குடன் எமது வணக்கத்துக்குரிய குருசுவாமி அமரர் க. ரவீந்திரகுமரன் அவர்கள் வருடம்தோறும் நடைபெறும் மண்டல பூஜையை முன்னிட்டு வெளியிடும் சிறப்புமலர் இவ்வாண்டும் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் "அருளமுதம்" தத்துவப் பாமாலை என்ற பெயரில் அவர் தொகுத்தளித்த தத்துவங்களை மலராக எமது அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம் இவ்வாண்டும் 21வது ஆண்டுமலராக வெளியிடுகின்றது.

இம்மலரை முனிவர்கள்,ஞானிகள்,அறிஞர்கள்அகியோர் எழுதிய நூல்களிலிருந்தும் அமரர் குருசுவாமி க. ரவீநதிரகுமார் தொகுத்துள்ளார்.கண்கண்டதெய்வத்தின் பெருமையை உலக மக்களுக்குளடுத்தியம்ப வேண்டும் என்ற ஆவலினால் மலர்ந்த இம்மலரில் சொற்பிழை,பொருட்பிழை இருப்பின் குற்றங்களைந்து குணம்கொள்ளுமாறு நல்லோராகிய உலகத்தோரை பணிவன்புடன் வேண்டுகிறேன்.

இம்மலர் மணம் வீச ஆசியுரை வழங்கிய நல் இதயங்களுக்கும் விளம்பரம் வழங்கிய நல்இதயங்களுக்கும் சிறப்பான முறையில் மலரை அச்சிட்டுதந்த அச்சகத்தருக்கும் அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் நன்றியை காணிக்கையாக்குகிறேன். இனம், ஜாதி,மத பேதமின்றி எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் நிறை என்ற ஸ்ரீ ஐயப்பனின் அருள் வாக்கை மனதில் கொண்டு சகோதரத்துவத்தோடு ஒற்றுமையாக வாழ பெருமானை வேண்டுகிறேன். மெய்பொருளாகிய ஸ்ரீ ஐயப்ப சுவாமி உலகெங்கும் மங்களம் தங்கும்படி அருள் புரிவாராக.

*ஓம் மங்கள மூர்த்தியே சரணம் ஐயப்பா*

**கே. மோகன்குமார்**
அகில இலங்கை ஐயப்ப சேவா
சங்கம் செயலாளர்

G 1/6 சாஞ்சியாரச்சி தோட்டம்
கொழும்பு-12.இலங்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் மகிமையை பாரத நாடு நன்கறியும் இலங்கையிலும் வேரூன்றி பரவத் தொடங்கியுள்ளது. நாளுக்கு நாள் ஐயப்பனின் தொகையும் கூடிக்கொண்டு வருவதற்கு காரணம் எண்ணியதை எண்ணியபடி நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஓரிரு பக்தர்களே சென்றனர் இன்றோ நூற்றுக்கணக்கானோர் விரதம் அனுஷ்டித்து வருகிறார்கள் வருங்காலத்தில் ஆயிரக்கணக்கானோர் ஐயப்பனை தரிசிக்கச் செல்வார்கள் என்பதில் ஐயமில்லை.

இந் நூல் வெளியிடுவதற்கு காரணம் ஐயனின் அருமை பெருமைகளை படித்தவர் மட்டுமின்றி பாமரர்களும் அறிய வேண்டும் என்ற றோக்கோடு உங்கள் கரங்களில் சமர்பிக்கிறோம் கடந்த காலங்களில் நல்ல விளைவைக் காட்டியமையால் பதிய கருத்துக்கள் சிலவற்றை சேர்த்து புது மெருக் கூட்டியுள்ளோம் இந்நூலில் தத்துவங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இம்மலர் வெளியிடுவதற்கு பேருதவி புரிந்த வணிக பெருமக்கள், அன்பர்கள், ஆதரவளார்கள் மட்டுமன்றி இரவு பகல் பாராது சிறந்த முறையில் அச்சிட்டு வழங்கிய அச்சகத்தாருக்கும் சகல ஊழியர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வருடம் பூஜைகள் அன்னதானங்கள் முதலியவற்றை வெகு விமர்சையாக நடத்துவதற்கு ஜெயந்திநகர் ஸ்ரீ சிவப்பிரமணிய கோவில் மண்டபம் தந்துவிய ஆலய தர்மகர்த்தா பரிபாலன சபையினருக்கும் எமது அன்பான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

**அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம்**

**தீர்த்த யாத்திரைகுழு**

**(மலர் வெளியீட்டுக்குழு)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சபரிகிரிவாசனே சரணம் ஐயப்பா

## புகழ் அனைத்தும் எங்கள் குருநாதருக்கே

தெய்வீகத் தொண்டாற்ற மண்ணுலகுக்கு பிள்ளையாய் ஈன்ற மாதா,பிதாவை,வணங்குகிறோம் அறியாமை இருளில் மூழ்கிக் கிடந்தவன் கண்களை திறக்க மேலோனாகிய குருவை வணங்குகிறோம். "சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் அருளமுதம்" எனும் ஸ்ரீ ஐயப்பன் புகழ் பாடும் இந்நூலை வெளியிட வழிகாட்டியாகத் திகழ்ந்த வணக்கத்திற்குரிய குருசுவாமி அமரர்.க.ரவீந்திரகுமார் ஐயப்பன் அருள்வாரி இவர்கள் நல்லாசியுடன் உங்கள் முன் சமர்பிக்கிறோம்.

கடந்த இருபது ஆண்டுகளாக தொடர்ச்சியாக பெருவழிப்பாதையில் பல நூற்றுக்கணக்கான ஐயப்பனடியார்களை அவனருளாள் அழைத்துச் சென்று மகரஜோதி தரிசனம் கண்டு வரும் பாக்கியம் பெற்றவர். சோதனை வரினும்,வேதனை தரினும் நற்போதனைப்படி நடந்து சாதனை பல புரிந்தவர்,அமரத்துவம் அடைந்த எங்கள் குருசுவாமி, எமது குருசுவாமி இளமை குன்றாத மணிகண்டன் அன்பில் சிறந்தவர் ... பண்பில் உயர்ந்தவர்,கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு நிறைந்த தர்மதேவன். இந்த தேவன் காட்டிய வழியே இன்று இலங்கையில் பல நூற்றுக்கணக்காண ஐயப்பனடியார்கள் சபரிமலை செல்கின்றனர்.

இதேசமயத்தில் எமது குருவின் குரு வணக்கத்துக்குரிய குருசுவாமி உயர்திரு நா.தர்மலிங்கம் ஐயப்பன் அருள்வாரி (குருசுவாமி. இராமேஸ்வரம்) அவர்களையும் நினைவு கூருவதில் எமது தீர்த்தயாத்திரை குழு உவகை கொள்கின்றது.

இலங்கையின் பல பாகங்களில் ஐயப்பன் வழிபாட்டு ஸ்தலங்களில் அவன் நாமம் ஒலிக்கின்றது.கடந்த 20 வருடங்களாக புனித யாத்திரையை மேற்கொண்டு வரும் அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் தீர்த்த யாத்திரை குழு 21 வது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது கொழும்பு மாநகரில் ஐயப்பன் புகழ் பரவிட மேற்கொண்ட முயற்சி திருவினையாகியதை எண்ணி மகிழ்வடைகிறோம்.

தலைநகரில் மட்டுமின்றி கண்டி, மாத்தளை, இரத்தினபுரி, ஹெட்டன், மஸ்கெலியா, பதுளை, நீர்கொழும்பு போன்ற இடங்களில் ஐயப்பன் புகழ் பரவி வருகின்றது. ஐயப்பன் இல்லம் என்று ஆரம்பித்த சபரிமலை தீர்த்த யாத்திரை குழு இன்று அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம் என உருக்கொண்டிருப்பது ஸ்ரீ ஐயப்பனின் கருணையே ஆன்மீக வழியில் பற்பல சேவையாற்றி வரும் சங்கத்தினரின் சேவை மென்மேலும் வளர எங்கள் குருசுவாமி அமரர் க. ரவீந்திரகுமார் அவர்களின் ஆசி வேண்டி பிரார்த்திக்கிறோம்.

**சபரிமலை தீர்த்தயாத்திரை குழுவினர்**

*எல்லாப் புகழும் எங்கள் குரு நாதருக்கே*
*ஓம் குருவிற்கும் குருவே சரணம் ஐயப்பா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்னிமூல கணபதி பகவானே சரணம் ஐயப்பா
ஓம் கருப்பன்ன சுவாமியே சரணம் ஐயப்பா

## ஜீவன் என்பது உள்ளவரை என் நெஞ்சம் வணங்கும் சபரிமலை

கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாக விளங்கும் ஸ்ரீ சபரிமலை ஐயப்பனின் புகழினை அறியாதவர் இன்று யாரும் கிடையாது. கடந்த 20 வருடங்களாக எமது இலங்கை திருநாட்டில் ஐயப்பனின் புகழினை நம் எல்லோர் மத்தியிலும் பரப்பி இன்று அந்த ஐயப்பனிடமே எம்மையெல்லாம் விட:டு சென்றவர் எமது வணக்கத்திற்குரிய அமரர்.குருசுவாமி க.ரவீந்திரகுமார் அவர்கள் அன்னார் விட்டுச்சென்ற இப்புனித பணியை தொடர்ந்து நடாத்தி செல்வதற்கு அடியேன் எடுத்துள்ள இம்முயற்சி தொடர்ந்து சிறந்த முறையில் பல வருடங்கள் விளங்க அந்த ஐயப்பன் அருள் புரிவானாக.

இன்றைய நவநாகரீக உலகில் காலத்தின் கோலத்தால் வேடிக்கை நிகழ்ச்சிகளிலும் களியாட்டங்களிலும் ஈடுபட்டு உண்மை வாழ்க்கையை அறியாது போலி வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் எமது இளைய தலைமுறையினருக்கு மாயையிலிருந்து விடுபட்டு ஆன்மீக வாழ்வில் ஈடுபாட்டினை உண்டுபண்ண புனித சபரிமலை யாத்திரையினால் மட்டுமே முடியும் அந்த ஐயனின் திருநாமத்தை உச்சரித்தப்படியே ஒரு மண்டலத்திற்கு(41 நாட்கள்) கடும் பிரம்மச்சரிய விரதத்தினை கடைப்பிடிப்பதன் மூலமே எம்மால் அந்த மகர சங்கராந்தி தினத்தன்று பொன்னம்பலமேட்டில் காந்தமலை வாசனை ஜோதீஸ்வரரூபமாக மகரஜோதியாக காணமுடிகின்றது.

கடந்த பதினொரு ஆண்டுகளாக தொடர்ந்து சாதாரண ஒரு சுவாமியாக இப்புனித யாத்திரையை மேற்கொண்டு வந்த இந்த எளியோனையும் அந்த குருவிற்கும் குருவான ஸ்ரீ சபரிமலை வாசன் ஒரு குருவாக உருவாக்கியதன் மூலம் எமது சேவா சங்கத்தின் கீழ் மாலையிட்டு செல்லும் 100க்கும் மேற்பட்ட சுவாமிகளை சபரிமலைக்கு அழைத்து செல்கின்ற பெரும் பாக்கியம் எனக்கு கிடைத்துள்ளது.

ஸ்ரீ தர்மசாஸ்தாவாகிய ஐயப்பசுவாமியின் திருவருட் சிறப்பினை அனைவரும் அறியும் வண்ணம் வருடந்தோறும் மண்டலபூஜையினை முன்னிட்டு வெளியிடும் சிறப்புமலர் இவ்வாண்டு அருளமுதம் தத்துவபாமாலை என மலர்ந்துள்ளது. இப்புனித பணியை செய்வதற்கு இவ்வையகதிற்கு என்னை பிள்ளையாக ஈன்ற தாய் தந்தையை முதலில் வணங்கி மாயை உலகில் இருந்த என் கண்களை திறந்து மேலோனாக்கிய குருவின் பாதங்களை பூஜித்து பணிகின்றேன்.

உலக மக்கள் அனைவரும் இன்று ஜாதி மதவேறுபாடின்றி ஒன்று கூடும் இடம் அந்த சபரிமலையே அதே போல் இலங்கை திருநாட்டிலும் இன, மத, மொழி பேதமின்றி சாந்தியும் சமாதானமும் நிலைபெற எம்பெருமான் சபரிமலை ஸ்ரீ ஐயப்பனை வேண்டுகின்றேன். ஓம் சுவாமியே சரணம் ஐயப்பா

**அகில இலங்கை ஐயப்பா சேவா சங்கம்**
சபரிமலை தீர்த்த யாத்திரைக்குழு
11, ஆட்டுப்பட்டி ஒழுங்கை
கொழும்பு 13. இலங்கை.

**பொ.ரவீந்திரகுமரன்** (ஐயப்பனடிமை)
சபரிமலை தீர்த்தயாத்திரைக் குழு
குருசுவாமி
அகில இ.ஐ.சேவா சங்க பொருளாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LEADER OF THE OPPOSITION

## PARLIAMENT, SRI LANKA

*It is with great pleasure I learnt from you, of the forthcoming 21st Anniversary of Sri Ayyappan Mandala Pooja (Ganapathy Omom) on December 26. 1996.*

*Your prayers at this Pooja, I am sure will help not only in encouraging your members, but those who believe in the spiritual upliftment of our people regardless or race, caste, or creed.*

*I wish your pilgrimage to Sabari Malai all success.*

*It will not be possible for me personally at your pooja, but I take this opportunity to pray for the success of this event. Yours is a noble cause*

**Ranil Wickremasinghe**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## MASSAGE FROM
## HON.LAKSHMAN JAYAKODY
## MINISTER OF CULTURAL & RELIGIOUS AFFAIRS

I am given to understand that the All Ceylon Ayyappa Seva Sangam is publishing a Souvenir in connection with the Special Mandala Pooja to be held on 26th December at Sri Siva Subramania Swami Temple, Colombo 13, by devotees undertaking the Sabari Malai Yathra.

The members of this Sangam make Pilgrimage to Sabari Malai annually. The Ayyappan culture gives self discipline and spiritual consciousness.

I hope that the activities of this Sangam would lead to a spiritual life which would promote the betterment of the Society.

I wish the Mandala Poojah all success.

**Hon. Lakshman Jayakody**
Minister of Cultural & Religious Affairs.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாண்புமிகு

**பி.பி.தேவராஜ் M.P**

(கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

**அவர்களின்**

**ஆசியுரை**

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் ஐயப்பன் வழிபாடு பல வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும் இன்று அகில இலங்கை ரீதியாக பரவி பல நூற்றுக்கணக்கான அடியார்கள் விரதம் பூண்டு சபரிமலை தீர்த்த யாத்திரை செய்து வருகின்றமையிட்டும். மேற்படி அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கம் 21வது தடவையாக இம்முறையும் நடாத்தப்படுவதையிட்டும் நான் பெருமகிழ்வு கொள்கிறேன்.

இலங்கையில் தற்போது பெருமளவு இளைஞர்கள் ஐயப்பன் அருள்வேண்டி விரதம் மேற்கொள்வது வரவேற்கத்தக்கது. இளமையிலே இக்கட்டுப்பாட்டுகளையும், சசீரிய ஒழுக்கத்தையும் இவ்விரதம் பெற்றுத்தருகின்றது. எனவே இவ்வித வழிபாடு நினைத்த காரியத்தை சுலபமாக நிறைவேற்றுவதுடன் இளைஞர்கள் மத்தியில் மனஅமைதி, ஒழுக்க கட்டுப்பாடு என்பனவற்றை வேணுகின்றது. இன்றைய நாட்டின் நிலமையில் விரும்பத்தக்கதாகும்.

அந்தவகையில் இளைஞர்களையும் ஆன்மீக வழியில் நெறிப்படுத்தி ஐயப்பன் புகழ் பரப்பும் நற்பணியை மேற்கொள்கின்ற அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் பணிகள் சிறக்கவும் மேலோங்கவும் என் நல்வாழ்த்துக்களை இந்நன்நாளில் மனமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேல்மாகாணசபை உறுப்பினர்
மாண்புமிகு திருமதி
**வேலம்மாள் செல்லச்சாமி** அவர்களின்
## ஆசிச்செய்தி

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ சபரிமலை ஐயப்ப பக்தர்கள் வருடம் தவறாமல் நடத்தி வரும் மண்டல பூஜை இருபத்தியோராவது தடவையாக நிறைவேறுவதையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையில் தற்போது பெருமளவு இளைஞர்கள் ஐயப்பன் அருள்வேண்டி விரதம் மேற்கொள்வது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. இங்ஙனம் இளமையிலேயே கட்டுப்பாடுகளோடும்,தெய்வீக அனுபவங்களோடும் வாழ்வை செம்மைபடுத்தி கொள்கின்றபோது எதிர்காலம் நம்பிக்கைமிக்கதாகும்.

அந்த வகையில் இளைஞர்களையும்,ஆன்மீக வழியில் நெறிப்படுத்தி ஐயப்பன் புகழ் பரப்பும் பெரும் பணியை மேற்கொண்டுள்ள அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தினரின் நற்பணிகள் சிறக்கவும்,ஐயப்ப பக்தர்களின் தெய்வீக நோக்கங்கள் நிறைவேறவும் மேலும் பல மண்டல பூஜைகள் நிறைவேறவும் மனமார வாழ்த்துகின்றேன்

**' வாழ்க ஐயப்ப அடியார்கள். வளர்க சங்கத்தின் பணி '**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு வெள்ளவத்தை

**மயூராபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான**

அறங்காவலர் சிவநெறிச்செல்வர்

**உயர்திரு பொன். வல்லிபுரம்**

(சமாதான நீதவான்)

## அவர்களின் ஆசிச் செய்தி



ஐயப்பன் அடியார்கள் ஒன்று கூடி யாத்திரை செல்வதும் செல்லும் வழிகளில் உள்ள கோவில்களில் எல்லாம் பஜனை செய்து பக்தி பரவசத்தை உண்டாக்கும் மார்கழி மாதங்களில் காணக்கூடிய பக்திபரவசமான காட்சிகள் சபரிமலை யாத்திரை என்பது எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதொன்றல்ல, மனதை கட்டுப்படுத்தி 2 மாதமாக விரதமிருந்து இருமுடிசுமந்து மலை ஏறி ஐயனுடைய மகரஜோதியை கண்டுவிட்டால் நாம் செய்த பாவங்கள் அத்தனையும் சூரியனைக் கண்ட பனிபோல் கரைந்துவிடும்.

அடியார்களை அன்போடு வாழ்த்தி வணங்குகிறேன்.

"அப்பனுண்டு அச்சமில்லை"

இங்ஙனம்

அம்பாள் அடியவன்

**பொன். வல்லிபுரம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாண்புமிகு

## R.யோகராஜன் M.P

(கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

ஸ்ரீ ஐயப்பன் திருவருளால் இலங்கையில் மிகச்சிறப்பான மண்டலபூஜையை நடாத்தி தீர்த்த யாத்திரைகளைத் தொடர்ந்து மேற்கொண்டுவரும் ஐயப்ப பக்தர்கள் இம்முறையும் இப்புனித யாத்திரையை சிறப்புடன் நடாத்தி முடிக்க ஸ்ரீ ஐயப்பன் திருவருள் துணை நிற்கும் என வேண்டுவதுடன் இந்த யாத்திரையை இலங்கையில் அதுவும் கொழும்பு மாநகரில் கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக மிகச்சிறப்பான முறையில் வழிநடாத்திவரும் அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தினருக்கு இவ்வேளையில் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

இச் சங்கத்தை ஸ்தாபித்து அண்மையில் அமரத்துவம் அடைந்த குருசாமி திரு.க.இரவீந்திரகுமார் அவர்களது மறைவிற்குப் பின்னும் இச்சேவா சங்கத்தை சிறப்புடன் வழிநடாத்த முன்வந்த பொ.ரவீந்திரகுமாரன், கே.மோகன் குமார் ஆகியோருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு வருடந்தோறும் சிறப்பாக மலரும் “அருளமுதம்” மலருக்கு வாழ்த்துச் செய்தி நல்குவதிலும் மகிழ்வடைவதோடு ஐயப்ப பக்தர்களின் தீர்த்த யாத்திரை சகல சௌபாக்கியத்துடன் பூரணத்துவம் பெற ஸ்ரீ ஐயப்பனின் திருவருளை வேண்டி நிறைவு கொள்கிறேன்.

*நன்றி*

*இவ்வண்ணம்*

**ஆர்.யோகராஜன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கை தேசிய தொழிலாளர்
காங்கிரஸ் தலைவர்
*மாண்புமிகு* **எம். எஸ். செல்லச்சாமி**
அவர்களின்

## ஆசிச்செய்தி

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் சபரிமலை தீர்த்த யாத்திரை குழுவினரின் ஆதரவில் ஸ்ரீ சபரிமலை ஐயப்ப சுவாமி பக்தர்கள் ஆண்டு தோறும் மண்டல பூசையை சிறப்பாக நடத்தி வருவதை நாமறிவோம். வருடந்தோறும் ஒரு சிறப்ப மலரையும் வெளியிடுவதன் மூலம் பக்தி நெறியையும் பரப்புவது குறித்து அவர்களை பாராட்டாமலிருக்க முடியாது.

இலங்கையில் ஐயப்ப பக்தர்கள் பெருகிவருகின்றனர் இதற்கு காரணகர்த்தாவான அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தின் ஸ்தாபகரும் குருசுவாமியுமாகிய அமரர்.க.ரவீந்திரகுமார் அவர்களின் சிறந்த வழிக்காட்டலேயாகும். அவர் விட்டுச் சென்ற பணிகளை சேவா சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுவினர் திறம்பட செய்வதையெண்ணி நான் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையில் அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தினர் சாந்தி,சமாதானம் நிலவ இறைபணியை முன்னெடுத்துச் செல்கின்றனர் இப்பணி மேன்மேலும் சீரும் சிறப்பும் பெற்று ஓங்கி உயர்ந்து மக்களுக்கு அருஞ்சேவை செய்ய வேண்டுமென்பதே எமது அவா. அதற்காக உழைக்கும் அடியார்களை மனமார வாயார வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *MESSAGE*

The High Commission of India in Sri Lanka learns with great pleasure that the All Ceylon Ayappa Seva Sangam is celebrating the 21st Anniversary of Sri Ayyappan Mandala Pooja this year with great devotion. The Seva Sangam has been playing a vital role in exchange of religious and cultural thoughts between the people of India and Sri Lanka.

On behalf of the High Commission of India in Sri Lanka I feel privileged to extend message of felicitation and good wishes to the Sangam. I wish the function a grand success.

**( H.Upadhyay)**
Counsellor (Cons.)
December 6. 1996

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கலாசார சமய அலுவல்கள் அமைச்சின்
மேலதிகச் செயலாளர் (இந்து விவகாரம்)
**திருமதி. இ. கைலாசநாதன் அவர்களின்**
**வாழ்த்துச் செய்தி**

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தினர், தமது 21 வது வருடாந்த ஸ்ரீ ஐயப்ப மண்டல பூஜையை ஒட்டி வெளியிடும் "அருளமுதம்" சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களை அளிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஐயப்பன்மீது நோன்பிருக்கும் பக்தர்கள், கடினமான நோன்புகளையும், விரதங்களையும் மேற்கொள்கிறார்கள். இத்தகைய நோன்பு மனதையும், உடலையும் கட்டுப்படுத்துகின்றது. இதன்மூலம் மனம் தூய்மைபெறவும் வழிகாட்டுகின்றது.

இந்த புனித யாத்திரையைத் தொடங்குமுகமாக நடைபெறும் மண்டல பூஜை சிறப்புற நிகழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசி நிறையவேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன். அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தினர் மேற்கொள்ளும் தீர்த்த யாத்திரை பயனுற நிகழ எனது வாழ்த்துக்கள் உரியன.

**இ. கைலாசநாதன்**
மேலதிகச் செயலாளர் (இந்து விவகாரம்)
கலாசார சமய அலுவல்கள் அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின்
பிரதிப்பாணிப்பாளர்

**சாந்தி நாவுக்கரசன்** அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

அகில இலங்கை ஐயப்ப சேவா சங்கத்தினர் 20 வருடங்களுக்கு மேலாக மண்டல பூஜையை நடாத்தி வருவதுடன்,இலட்ச அர்ச்சனையோடு மகரஜோதி பூஜையையும் நடாத்தி வருவது பெருமைக்கும் பாராட்டுக்கும் உரிய விடயமாகும் இத்துடன் சபரிமலை தீர்த்த யாத்திரையையும் இவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். இச் சங்கத்தினர் சிறந்த ஆன்மீக சமூக சேவை செய்து வருவது குறிப்பிடத்தக்கது. மகர ஜோதி பூஜையில் அருளமுதம் என்னும் தத்துவப் பாமாலையினை வெளியிடுவதனை அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். ஐயப்ப சுவாமியின் திருவருளால் மேலும் இவர்களது பணிகள் தொடர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**இங்ஙனம்**
**சாந்தி நாவுக்கரசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருவருட்செல்வர் தேசபந்து

**வி.ரி.வி.தெய்வநாயகம்பிள்ளை**

(அகில இலங்கை சமாதான நீதவான்,
தர்மகர்த்தா)

## அளித்துள்ள ஆசிச்செய்தி

கடந்த 20 ஆண்டுகளாக அகில இலங்கை ஐயப்ப சேவாசங்கம் செய்யும் பணி மகத்தானது. சபரிமலை தீர்த்தயாத்திரைக் குழுவினர் மண்டலபூஜையை தொடர்ந்து வெகு சிறப்பாக நடத்திவருகின்றனர். அனைவரின் உடல் உள்ளம் இரண்டையும் பரிசுத்தமாக்கி ஆசைகளைக்களைந்து மெய்ஞானம் பெறத் தூண்டுகிறது மண்டலபூஜை.

மெய், வாய், கண்,மூக்கு, செவி என்ற ஐம்புலன்களும் பொறிவழி செல்லாது இறை நாமத்தையே இடைவிடாது உள்ளத்து இருத்தி சாந்தி, சமாதானம்,சுபீட்சம் நிலவச்செய்யும் ஐயப்ப பூஜையின் மகத்துவத்தை உலகெங்கும் அறியச்செய்து கொள்வதற்காக இவ்வாண்டு, அருளமுதம் என்னும் பெயரில் ஐயப்பன் மலர் மலர்ந்துள்ளது. இம்மலரின் நறுமணம் திக்கெட்டும் பரவும் என்பதில் சந்தேகமில்லை.

இம்மலரை மலர்விக்கும் ஐயப்ப சேவாசங்கத்திற்கு நமது ஜிந்துப்பிட்டி ஸ்ரீ வள்ளி தெய்வானை சமேத சிவசுப்பிரமணிய பெருமான் திருவருள் புரிவாராக. நமது முருக சந்நிதியில் ஐயப்பன் மெய்யடியார்கள் தினமும் கூடி ஐயப்பனோசை எழுப்பிவருவது மேலும் புனிதத்தை வளர்த்து வருகின்றது. இடைவிடாது விடாமுயற்சியுடன் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் பெருந்தொகையாக ஐயப்ப சுவாமி மண்டல பூஜையில் கலந்து கொள்ளும் சிறப்பைக் காண்பதே கண்கொள்ளாக் காட்சி. ஐயப்ப சேவா சங்கத்தின் பணி தொடரட்டும். மேலும் ஐயப்பன் அடியார் கூட்டம் பெருகட்டும் என்றும், நமது அன்பும், ஆசியும், உதவியும் நல்க முருகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனுக்குடன் பலன்தரும் 'தர்ம சாஸ்தா'

'குரு சாமி' எம்.என்.நம்பியார்

1942ஆம் வருடம் ஆலப்புழையில் மதுரை பால விநோத சங்கீத சபையினர் 'ஸ்ரீ ஐயப்பன் நாடகம்' நடத்திக் கொண்டிருந்த சமயம், அந்த நாடகம் முடிந்ததும் நாடகக் கம்பெனியில் இருந்த இளைஞர்களும், பெரியவர்களுமாக நாங்கள் சபரிமலைக்கு யாத்திரை புறப்பட்டோம்.

சபரிகிரிக்குச் செல்ல அப்பொழுதெல்லாம்இரண்டு வழிகள். ஒன்று பெரிய வழி, இன்னொன்று சின்ன வழி. சின்னவழி என்பது வண்டிப் பெரியாறு,மவுண்ட் எஸ்டேட் வழியாகச் செல்வது. பெரிய வழி, கல்லும், முள்ளும் நிறைந்த கரடு முரடான, நடந்து செல்வதற்கு மிகவும் சிரமமான பாதை. அரையக்குடி வழியாகச் செல்வது; காட்டு மிருகங்கள் நடமாடும் பகுதி.

இந்த வழியில் மக்கள் நடமாட்டம் மிகவும் குறைவாகவே இருந்தது. மக்கள் அதிகமாகக் குடியேறியிருக்கவில்லை. மக்களில்லாததால் காட்டு மிருகங்களும் தன்னிச்சையாக வந்து போய்க் கொண்டிருக்கும். மனிதர்கள் இருக்கும் இடத்தை விட்டுத் தொலைதூரம் சென்றுவிடும் இயல்பு மிருகங்களுக்கு என்றும் உண்டு.

காட்டு மிருகங்களின் நடமாட்டத்தால் அந்த வழியில் வாழ்ந்த மக்களும் ஜாக்கிரதையாகவே இருந்தனர்.

செல்லும் வழிகளில் அங்கங்கே குடிசைகள் இருக்கும். அவற்றுக்கு அருகே உள்ள மரங்களின் மேல் குடிசைகள் கட்டியிருப்பதை நாங்கள் அப்போது கண்டு வியந்தோம். யானையோ, மற்ற காட்டு விலங்குகளோ, வந்தால் அவசர அவசரமாக மரத்தின் மேல் ஏறி, மிருகங்கள் திரும்பிப் போகும்வரை, அந்தக் குடிசைகளில்தான் தங்குவார்கள்.

எங்களுடைய சபரி யாத்திரையில் முதல் நாள் ஆலப்புழையிலிருந்து கோட்டயம் புறப்பட்டோம். கோட்டயம் அடைந்ததும் காயல். எனவே, பஸ் அதற்கு மேல் செல்ல இயலாது. காயலைக் கடக்கப்படகுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணம். காயலலைக் கடந்ததும் அக்கரையிலிருந்து மீண்டும் பஸ்ஸில் சென்று எரிமேலி அடைந்தோம். இன்றிருப்பது போல, நாங்கள் சென்ற சமயம் பாலம் எதுவும் இருக்கவில்லை. எனவே, யாத்ரீகர்கள் பஸ்ஸிலும், படகிலும் மீண்டும் பஸ்ஸிலும் சென்றுதான் எரிமேலியை அடைந்தனர்.

இரண்டாவது நாள் அழுதா மலையில் முகாமிட்டோம். மூன்றாவது நாள் பம்பா நதிக்கரையில் முகாமம். எரிமேலிக்கு அடுத்து, கரிமலை. இது மிகவும் ஏற்றமானது. நடந்து செல்வதற்குக் கடினமாக இருக்கும். கரிமலை ஏற்றம்தாண்டி, கரிமலை உச்சியை அடைவதற்குள் மூச்சு இரைக்கும். பின்னர் கரிமலை இறக்கம். வேகமாக இறங்கி வந்து, சிறியானை வட்டம், பெரியானை வட்டம் இவற்றைப் பார்த்தபடியே பம்பை நதிக்கரை வந்து சேருவோம்.

இந்த மலையின்மீது ஏறும்போது சொற்ப உணவு; எளிய கஞ்சி தான். பம்பைக்கரை அடைந்ததும் கடுமையான வழிநடை முடிந்தது என்று விருந்து வைத்து ஓரளவு நல்ல சாப்பாடு உண்பது வழக்கம். இன்றும்பம்பைக் கரையில் யாத்ரிகர்கள் விருந்துண்பர்.

அப்பொழுது மூன்று லட்சம் பேர் அங்கே குழுமியிருந்தனர். எங்கள்குழுவில் 4, 5 பேர் காணாமற் போய்விட்டார்கள். அவர்களை மீண்டும் கண்டு பிடிப்பதற்குள் மிகவும் சிரமப்பட்டு விட்டோம். அப்படி ஒரு பிரும்மாண்டமான கூட்டம். அந்த மாதிரி கூட்டத்தை நான் முன்பு கண்டதே கிடையாது. சாமியே சரணம்! சாமியா சரணம்! என்ற கோஷம் எந்தத்திக்கிலும்அலைபாய்ந்து கொண்டிருந்தது.

நாங்கள் தங்கியிருந்த இடத்திற்குச் சற்று தூரத்தில் ஒரு பாம்பு, ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் படம் ஒன்றுக்குப் பக்கத்தில் படம் எடுத்து நின்றதைக் கண்டோம். சிறிது விநாடி அதையே கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தேன்.

அப்போது என் கால்மேல் ஏதோ ஊர்வது போல ஓர் உணர்வு; குனிந்து பார்த்தால், சிறு பாம்பு ஒன்று என் காலில் ஊர்ந்து கொண்டிருந்ததைப் பார்த்துத் திடுக்கிட்டேன்; காலை உதறினேன்; அந்தச் சிறு பாம்பு எட்ட விழுந்தது. அருகில் இருந்தவர்கள் மெல்ல அதை எடுத்து வீசினார்கள். இன்னும் அந்த நினைவு மனதிலிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பம்பா நதியில் இன்னொரு விசேஷம். மெழுகுவர்த்தியையோ, அகல் விளக்கையோ ஏற்றி, ஸ்ரீ ஐயப்ப ஸ்வாமியை மனமுருக எண்ணியபடியே, பயபக்தியுடன் பம்பையில் மிதக்க விடுவார்கள். ஏற்றிய விளக்குகள் ஆயிரக்கணக்கில், மெல்ல மெல்லக் கவிழாமல் வெகுதூரம் வரை சென்று மறைவதைப் பார்க்கும் போது மனதில் விவரிக்க முடியாத ஆனந்தம் ஏற்பட்டது.

சபரிமலையில், ஸ்ரீ ஐயப்ப சுவாமி தரிசனத்துக்காகக் கூடிய 10 லட்சம் பக்தர்களும் உணர்ச்சி வசப்பட்டு, சரணம்ஐயப்பா ! சரணம் ஐயப்பா ! என்று கூவுவார்கள். அப்போது சுற்றுப்புறம் உள்ள மலைப்பகுதி எல்லாம், லேசாக அதிருவதுபோல இருக்கும். அப்படி ஒரு பக்தி வெள்ளம் !

பக்தர்களின் கூட்டமும், ஐயப்ப கோஷமும் சேர்ந்து உடலைப் புல்லரிக்கச் செய்யும். இதுவே ஒரு புதுமையான அனுபவம்; மறக்க முடியாத அனுபவம். சொற்களால் விவரிக்க இயலாத அனுபவம்.

சபரிமலை யாத்திரையின்போது எங்களுக்கெல்லாம் ராஜண்ணா என்பவர் எல்லா வசதிகளும் செய்து தருவார். 85 வயதுவரை உயிருடன் இருந்து அண்மையில் தான் காலமானார். 85 வயதிலும் டென்னிஸ் விளையாடும் அளவுக்கு அவர் திடமாக இருந்தார். கடைசி வரையில் எந்த நோயும் அணுகவே இல்லை.

பல வருடங்களுக்கு முன்பு, ஸ்ரீ ஐயப்ப சுவாமியிடம் அவருக்கு அவ்வளவாக நம்பிக்கை இல்லை. எங்களிடம் இருந்த அன்பினால், சபரிமலைப்பிரயாணத்தில் வேண்டிய செளகரியங்களை எங்களுக்குச் செய்து வந்தார்.

ஒரு சமயம் அவர் வயிற்று வலியால் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார். மூஸ் என்ற வைத்தியரிடம் அடிக்கடி மருந்து வாங்கிச்சாப்பிடுவார். அப்படியும் அவருடைய வயிற்றுவலி நீங்கியபாடில்லை.

ஒருநாள் அவருக்குக் கடுமையான வயிற்றுவலி. மருந்து வாங்கி வருவதற்காக, தம்முடைய பணியாளை வைத்தியரிடம் அனுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஆள் ஸ்ரீ ஐயப்பனுடைய தீவிர பக்தர். அந்தப் பணியாள் சென்றிருந்த சமயத்தில் வைத்தியர் வீட்டில் இல்லை. வெறுங் கையோடு மருந்தில்லாமல் எப்படிச் செல்வது ? எஜமான் வயிற்று வலியால் வேதனைப்படுவாரே என்று எண்ணிய அவன், தன்னிடமிருந்த ஸ்ரீஐயப்பன் விபூதியையே பொட்டலமாகக் கட்டி, வைத்தியர் தந்த மருந்து என்று சொல்லி ராஜண்ணாவிடம் தந்தான். வைதியர் வயிற்று வலிக்குத் தந்த புதிய சூர்ணம் என்று எண்ணி, அதை ராஜண்ணாவும் சாப்பிட்டார். பல நாள்களாக அவரை வாட்டி வதைத்து வந்த வயிற்றுவலி இருந்த இடம் தெரியாமல் மறைந்தோடி விட்டது.

அடுத்த நாள் வைத்தியரை ராஜண்ணா சந்தித்தார். "இவ்வளவு நாளாக வயிற்றுவலியால் என்னைத் துடிக்க வைத்து விட்டீர்களே ! நேற்று தாங்கள்தந்த மருந்தை முன்பே தந்திருக்கக் கூடாதா ? நீங்கள்தந்த புதிய மருந்தைச்சாப்பிட்டதும் வயிற்றுவலி முற்றிலும் நீங்கிவிட்டது" என்றார்.

வைத்தியருக்கு ஆச்சரியமாக இருந்தது. "நான் எங்கே தங்களுக்கு நேற்று மருந்து தந்தேன் ? நேற்று நான் ஊரிலேயே இல்லையே !" என்றார் வைத்தியர்.

"இல்லையே ! நீங்கள் தந்ததாகத்தானே என் பணியாள் மருந்தைக் கொண்டு வந்து தந்தான்" என்று சொல்லிப் பணியாளை அழைத்து, நடந்ததைச் சொல்லும்படி பணித்தார்.

பணியாளும் பயந்தபடியே, "நேற்று நான் போயிருந்தபோது வைத்தியர் இல்லை. அதனால் உங்களுடைய வயிற்று வலி நீங்க வேண்டும் என்ற எண்ணத்தால், ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் விபூதியை மருந்து என்று தங்களிடம் தந்தேன்" என்று உண்மையைச் சொன்னான்.

வைத்தியருக்கும் ராஜண்ணாவுக்கும் ஒரே வியப்பு. பிரபல வைத்தியர் தந்த பல மருந்துகளாலும் தீராத வயிற்றுவலி, ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் விபூதியால் நொடியில் மறைந்து விட்டதை அனுபவத்தில் உணர்ந்து கொண்ட ராஜண்ணா அன்றிலிருந்து ஸ்ரீ ஐயப்ப சுவாமியிடம் நம்பிக்கை கொண்டார். சபரிமலைக்கும் சென்று வந்தார். இதை ஸ்ரீ ஐயப்ப சுவாமி செய்த அற்புதமே எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களுக்குச் செல்கிறோம்; தெய்வங்களைத்தரிசிக்கிறோம்; வழிபடுகிறோம்; பிரார்த்தனை செய்கிறோம்.

தெய்வம் அற்புதங்களைச் செய்யும் என்று நாம் எதிர்பார்க்கக் கூடாது; ஆனால் அற்புதங்கள் நடந்தால் அதைப்பற்றி ஆச்சரியப்படவும் கூடாது.

என் வீட்டுக்குப் பக்கத்து வீட்டுக்காரர் ஐயப்ப பக்தர்; சில தடவை சபரிமலைக்குச் சென்றும் வந்திருக்கிறார்.

ஒரு நாள் என்னைப் பார்க்க வந்தார். “இந்த முறை சபரிமலைக்கு உங்களுடன் வர விரும்புகிறேன்” என்றார் அவர்.

“என்ன விசேஷம் ?” என்று கேட்டேன்.

“உங்களுடன் வந்தால் பக்தி சிரத்தை, நியம நிஷ்டை அதிகமாக இருக்கும். ஸ்ரீ ஐயப்ப சுவாமி சீக்கிரமாகவே என் வேதனையைத் தீர்ப்பார் என்று நம்புகிறேன். என்றார் அவர்.

“உங்களுக்கு என்ன கஷ்டம் ?” என்று விசாரித்தேன்.

அவருடைய வீட்டுப் பிரச்சனையைச் சொன்னார். அவருடைய சம்சாரத்துக்குச் சற்று சித்தக் கோளாறு; மனப்பிரமை. பைத்தியம் என்று சொல்ல முடியாது. நன்றாகவேதான் இருப்பார். ஆனால் ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு மாதிரி நடந்து கொள்வார். எண்ணங்களில் தொடர்பு இராது; செய்யும் காரியங்களில் சம்பந்தா சம்பந்தமில்லாமல் இருக்கும். சமையலுக்குக் காய்கறி வாங்கி வரச் சொல்வார். நண்பர் கடைக்குச் சென்று, பல காய்கறிகள் வாங்கி வருவார். பகலில் சாப்பாட்டு வேளையில் ஒன்றும் செய்திருக்க மாட்டார் அவர்மனைவி. “நீங்கள் காய்கறி வாங்கித்தரவில்லை. நான் என்ன செய்வது ?” என்பார். ஃபிரிஜ்ஜைத் திறந்து பார்த்தால், காய்கறிகள்அதில் அப்படியே இருக்கும். இப்படி ஒரு மறதி; சித்தப் பேதலிப்பு.

எங்கள் பயணத்தின்போது சபரிமலைக்கு அவரும் கூடவே வந்து கலந்து கொண்டார். ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் அருளால், விரைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருடைய மனைவியின் சித்தப்பிரமை நீங்கிவிட்டது. ஆண் குழந்தை பிறந்தால் மணிகண்டன் என்று பெயர் வைப்பதாகவும் என்னிடம் சொன்னார். அவருக்குக் குழந்தையும் பிறந்தது; ஆனால் பெண் குழந்தை. என் பக்கத்து வீட்டுக்காரர் வாழ்க்கையில் ஸ்ரீ ஐயப்ப சுவாமி நடத்திய அற்புதம் இது.

சில ஆண்டுகளுக்கு முன்பு நான் கைலாசம்-மானசரோவரம் யாத்திரை சென்றிருந்தேன். பனி மலைகளுக்கிடையே, பயங்கரமான பள்ளத் தாக்குகளின் சரிவிலே அமைந்த பாதைகள் வளைந்து வளைந்து மேலே மேலே செல்லும் தடங்கள்.

ஓரிடத்தில் நான் ஏறிச் சென்ற மட்டக் குதிரையின் கால்கள் உறைபனியில் சிக்கிக் கொண்டன. மிகச் சிரமத்துடன், பனியிலிருந்து கால்களை விடுவித்து என்னைச் சுமந்து மேலே தொடர்ந்து சென்றது அது. இன்னொரு சமயம் முழங்கால் வரை என் கால்கள் பனிப்பாறையில் அழுந்தின. இப்படி வெகு சிரமப்பட்டுப் பிரயாணம் செய்து, கைலாசம்-மானசரோவர் கண்டேன். இப் பிரயாணத்தின் போது எனக்குப் பின்னால் ஐயப்பன் துணையாக வருவது போல ஓர் உணர்வு ஏற்பட்டதையும், அத் துணையையே ஓர் ஆத்ம பலமாக உணர்ந்ததையும் கூட இங்கே சொல்ல விரும்புகிறேன். ஸ்ரீ ஐயப்ப சுவாமியின் அருளால்தான் அந்த அற்புதமான "கைலாச-மானசரோவர' யாத்திரையை என்னால் பூர்த்தி செய்ய முடிந்தது.

ஸ்ரீ ஐயப்ப சுவாமி கண்கண்ட தெய்வம். உடனடியாகக் கஷ்டங்களுக்கு - பிரச்சனைகளுக்கு - நிவாரணம் காட்டும் தெய்வம் என்று மக்கள் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்; ஏராளமாக, லட்சக் கணக்கில் விரதம் இருந்து, சபரிமலை சென்று ஸ்ரீ ஐயப்ப சுவாமியைத் தரிசனம் செய்து, அருளும் பயனும் பெற்று வருகிறார்கள். இது நிதர்சனமாகத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ‘சபரிமலை சாஸ்தா

### இறையருள் இயக்குநர் கே.சங்கர்

ஐயப்ப சுவாமியின்மகிமைகளை விளக்கி, தொடர்ந்து பல ஆண்டுகள் சபரிமலை யாததிரை செய்யும் பாக்கியத்தை அருளி, எனது இதயத்தில் ஞான விளக்கேற்றி வைத்த குருஸ்வாமியான நம்பியார் ஸ்வாமிகளின் திருப்பாதங்களை வணங்கி இக்கட்டுரையை எழுதத் தொடங்குகிறேன்.

எந்தத்திருக் கோயிலுக்குச் சென்று, எந்தத்தெய்வத்தை வணங்க வேண்டும் என்றாலும் நினைத்தவுடனேயே புறப்பட்டு விடலாம். சுவாமி தரிசனம் செய்து விட்டு வரலாம்.

ஆனால் ஐயப்ப சுவாமியை வணங்க வேண்டுமென்றால் ஒரு மண்டல காலம் விரதமிருந்தே தீரவேண்டும் என்று விதியிருக்கிறது. மனித ஆசாபாசங்களை அறவே நீக்கி,பிரம்மச்சரியம் காத்து, அதற்குரிய நியதிகளுடன் செல்ல வேண்டும். இதன் மூலம் பிரம்மச்சாரியாய் பிரம்ம சொரூபியாய் வீற்றிருக்கும் மணிகண்டனான தர்ம சாஸ்தாவை வணங்குதற்கான தகுதியை நமக்கு நாமே ஏற்படுத்திக் கொள்கிறோம். அந்த தரிசனம்பெருமைக்குரிய ஒன்று.

ஐயப்ப விரதத்தின் மற்றொரு தனித்தன்மை அதன் சமத்துவமாகும். குல, இன, மொழி பேதங்களைக் கடந்து அனைவரும் ஒன்றாக அமர்ந்து உண்ணும் சமபந்தி போஜனம்அதில் தான் உண்டு.

நான் இருமுடி கூட்டி சபரிமலை யாத்திரை புறப்படும்போது எனது கார் டிரைவரும் இரு முடி கட்டி வருவார். சபரிமலை யாத்திரைக்காக என்று மாலை அணிகிறோமோ, அன்று முதல் அவரை நான் சாமி என்றுதான் அழைப்பேன். அவரும் என்னை அப்படித்தான்அழைப்பார். இப்படி எல்லாரும் எல்லார்க்கும் சாமிதான். இவ்விதமாக சகல பேதங்களையும் மாற்றி, சமத்துவப்படுத்துவது ஐயப்ப சாமியின்தனி அருளாகும்.

முதன் முதலாக நான் இருமுடி கட்டிச் சென்றிருந்தபோது அந்த நீண்ட நெடும் பயணத்தின் முதல் அனுபவத்தால் பாதங்கள் நோகப் படுத்திருந்தேன். அப்போது அந்தக் குழுவில் இடம் பெற்றிருந்த கோவை தொழிலதிபர் ஸ்ரீ வெங்கடேசலுசாமி அவர்கள் என் அருகே வந்து, “என்ன சாமி கால் வலிக்கிறதா ? ” என்று கேட்டு, பாதங்களை வலி போகப் பிடித்துவிட்டார்.

எங்கள் குருஸ்வாமியான நம்பியார் சாமியின் தலைமையில் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து குழுக்களாக இணைந்து ஒன்று சேர்ந்து மலைக்கதுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வது வழக்கம். குறிப்பாக செட்டி நாடு,தென்காசி, கோவை முதலிய ஊர்கள் இதில் இடம்பெறும். ஓர்ஆண்டு, செட்டி நாட்டுக்குச் சென்று அங்குள்ளவர்கள் அங்கு இரு முடி கட்டிப் புறப்படுவதாக ஏற்பாடு.

அதன்படி அந்த ஆண்டு புறப்பட்டபோதுதான் வழக்கமாக அந்தக் குழுவில வரும் ஒரு சாமி, அந்த ஆண்டு வரவில்லை என்பது தெரிந்தது. காரணம் கேட்டபோது சபரிமலை யாத்திரை வருவதற்கான தகுதி தற்போது தனக்கு இல்லையென்றும், மாறுபட்ட பல சூழல்களால் தான் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் கூறினார். அதனால் அவர் உரிய நேரத்தில் மாலையணிந்து விரதம் மேற்கொள்ளவில்லை என்பதும் எங்களுக்குத் தெரியவந்தது.

இருந்தாலும், வழக்கமாக எங்கள் குழுவில் இடம் பெறும் அவரை விட்டுவிட்டுச் செல்ல எங்களுக்கு மனம் வரவில்லை. ஆகவே எல்லோருமாக கலந்து பேசி அவரை அழைத்துச் செல்வதென்று தீர்மானித்தோம்.

உடனே அவரைப் பார்த்து, "நீங்கள் மாலை போட்டுக் கொண்டு இருமுடி ஏந்திப்புறப்படுங்கள். இதனால் ஏற்படும் பாவத்தை நாங்கள் எல்லாரும் பங்கு போட்டு ஏற்றுக் கொள்கிறோம்" என்று குருஸ்சாமி சொல்ல அதன்படி அவரும் புறப்பட்டார்.

நாங்கள்அனைவருமே அப்போது கார்களில்தான் பயணம் செய்வது வழக்கம். அங்கிருந்து புறப்பட்டு எங்கள் கார்கள் சென்று கொண்டிருந்தபோது திடீரென்று ஒரு விபத்து. என்ன நடந்ததென்று யாருக்கும் புரியவில்லை. அத்தனை கார்களும் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. நாங்கள் தடுமாறினோம். மேலே வைக்கப்பட்டிருந்த இருமுடிகள் உருண்டு விழுந்தன.

எல்லாரும் கலங்கிப் போனோம். அப்போது எங்கள் குருஸ்சாமி "அந்த அன்பருடைய பாபத்தை எல்லாரும் பங்கு போட்டுக் கொள்கிறோம் என்று சொன்னோமல்லவா ? அதனால்தான் அதன் விளைவை சுவாமி எல்லாருக்கும் பகிர்ந்து தந்துவிட்டால்" என்று குறிப்பிட்டார்.

காரிலிருந்து இறங்கி வந்து பார்த்தபோது, என்ன ஆச்சரியம் ! உருண்ட இருமுடிகள்காரிலேயே அங்கும் இங்குமாக விழுந்து கிடந்ததே தவிர ஒன்று கூட பூமியில் விழவில்லை.

சிறு சோதனையைத்தந்துவிட்டு சாமி எங்களை மன்னித்து ஏற்றுக்கொண்டார்என்பதை அதன்மூலம் நாங்கள் புரிந்து கொண்டு திருப்தியோடு மீண்டும் பயணத்தைத்தொடங்கினோம். அதற்குப் பிறகு எந்தத்தடையுமில்லை. மன நிறைவோடு தரிசனம் செய்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ஐயப்பனை நான் குழந்தையாகக் காண்கிறேன்

'பத்மஸ்ரீ' சிவாஜி கணேசன்

கார்த்திகை பிறந்ததும் மாலை அணிந்து கறுப்புடை உடுத்து, காலையும் மாலையும் குளித்துப் பயபக்தியுடன் நாளும் ஸ்ரீ ஐயப்பனைத் தொழுது, லட்சக்கணக்கான பக்தர்கள் சபரிமலைக்கு யாத்திரை செல்கிறார்கள்.

நானும் பல வருடங்களாக விரதம் இருந்து ஸ்ரீ ஐயப்பன் வீற்றிருக்கும் சபரிமலைக்கு யாத்திரை சென்று வந்திருக்கிறேன்.

எனக்குப் பிரத்தியேகமான அனுபவம் ஒன்றும் இல்லை. அப்படி இருப்பதாகக் கற்பனையில் ஏதோ ஒப்புக்குச் சொல்வது உண்மைக்கு மாறுபட்டதாகும். அப்படி ஏதும் என் சொந்த அனுபவங்கள் என்று குறிப்பிட்டு எதுவும் சொல்வதற்கில்லை.

வருடத்தில் இரண்டு மாதம் விரதம் இருந்து ஸ்ரீ ஐயப்பனைக் காணச் சென்றால், எனக்கு மன நிம்மதியும், நிறைவும் ஏற்படுகின்றன. அதனால் தான் நேரிடும் சுக துக்கங்களை மறந்து இரண்டு மாதம் விரதம் இருந்து, சபரிமலைக்குச் சென்று, தரிசனம் செய்து வருகிறோம்.

பாரதியார் எப்படிக் கண்ணனைக் கண்டாரோ, தோழனாய், அன்னையாய், தந்தையாய், சேவகனாய், அரசனாக, ஆசானாக, சீடனாக, விளையாட்டுப் பிள்ளையாக, காதலனாக, ஆண்டானாக, குல தெய்வமாகப் பாடியிருக்கிறாரோ, அப்படியே நானும் ஸ்ரீ ஐயப்பனைக் காண்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை ஐயப்பன் ஒரு கைக்குழந்தை. அந்தக் குழந்தையை, ஆண்டுதோறும் தரிசித்து வருவதனால் நான் எடுத்த பிறவியின் பயனை அடைந்த உணர்வு ஏற்படுகிறது. பிறவியின் லட்சியம் பூர்த்தி பெற்றதாக ஓர் உணர்வு தோன்றுகிறது.

ஸ்ரீ ஐயப்ப தரிசனம். ஸ்ரீ சபரிமலை செல்வதுபற்றி இது என் சொந்தக் கருத்து.

ஸ்ரீ சரணம் ஐயப்பா ! ஸ்வாமியே சரணம் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு திருமுருக கிருபானந்தவாரியாரின்

# பொன்மொழிகள்

1. எப்போதும் எந்த இடத்திலும் பிறர் மனம் நோகப் பேசக் கூடாது.

2. பிறருடைய குற்றங்களை ஆராய்தல் கூடாது. நினைக்கவும் கூடாது. பேசவும் கூடாது. பிறருடைய குற்றங்களைப் பூதக் கண்ணாடி போட்டு ஆராய்ந்து கண்ட கண்ட இடத்திலெல்லாம்அதே வேலையாகப் பேசுகின்றவர் பலர் உள்ளனர். இந்தப் பழக்கம் இவர்களுடைய வாழ்வைப் பாழ்படுத்தி விடும். பிறருடைய குணநலன்களை மட்டும் சமயம் வரும் போதெல்லாம் கூறுதல் வேண்டும். இது மனித வாழ்வை உயர்த்தும்.

3. நமக்கு எல்லாம் தெரிந்துள்ளது. மற்றவர்க்கு என்ன தெரியும் ? என்று நினைத்துக் கொண்டு செருக்குற்றிருக்கக்கூடாது. கற்றது கைம்மண்ணளவு, கல்லாதது உலகளவு எல்லாம் தெரிந்தவர்களும் ஏதுந் தெரியாதவர்களும், உலகில் இல்லை. ஆதலால் அடக்கமாகவும் பணிவாகவும் இருத்தல் வேண்டும்.

4. கடன்பட்டு ஆடம்பரமாகச் செலவழிக்க கூடாது. கடன் படுவது மிகவும் துன்பத்தைத் தரும், கூடுமான வரை சிக்கனமாகவும் எளிமையாகவும்வாழ்ந்து வருதல் வேண்டும். கடன்பட்டு பாலன்னம் உண்பதைப் பார்க்கிலும், கடன்படாமல் உப்பில்லாக் கஞ்சி உண்பது நல்லது.

5. மாசிலா மனமே ஈசன் கோயில்.

6. பயிருக்கு முள் வேலி, பணத்துக்கு தருமம் வேலி.

7. பாலுந்தேனும் உடலுக்குறுதி; வேலும் மயிலும் உயிருக்குறுதி.

8. எது சாப்பிட்டடாலும் ஜீரணம் ஆகிவிடும். வைரம் சாப்பிட்டாலும் ஜீரணம் ஆகாது. அதைப்போல எந்தப் பாவம் செய்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கிக் கொள்ளலாம். நன்றி மறந்த பாவத்தை போக்க முடியாது.

9. விரதம் என்பது எது தெரியுமா ? பிறர் சொல்லும் கொடூரமான பேச்சுக்களைப் பொறுப்பதும் எந்த உயிர்களையும் கொல்லாமல் இருப்பதும் தான் விரதம்.

10. தாய் தந்தையர்கள் பழக்கந்தான் பிள்ளைகட்கும் வரும்; ஆகவே குழந்தைகட்கு நல்ல பழக்கங்கள் உண்டாக்கத் தாய் தந்தையர் ஒழுங்காக இருக்க வேண்டும்.

11. பிரம்மனிடம் செய்த பாவம் விஷ்ணுவிடமும், விஷ்ணுவிடம் செய்த பாவம் சிவனிடமும், சிவனிடம் செய்த பாவம் குருவினிடத்திலும் அழிந்து விடும். குருவிடம் செய்த பாவம் அழியாது நிற்கும்.

12. யானையைப் போல குளிப்பாயாக; தேனீயைப் போல் உழைப்பாயாக.

13. இரவில் கிழக்கில் தலை வைத்துப் படுத்தல் நல்லது. வடக்கில் தலை வைத்துப் படுத்தல் எப்போதும் கூடாது.

14. கலங்கிய தண்ணீரில் சூரிய விம்பம் தெரியாது. அது போல் தெளிவில்லாத உள்ளத்தில் கடவுள் தெரியமாட்டார்.

15. தபால் பெட்டியில் போட்ட கடிதம் தலைமை நிலையத்திற்குப் போகும். அதுபோல ஏழைகளுக்குச் செய்யும் தருமம் இறைவனுக்குச் சேரும்.

16. செல்வம் இருக்கிறது என்று திமிரோடு பேசாதே. செல்வம் அழிவதற்கு உன் மண்டைக் கர்வம் ஒன்று போதும்.

17. வாழ்க்கையில் ஒரு லட்சியம் வேண்டும். லட்சியம்இல்லாத மனிதன் மிருகத்திற்கு சமானம்.

18. எழுந்தவுடன் "இறைவா நான் நல்வழியில் நிற்க அருள் செய்!" என்று எண்ணவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடும் தெய்வம்
ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி
காமகோடி பீடாதீச்வர
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சாரிய சுவாமிகள்
அருளிய

# சாஸ்தா ஐயனார் ஐயப்பன்

பரமாத்மா ஒன்றே சிவனாகவும், நாராயணனாகவும் ரூபம் தரிக்கிறது. சிவனாக இருக்கும்போது ஞானமூர்த்தியாக இருக்கிறது. நாராயணனாக இருக்கும் போது லோக சம்ரக்ஷணம் செய்கிறது. இப்படிச் சொல்வதால் சிவனும் விஷ்ணுவும் முற்றிலும் வேறு வேறு என்றோ, அல்லது தொழிலை ஒட்டிக்கொஞ்சம் வேறுபட்டாற் போலிருக்கிற நிலையில் சிவனுக்குப் பரிபாலன சக்தி இல்லை என்றோ, விஷ்ணுவுக்கு ஞானசக்தி இல்லை என்றோ அர்த்தமில்லை. அவர்கள் ஒவ்வொருவரும் முக்கியமாகச் செய்கிற அநுக்கிரகத்தையே குறிப்பிட்டேன்.

ஆல விருக்ஷத்தின் கீழோ, பனிமலை உச்சி மீதோ சிவபெருமான் வீற்றிருக்கிறார். உடலெல்லாம் விபூதிப் பூச்சு, புலித்தோலை இடுப்பில் கட்டி, யானைத் தோலைப் போர்த்தியிருக்கிறார். அவரது ஸ்வரூபம், அலங்காரம், வாசஸ்தானம் எதைப் பார்த்தாலும் ஞானிகளுக்கு உரியதாக இருக்கிறது. அவர் கரத்திலேயே ஞானமுத்திரை தாங்கியிருக்கிறார். ஆத்மதியானத்தில் ஆழ்ந்திருக்கிற அவரது சந்நிதி ஒரே சாந்தமாக இருக்கிறது. பரம சத்தியத்தைப்போதிக்கிற பரமகுரு அவரே. அந்தப் பரம சத்தியமும் அவரன்றி வேறில்லை. இந்த உபதேசம் ஞானியின் தொழில்.

லோக ரக்ஷணம் என்பது ராஜாவின் கடமை. அதனால் தான் நாராயணனை ஸ்ரீ வைகுண்டத்தில் சக்கரவர்த்தி போல் தியானிக்கிறோம். பீதாம்பரம், கௌஸ்துபம், வனமாலை, கிரீடகுண்டலங்கள் தரித்து, சாக்ஷாத் மகாலக்ஷ்மியை மார்பிலே வைத்துக்கொண்டு ராஜாதிராஜனாக இருக்கிறார் ஸ்ரீ மகா விஷ்ணு.

ஆசார சீலரான ரிஷிகளைப் போல் ஈசுவரனுக்கு எப்போது பார்த்தாலும் ஸ்நானம்செய்வதில் பிரியம். அதனால்தான் வடதேசத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசுவரன் கோயில்களில் எல்லாம் சிவலிங்கத்தின் மேல் எப்போது பார்த்தாலும் ஜலம் கொட்டிக் கொண்டிருக்கும்படி "தாரா பாத்திர"த்தைக் கட்டி வைத்திருக்கிறார்கள். சக்கரவர்த்தி போன்ற மகா விஷ்ணுவுக்கோ அலங்காரத்தில் பிரியம்அதிகம். அவருக்குப் பட்டும் பொன்னும்புனைந்து மகிழ்கிறோம்.

அலங்கார ப்ரியோ விஷ்ணு :
அபிஷேக ப்ரியோ சிவ :
என்றே சொல்வார்கள்.

ஈசுவரனின் அழகு மனத்தை அடங்கச் செய்கிற சாந்த ஸ்வபாவம் வாய்ந்தது. ஸ்ரீமந் நாராயணனின் செளந்தரியமோ மனத்தை மோகிக்கச் செய்து ஆனந்தக் கூத்தாடச் செய்வது. விஷ்ணுவின் திவ்விய ரூபத்திலிருந்து வைத்த கண்ணை வாங்க முடியாமல் எவரும் சொக்கிக் கிடக்க வேண்டியதாகிறது. ஸ்ரீராமனாகவும், கிருஷ்ண பரமாத்மாவாகவும் அவதரித்த போதும் இந்த ஜகன் மோகன செளந்தரியம்அவரை விட்டு நீங்காமலே இருந்திருக்கிறது. இப்படிப்பட்டவர் மோஹினி என்ற ஓர் உருவம் கொள்ளும் போது எத்தனை அழகாக இருந்து எல்லோர் உள்ளங்களையும் மோஹிக்க வைத்துக் கொள்ளை கொண்டிருப்பார் ? பரம ஞானியாக, தபோமயமாக ஜ்வலித்துக் கொண்டிருந்த பரமேசுவரனின் மனத்தைக் கூட மகா விஷ்ணுவின் மோகினி ரூபம் மயக்கிவிட்டது என்று புராணங்கள் சொல்கின்றன.

மோகினியாக வந்த நாராயணன் காருண்ய லாவண்யமும், பரமேஸ்வரனின்சாந்த ஞானமும் ஒன்று சேர்ந்தவுடன் ஒரு மகாதேஜஸ் (ஒரு பெரும் ஜோதி) பிறந்தது. இந்தத் தேஜஸே ஐயப்பனாக உருக்கொண்டது.

ஹரிஹர புத்திரன் என்றும், சாஸ்தா என்றும், ஐயனார் என்றும் சொல்வது இந்த ஐயப்பனைத்தான்.

ஐயன் என்பது 'ஆர்ய' என்பதன் திரிபு. 'ஆர்ய' என்றால் 'மதிப்புக்குரிய" என்று பொருள். சாக்ஷாத் பரமேசுவரனுக்கும், நாராயணமூர்த்திக்கும் ஜனித்த குழந்தையை விட மதிப்புக்குகந்தவர் எவருண்டு? ஞானமும் தபசும்கலந்த சிவனின் பிரம்ம அம்சம், கிருபையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சௌந்தரியமும் கலந்த விஷ்ணுவின் க்ஷத்ர அம்சம் இரண்டுமே நாம் உய்வு பெற அத்தியாவசியமாகும். ஹரிஹர புத்ரனாகிய ஐயப்பனிடம் இவையெல்லாமே ஒன்று சேர்ந்திருப்பதாகக் கொள்ளலாம். இதனால்தான் போலிருக்கிறது, சிவபெருமானின் மற்ற இருபாலர்களைப் பிள்ளையார் என்றும், குமரன் என்றும் குழந்தைகளைக் குறிக்கிற சொல்லால் குறிப்பிட்டாலும், அவரது மூன்றாவது புத்திரனான சாஸ்தாவை மட்டும் மதிப்புக்குரியவராக-ஆர்யராக-ஐயனாராகக் குறிப்பிடுகிறோம். 'ஆர்ய' என்பது தான் 'அய்யர்' என்றாயிற்று. முதலி-முதலியார், செட்டி-செட்டியார். மாதிரி அய்யனுக்கு மரியாதைப்பதம் அய்யனார். இதிலே ஒரு வேடிக்கை பொதுவாகத்தமிழ் நாட்டில் அய்யர் (குருக்கள்) பூஜிக்காத கிராமக்கோயில்களில் உள்ள ஸ்வாமிதான் அய்யராக-அய்யனாராக இருக்கிறார்! கொஞ்சம் கூட இப்போது பேசப்படுகிற இன வித்யாசங்கள் முன்னே இல்லை என்பதற்கு இதுவே ஒரு அடையாளம்.

சபரிமலையில் ஓரிடத்தை 'ஆரியங்காவு' என்று ஆரியனுடைய காடாகவே சொல்கிறார்கள். தேசத்தில் எத்தனையோ ஸ்வாமிகளுக்குக் கோயில் இருந்தாலும் சாஸ்தாவைத்தவிர எவருக்கும் அய்யர், ஆரியன் என்ற பெயர்கள் இல்லை.

சாஸ்தா என்பதே தமிழில் "சாத்தன்". தமிழ் நாட்டில்இருக்கப்பட்ட அநேக சாத்தனூர்களில் முக்கியமான தெய்வம் சாஸ்தாவான ஐயப்பன்தான்.

தமிழ்நாட்டில் கிராமத்துக்குக்கிராமம் ஐயனார்கோயில் உண்டு. கேரளத்தில் கிராம தேவதையாக இல்லாமல் வேறு விதத்தில் ஐயப்பன் வழிபாடு வெகுவாகப்பரவி வளர்ந்திருக்கிறது.

அவர்நம்மைக்காவல்புரிகிற தெய்வம். காற்று, கருப்பு முதலான பலவித தீய சக்திகளிலிருந்து நம்மைக் காப்பாற்றுகிறவர். இதெல்லாவற்றுக்கும் மேலாக நாராயணனிடமிருந்து நம் வாழ்க்கையையே பரிபாலிக்கும்சக்தியைப் பெற்றிருக்கிறார். ஈசுவரனிடமிருந்து நமக்கு விமோசனம்தருகிற ஞானத்தை அளிக்கும் சக்தியும் பெற்றிருக்கிறார்.

சுதந்திர இந்தியாவில் ஐயப்பன் ரொம்ப ரொம்ப பக்தியாக பெற்று வருகிறார். சுதந்திர சாஸனம்அளித்திருக்கிற பேச்சுச் சுதந்திரத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்திக் கொண்டு ஒரு பக்கத்தில் நாத்திகப்பிரசாரம் தடபுடலாக நடக்கிறபோதே, மறுபக்கத்தில் அது எடுபடாத அளவுக்கு ஐயப்பக்தி நாளுக்கு நாள் அமோகமாக விருத்தியாகிக் கொண்டிருக்கிறது.

கேரளத்தில் எட்டாக்கையில் சபரிமலையில் இருக்கிற ஐயப்பன் கொஞ்சம் கொஞ்சமாகத் தமிழ் நாடு, மற்ற ராஜ்யங்கள் மீதெல்லாம் கூடத் தம் ராஜதானியை விஸ்தரித்துக் கொண்டே வருகிறார்.

இது மிகவும் உற்சாகமளிக்கிற விஷயம். நாஸ்திகப்பிரசார விஷயத்தைத் தடுக்கிற அருமருந்தாக வந்திருக்கிறது ஐயப்ப பக்தி.

அவரது கிருபையை நாடி, அதற்குப்பாத்திரர்களாக வாழ்ந்தோமானால் நாமும், நாடும், உலகமும் சிறப்புற்று விளங்குவது நிச்சயம்.

## சபரிமலை ஐயப்ப ஸ்தோத்ரம்

ஸ்ரீ தக்ஷிணாம்னாய ஸ்ரீ சிருங்கேரி, ஸ்ரீ சாரதா பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு அனந்தஸ்ரீ ஸ்ரீ ஸந்நிதானம். ஸ்ரீ ஸ்ரீ பாரதீதீர்த்த ஸ்வாமிகள் அருளிய ஸ்தோத்திரம்.

ஜகத் ப்ரதிஷ்டா ஹேதுர் யதர்ம ; ச்ருத்யந்தகீர்த்தித;
தஸ்யாபி சாஸ்தா யோ தேவ; தம் ஸதா ஸமுபாச்ரயே

உலகம் நிலைத்து நிற்பதற்கு தர்மம் காரணம் என்று வேதத்தில் கூறப்பட்டிருக்கிறது. அந்த தர்மத்தையும் காப்பாற்றி நிலை நிறுத்துகிறவர் சாஸ்தா. அந்த சாஸ்தாவை எப்பொழுதும் சரணடைகிறேன். (ஐயப்பருக்கு தர்மசாஸ்தா என்றும் பெயர் உண்டு)

ச்ரீ சங்கரார்யையர் ஹி சிவாவதாரை ;
தர்ம ப்ரசாராய ஸமஸ்த காலே
ஸுஸ்தாபிதம் ச்ருங்க மஹீதர வர்யே
பீடம் யதீந்த்ரா; பரிபூஷயந்தி

பரமசிவாவதாரமான ஸ்ரீ சங்கரபகவத்பாதாசார்யார் இவ்வுலகில் எல்லா காலங்களிலும் தர்ம பிரசாரம் தொடர்ந்து நடைபெறுவதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த சிருங்கேரி புண்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ சாரதா பீடத்தை நன்கு ஸ்தாபித்தார். யதிசிரேஷ்டர்கள் இதை அலங்கரித்துக்கொண்டு சாரதா பீடாபதிகளாக விளங்கி வருகின்றனர்.

தேஷ்வேவ கர்மந்திவரேஷு வித்யா
தபோதநேஷு ப்ரதிதானுபாவ
வித்யாஸுதீர்த்தே பிநவோத்யயோகீ
சாஸ்தாரமாலோகயிதும் ப்ரதஸ்தே.

ஞானத்தையும், தவத்தையும் தனமாகக் கொண்ட அந்த சிறந்த பரிவ்வாராஜகர்களுள் உலக பிரஸித்தமான மஹிமையை உடைய ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்தயோகீ இப்பொழுது சபரிமலை சாஸ்தாவை தரிசிப்பதற்கு புறப்பட்டார்.

தர்மஸ்ய கோப்தா யதிபுங்கவோயம்
தர்மஸ்ய சாஸ்தாரமவைக்ஷதேதி
யுக்தம் ததேதத்தயுபயோ ஸ்தயோர் ஹி
ஸம்மேளனம் லோகஹிதாய நூநம்

தர்மத்தைக் காப்பாற்றுகிற இந்த யதிசிரேஷ்டர், தர்மத்திற்கு அதிபதியான சாஸ்தாவை தர்சித்தார் என்பது பொருத்தமானதே. அந்த இருவர்களுடைய ஸங்கமம் நிச்சயமாக உலகிற்கு நன்மையை கொடுக்கும்.

காலேஸ்மின் கலிமல தூஷிதேபி தர்ம ;
ச்ரௌதோயம் ந கலு விலோபமாப தத்ர
ஹேது ; கல்வயமிஹ நூநமேவ நாந்ய ;
சாஸ்தாஸ்தே ஸகல ஜனைக வந்த்யபாத.

கலியின் தோஷங்களால் கெடுக்கப்பட்ட இக்காலத்திலும் அங்கே வைதிகமான தர்மம் நாசமடையவில்லை. இதற்குக் காரணம், கல்லா ஜனங்களாலும் வணங்கத்தக்க சரணங்களை உடைய சாஸ்தா இருக்கிறார்; என்பதுதான் வேறு காரணமொன்றுமில்லை.

ஞானம் ஷடாஸ்ய வர தாத க்ருபைக லப்யம்
மோக்ஷஸ்து தார்க்ஷ்ய வர வாஹ தயைகலப்ய ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான ச மோக்ஷமுபயம் து விநா ச்ரமேண
ப்ராப்யம் ஜனை ; ஹரிஹராதமஜ ஸத்ப்ரஸாதாத்.

ஆறுமுகனின் தந்தையான மஹேஸ்வரனின் கிருபை ஒன்றினால் தான் ஞானத்தைப் பெறமுடியும். கருடவாஹனரான மஹாவிஷ்ணுவின் தயவு ஒன்றினால் தான் மோஷத்தை அடைய முடியும். ஹரிஹரபுத்ரனின் அருளைப் பெற்றுவிட்டால் ஜனங்களால் சிரமமன்னியில் ஞானம், மோக்ஷம் இரண்டையும் பெறமுடியும்.

(ஞானத்தை அடைவதற்கு ஈச்வரனை சரணடைந்து அவர் கிருபையைப் பெறவேண்டும்; பிறகு விஷ்ணுவை சரணடைந்து அவர் கிருபையால் மோஷமடைய வேண்டும். இவ்விருவருடைய கிருபையைப் பெறுவதற்கு சிரமப்படுவதைக் காட்டிலும் ஹரிஹர புத்ரர் ஒருவரை மட்டும் சரணடைந்து அவர் ஒருவருடைய கிருபையை மட்டும் பெற்றுவிட்டால் அதன் மூலம் ஞானம், மோஷம் இரண்டையும் அடைந்துவிடலாம். ஹரனின் புத்திரரானதால் ஞானத்தைக் கொடுக்கும் சக்தியும், ஹரியின் புத்ரரானதால் மோஷத்தைக் கொடுக்கும் சக்தியும் சாஸ்தாவுக்கு உண்டு)

யம நியமாதி ஸமேதை;
யதசித்தைர் யோதிபி ; ஸதா த்யேயம்
சாஸ்தாரம் ஹ்ருதி கலயே ;
தாதாரம் ஸர்வ லோகஸ்ய.

யமம் நியமம் முதலியவைகளோடுகூடி, மனதையடக்கிய யோகிகளால் எப்பொழுதும் த்யானம் செய்யத்தக்கவர் சாஸ்தா, அவரே எல்லா ஜனங்களையும் போஷிப்பவர். இந்த சாஸ்தாவை மனதில் தியானிக்கிறேன்.

சபகிரி நிவாஹ ஸர்வ லோகைக பூஜ்ய;
நதஜன ஸுககாரீ நம்ர ஹ்ருத்தாப ஹாரீ
த்ரிதச திதிஜ ஸேவ்ய; ஸ்வர்க மோக்ஷ ப்ரதாதா
ஹரிஹரஸுத தேவ; ஸந்ததம் நம் தநோது

சபரிமலை வாஸம் செய்யும் ஐயப்பர் எல்லா ஜனங்களாலும் பூஜிக்கத்தக்கவர். தன்னை வணங்கும் எல்லா ஜனங்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பத்தைத் தருபவர். அவர்களுடைய மனதிலுள்ள தாபங்களைப் போக்குபவர். தேவர்களாலும் அசுரர்களாலும் ஸேவிக்கத்தக்கவர். ஸ்வர்க்கத்தையும், மோக்ஷத்தையும் கொடுப்பவர். இத்தகைய ஹரிஹர புத்திரர் எப்பொழுதும் மங்களத்தைச் செய்யட்டும்.

# வஸ்திர விளக்கம்

கருப்பு, நீலம், காவி ஆகிய நிறங்களில் ஐயப்ப பக்தர்கள் உடையணிகிறார்கள்.

1. கருப்பு : சனீஸ்வரன் கரியநிறம் உடையவர், சபரிகிரீசன் சனி தோஷத்தை நிவர்த்தித்து அருள் புரிபவர் எனவே சனிதோஷத்தை நீங்க சாஸ்தாவை துதிக்கும் முகமாக கருப்பு உடை அணிகின்றார்கள்.

2. நீலம் : பகவானை நீலமேக ஸ்யாமள வர்ணன் என்று வர்ணிக்கின்றோம். பகவான் நீலநிறத்தில் உடையணிந்திருக்கிறார்கள். ஆகையால் தங்களைப் பகவானுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டதை வெளிப்படுத்தும் வகையில் நீல ஆடை அணிகிறார்கள்.

3. காவி : பற்றற்ற நிலையில் சன்னியாசிகளைப் போன்று சபரிமலை யாத்திரை மேற்கொள்ள காவி உடை அணிவிக்கிறார்கள்.

### சபரிமலை தீர்த்த யாத்திரைப் பலன்கள்

மானிடர்க்குரிய குறைகளைக் கடவுள் அறிகிறார். மானிட இனத்திற்கு நன்மை புரியும் பொருட்டு அவர் ஒரு மனிதராகிறார். "தர்மம் குறைந்து அதர்மம் தலையெடுக்கும் போதெல்லாம் நான் அவதரிக்கின்றேன். யுகந்தோறும் அறத்தை நிலை நிறுத்தவும், மறத்தை அழிக்கவும், நல்லோர்களைக் காக்கவும்நான் வருகிறேன்" என்றான் கிருஷ்ண பரமாத்மா.

இக்கலியுகத்தில் பன்னிருகையனாகிய திருமுருகவேலும் பூதநாதனாகிய ஐயப்ப மூர்த்தியும் அருட்பெரும் ஜோதியாய் விளங்குகின்ற தெய்வங்கள் என்பது அன்பர்கள் கண்டறிந்த உண்மை. இவ்விரு மூர்த்திகளே "கலியுகவரதன்" என்ற திருநாமத்துடன் மிளிருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரிஹரபுத்திரனாகிய தர்மசாஸ்த்தாவின் பெருமைகளை வர்ணிப்பது இயலாததாகும். பூதநாதனாகிய ஹரிஹரபுத்திரன் பம்பை பாலனாய் அவதரித்தும், ஐயப்பனாய் விளங்கியும், மகிஷியை அழித்தும், அமரர்களை காத்தும், பொன்னம்பலத்திலும் புண்ணிய பூமியாகிய கேரள நாட்டிலும் திருக்கோயில் கொண்டு ஜோதீஸ்வரூபனாய் மகர சங்கராந்தி தினத்தன்று காட்சி கொடுத்து நல்லருள் பொழிகிறார்.

சபரிமலை யாத்திரையின்போது சாதி, சமய வேறுபாடுகள் சரணம் போட்டுப் பறக்கின்றன. ஏழை, பணக்காரர் என்ற பேதம் இல்லை. உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், பாமரர் என்ற எவ்வித வித்தியாசமும் இல்லை. எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை என்ற உணர்வோடும், அன்போடும், பண்போடும் மேற்கொள்கின்ற யாத்திரையே இந்த சபரிமலைப்புனித யாத்திரை.

வாழ்வின் பல சிக்கல்களில் மாட்டிக்கொண்டு தினமும் அல்லற்பட்டு உழன்று வரும் நாம் வருடத்துக்கு ஒரு முறையாவது, சில நாட்களாவது, தூய மனத்துடனும், மெய்யான பக்தியுடனும், நல்ல சிந்தனையுடனும், மனத்தைக் கட்டுப்படுத்தி, விரதங்களிருந்து பூஜைகள், அன்னதானங்கள், தான, தருமங்களை இயன்றவரை சக்திக்கேற்றவாறு செய்து தெய்வப்பணி மேற்கொள்ள ஒரு நல்ல வாய்ப்பினை இந்த சபரிமலை யாத்திரை நமக்குத்தருகிறது. சபரிமலை யாத்திரையின்போது பல ஆறுகளிலும், குளங்களிலும், மலையிலிருந்து உற்பத்தியாகி ஓடிவரும் சுனைகளிலும் நீராடுவதால் பலவித அரிய மூலிகைகளின் குணங்களைப் பெற்ற நீரின் உதவியால் நம் உடலிலுள்ள சில நோய்கள் நீங்கி குணம் பெற வாய்ப்புகள் கிடைக்கிறது. மலைவழியிற் செல்லும்போது வீசும் தென்றற் காற்றும், தெளிந்த நீரோடையாக ஓடி வரும் சுனை நீர் ஏராளமான மூலிகை, சாம்பிராணி, கற்பூரம், பூக்கள், பூமாலைகள்,தேங்காய், படிகளில் ஏற்றிவைக்க வேண்டிய விளக்குகள் இவைதான் பூஜைக்குத் தேவையான பொருட்கள்.

பதினெட்டாம் படியின் நடுவில் பட்டுத்துணியை விரிப்பார்கள். அதற்கு மேலே ஒவ்வொரு படியிலும் ஒரு தேங்காயை வைப்பார்கள். பிறகு படிகளில் பூக்களும், பூ மாலைகளும், வைப்பார்கள், படிகளின் இரண்டு பக்கங்களிலும் விளக்கு ஏற்றி வைப்பார்கள். அதன்பின் முதல் படியிலிருந்து ஒவ்வொரு தேவதைக்கும் பூஜைகள்செய்தவாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசாரிகள்படி ஏறுவார்கள். படிபூஜை முடிந்ததும், ஹரிவராஸனம் என்ற ஐயப்பனுக்கு பிடித்த கீர்த்தனத்தைப் பாடிநடை அடைக்கப்படும்.

இந்த வழிபாடு நடத்துவதற்காக இன்று ஏகப்பட்ட பக்தர்கள் தயாராக இருக்கிறார்கள். அதனால் முன் கூட்டியே இதற்கு பதிவுசெய்து கொள்ள வேண்டியிருக்கிறது.

பக்தர்கள் கூட்டம் அதிகம் இருக்கும் நேரங்களில் படிப்பூஜை நடத்துவது சற்று சிரமமான காரியமே. படிபூஜை முடியும் வரை நடைக்குள் கீழிலும், பந்தலிலும், பக்தர்கள் கூட்டமாய் இருந்து "சரணம்" கூறிக்கொண்டிருப்பார்கள். படிபூஜையை தரிசிப்பது ஒரு அபூர்வ சமாச்சாரம் என்றே பக்தர்கள் கருதுகிறார்கள்.

## பதினெட்டு சித்திகள்

1) அணிமா 2) லகிமா 3) மஹிமா 4) ஈசக்த்வ 5) வசித்வ 6) ப்ராகாம்ய 7) புத்தி 8) இச்சா 9) ப்ராப்தி 10) ஸர்வாகம 11) சர்வ சம்பதப்ரத 12) சர்வ ப்ரியம்பா 13) சர்வமங்களகரய 14) சர்வ துக்கிவிமோசன 15) சர்வம் ஸ்ரீ ருத்யுப்ரசமான 16) ஸர்வ விக்ஞ நிவாரண 17) ஸர்வாங்கசுந்தர 18) ஸர்வ சௌபாக்ய தாயக எனப் பதினெட்டு சித்திகளாகும்.

## பதினெட்டு தத்துவங்கள்

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐந்து இந்திரியங்களும் காமம், குரோத, லோப, மோக, மத, மாத், சாயங்கள், திதி கைஷடம்பம் ஆகிய அஷ்ட ராகங்களும், சத்வ இராஜஸ்தாமஸ, குணங்களும் விதயையும், அவிதயையும்சேர்த்து தத்துவங்கள் பதினெட்டாகும்.

தத்துவாதீனாகப்பகவான் இருக்கிறான் என்று விளக்க இப்படிகளைக் கடந்து மேலே அவன் கோயில் கொண்டுள்ளான். எல்லா தத்துவங்களும் தன்னுள் அடக்கம்; தான் அவற்றிக்கு கட்டுப்படாதவன் என்பதை விளக்கவே பதினெட்டுப் படிகளுக்குமேல் இறைவன் கோயில் கொண்டிருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டுத்திருப்படிகள்அஷ்டாதச சித்திகளைக் குறிப்பிடுகின்றன என்றும் ஒவ்வொரு வருடமும் மலைக்கு சென்றவர்கள் பதினெட்டு சித்திகளையும் கைகூடப்பெற்று பகவான்னிடம் ஐக்கியமாகிறார்கள். இந்த பதினெட்டு என்ற மங்களகரமான எண் ஜெயத்தை அளிப்பதாகும்.

பூலோகத்தில் அவதரித்த காலத்தில் குழந்தையாகக் குளத்துப் புழையிலும் ஆரியங்காவில் பாலகனாகவும்,அரசனாக அச்சங்கோவிலிலும், கிராத புருஷ் மூர்த்தியாக எருமையிலும், தவ வடிவமாக தர்மசாஸ்தாவாக சபரிமலையிலும் மாளிகைபுரத்தம்மையின்பிராத்தனைக்கு இணங்கி காந்த மலையில் ஜோதீஸ்வரூபனாகவும் தரிசனமளித்து மகாசாஸ்தா என்று கொண்டாடப்பட்டுக் கைலாசத்தை அடைந்து பூர்ணா புஷ்களா சகிதனாக கைலாசத்தில் இருந்து வருகிறார்.

பயபக்தி ஆசாரத்துடன், அந்தக்கரண சக்தியுடனும் ஹரிஹரசுதனை வணங்குபவர்கள் சகல கஷ்டங்களையும் நாசம் செய்து சகல க்ஷேமங்களையும் கொடுத்துக் காத்து ரஷித்துவரும் ஐயனின் அருளால் அனைத்தையும்அடையலாம்.

## ஸ்ரீ தர்ம சாஸ்தாவின் பிரதிஷ்டைகள்

யோகிகள் ஸ்ரீதர்மசாஸ்தாவை வழிபடும்போது தர்மசாஸ்தாவின் பிரதிஷ்டைகளுக்கு யோகசாஸ்திர ரீதியில் விளக்கம் கூறியுள்ளார்கள். நெல்லை மாவட்டத்திலிருக்கும் சொரிமுத்தையனார் கோயில் மூலாதாரம், அச்சன்கோயில் சுவாதிஷ்டானம், ஆரியங்காவு மணிப்பூரகம், குழைத்துப் புளா அநாஹதம், பந்தளம் விசுத்தி, சபரிமலை ஆக்ஞா என்று ஆறு இடங்களில் சாஸ்தாவை யோகசாஸ்திரத்தையொட்டி பிரதிஷ்டை செய்திருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். சாந்தமலை ஜோதி சொரூபமான ஸஹஸ்ரதலம்.

## ஸ்ரீ ஐயப்ப ஸ்தல மகிமைகள்

தல புராணங்களில் ஐயனின் கோயில்களை எந்தெந்த தினங்களில் தரிசிப்பது விசேஷம் என்பது கூறப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழத்துப்புழை விஷீக்கனி அன்றும்; ஆரியங்காவை மண்டலபூஜை அன்றும்; அச்சங்கோயிலை மண்டல பூஜைக்கு இரண்டு நாட்களுக்கு முன்பும், சபரிமலையில் மகர ஜோதிக்குத் தான் முதன்மையும் முக்கியத்துவமும் கொடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில், மகர சங்கிரமண தினத்தன்றுதான் எம்பிரான் ஒரே சமயத்தில் யோகியாகவும் ஜோதியாகவும் காட்சி தருகிறான்.

ஸ்ரீ தாரக பிரம்மத்தின் தவக்கோல விளக்கம் நித்திய பிரம்மச்சாரியாய் யோக பட்டயத்துடன் தேஜோமயமாய் ஸ்ரீ சக்ர பீடத்தில் மௌன பாஷையிலேயே பொருள் உணரச் செய்யும் சின்முத்திரையுடன் காட்சி தருகிறார். வலது கை கட்டை விரல் பரமாத்மாவையும், ஆள் காட்டி விரல் ஜீவாத்மாவையும்மற்ற விரல்கள் ஆத்மாவை பந்தப்படுத்தும் உலக வாசனைகளையும் விளக்குகின்றன. பந்தா பாசங்கள் விலகிய ஜீவாத்மா பரமாத்மாவுடன் ஐக்கியமாகிவிடும் நிலை சின்முத்திரை எனப்படும். இரு கால்களையும் குந்திட்டு இணைக்கும் யோகபட்டயம் சைவ வைஷ்ணவ ஐக்கியத்தை காட்டுகிறது. பகவான் தனது மறுகையை தனது திருப்பாதங்களை சூட்சுமமாக கட்டுவது சரணாகதியின் பொருளை உணர்த்துவதாகும்.

# சபரிமலை யாத்திரையில் பக்தர்கள் பின்பற்ற வேண்டிய விதி முறைகள்

சபரிமலையில் வைத்து ஆராதிக்கப்படும் சாஸ்த்தாவாகிய ஐயப்பனை சத்தியமும், தர்மமுள்ள அத்தெய்வத்தை தரிசிப்பதற்கு காடு, மலை, கடினப் பாதை, கொடிய மிருகங்கள் போன்ற பல இன்னல்களைக் கடந்து செல்ல இருப்பதால், பல்லாண்டுகளாகப் போற்றிக் காப்பாற்றப்படும் பயண விதிமுறைகளை இக்காலத்தில் சபரி யாத்திரை செல்லும் அனைவரும் உறுதியுடனும் உள்ளத் தெளிவோடும், ஒழுங்குடனும் பின்பற்ற சபரி யாத்திரையின் புனிதத் தன்மையை மாசின்றி நிலை நிறுத்த வேண்டியது முக்கிய கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு சுவாமி என்னும் தலைவன் :

மாசற்ற இந்தப் புனித யாத்திரை செல்ல நமக்கு ஒரு தலைவன் தேவை. பத்துப் பதினைந்து பேர்களை அழைத்துச் செல்வதற்குப்பொறுப்புள்ள ஒரு தலைவன் வேண்டும். அவர் சிறந்த பக்தனாக இருத்தல் வேண்டும். ஐயப்ப தேவனின் அரும் புகழை நன்கு அறிந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும். விரத காலத்தில் விரத முறைகளை பக்தர்களுக்கு விளக்கி கூறி பக்தியின் சிறப்பை எடுத்துச் சொல்லும் தகுதி உடைய நல் அறிவாளராக இருக்க வேண்டும். மேலும், அநேக தடவைகள் மலை யாத்திரை செய்து பக்தர்கள் நடந்து கொள்ள வேண்டிய விதிமுறைகளைக் குறைவற எடுத்துச் சொல்லும் திறமை மிக்கவராக இருத்தல் வேண்டும். இன்ன இடத்தில் இன்ன அசௌகரியம் நேரிடும். அதற்கு இன்னது செய்ய வேண்டும் என்பதை அறிந்து நடந்து கொள்ள வேண்டும். இத்தனை திறமையுள்ள ஒரு தலைவனைத்தான் குருசுவாமி என்று பெரும் பதவியும், நன்மதிப்பும் கொடுத்து, வணக்கத்திற்குரியவராக்கிக் குரு காணிக்கை தந்து, அவர் சொற்படி நடந்து, தலை யாத்திரை சென்று வருவது முறை. அவரும் தன்னையறியாமல் ஒரு சில தவறுகள் செய்யலாம். நாம் அதை அறியாதது போல் நடந்து கொள்வதுதான் சிறந்த முறை. அவ்விதம் நடந்து கொண்டால்தான் புனித யாத்திரையின் நற்பயனை நாம் அடைய முடியும். ஆகையால் எவ்வித காரணத்தைக் கொண்டும் குருசுவாமியின் மனம் நோகும்படி நடந்து அவரை வைத்திருக்கும்நிலையிலிருந்து சற்றும்தாழ்ந்த நிலைக்குக் கொண்டு வந்துவிடக்கூடாது. இது கவனிக்க வேண்டிய அம்சம். அவருக்கு நாம் செலுத்தும் வந்தனை சுவாமிக்கு நாம் செலுத்தும் வந்தனை என்பதைக் கணமும்மறந்துவிடக்கூடாது.

## பயண விதிமுறைகள்

1. ஐயப்ப பக்தர்கள்இயன்றவரை கார்த்திகைத் திங்கள்முதல் நாள் மாலை அணிந்து கொள்வது சாலச் சிறந்தது. அன்று நாள், கிழமை பார்க வேண்டியதில்லை. அதற்குப் பின் மாலை அணிபவர்கள் எப்படியும் சந்நிதானத்திற்குச் செல்லும் தினத்திற்கு முன்னதாக ஒரு மண்டலம் (41 நாட்கள்) விரதமிருக்கும்படி பார்த்து அதற்குள் மாலை அணிந்து கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. துளசிமணி அல்லது உருத்திராட்ச மாலை 108 அல்லது 54 மணிகள் உள்ளதாகப்பார்த்து வாங்கி,அத்துடன் ஐயப்பன் திருவுருவப் பதக்கம் ஒன்றையும் இணைத்து அணிய வேண்டும். அத்துடன் துணை மாலை ஒன்றும் அணிந்து கொள்வது நல்லது.

3. பலமுறை விரதமிருந்து சபரிமலை சென்றுவந்து பக்குவமடைந்த பழமலை ஐயப்பன்மார் ஒருவரைக் குருவாக ஏற்று, திருவிளக்கு முன்பாகவோ, திருக்கோவில்களிலோ குருநாதரை வணங்கி, அவர் திருக்கரங்களால் மாலை யணிந்து கொள்ள வேண்டும். அல்லது தாய்தந்தையர் மூலமாகவோ இறைவன் திருவடிகளில் வைத்து எடுக்கப்பெற்ற மாலையினையே அணிந்து கொள்ளலாம். மாலை அணிந்து கொண்டவுடன் குருநாதருக்குத்தங்களால் இயன்ற தட்சணையைக்கொடுத்து,அடிவணங்கி ஆசி பெற வேண்டும். ஐயப்பன்அடியனாக மாலை தரித்த நிமிடத்திலிருந்து குருசுவாமியை முழுமனதுடன் ஏற்று, அவர் மொழிகளைத் தேவவாக்காக மதித்து, மனக் கட்டுப்பாட்டுடன் பணிந்து நடந்து கொண்டு, பயணத்தை இனிதாக்க ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

4. கறுப்பு, நீலம், பச்சை, காவி, மஞ்சள் இவற்றுள் ஏதாவதொரு நிறத்தில் உடைகள் அணிய வேண்டும். தங்கள் கடமைகளை ஆற்றுகின்ற சமயங்களில் இயலாதுவிட்டாலும் பஜனைகளில் கலந்து கொள்ளும்போதும், யாத்திரையின் போதும் முழுவதும் கண்டிப்பாக வர்ண உடை அணிய வேண்டியது அவசியம்.

5. மலைக்குச் செல்லக்கருதி, மாலையணிய விரும்பும்பக்தரை தாய்,தந்தை, மனைவி, மக்கள் முதலியோர் தடுத்தல் கூடாது. எவ்வித அச்சமுமில்லாமல் தர்மசாஸ்த்தாவிடம் முழுப் பொறுப்பினையும் வைத்து, முகமலர்ச்சியுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

6. மேற்கொள்ள வேண்டிய விரதங்களில் மிகவும் ஒழுங்குடன் தவறாமல் கடைப்பிடிக்க வேண்டியது பிரமச்சரிய விரதமாகும். மனம், வாக்கு, செயல் என்ற மூவகைகளிலும் காம இச்சையை அறவே நீக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. காலை, மாலை இருவேளைகளிலும் குளிர்ந்த நீரில் தவறாமல் நீராடி ஐயப்பன் திருவுருவப் படத்தை வைத்து வணங்குதல் வேண்டும். தினமும் ஆலய வழிபாடும், பஜனைகளில்கலந்து கொண்டு வாய்விட்டுக்கூவி சரணம் விளித்து ஐயப்பன் புகழ்பாடி மகிழ்தலும் பேரின்பம் பயக்கும். புதன், சனிக்கிழமைகளில் விசேட பூஜை செய்வது நன்மை பயக்கும்.

8. படுக்கை, தலையணைகளை நீக்கி தன் சிறு துண்டை மட்டும் தரையில் விரித்துத்துயில வேண்டும். பகல் நேரத்தில் தூங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

9. களவு, கோபம், குரோதம், சூதாடுதல், பொய், திரைப்படங்கள், விளையாட்டு, வேடிக்கைகள், உல்லாசப் பயணங்கள், போதையூட்டும் பொருட்கள் முதலியவற்றைத்தவிர்க்க வேண்டும்.

10. எண்ணெய் தேய்த்துக் குளிப்பது, சவரம் செய்து கொள்வது, காலணிகள், குடை உபயோகிப்பது முதலியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

11. மற்றவர்களிடம் பேசும்பொழுது "சாமி சரணம்" எனத்தொடங்கி பின்விடைபெறும் பொழுது "சாமி சரணம்" எனச் சொல்ல வேண்டும்.

12. விரத காலத்தில் அசைவ உணவு உண்பது மாபெரும் தவறாகும். எனவே இயன்றவரை வீட்டிலேயே தூய்மையாகத்தயாரித்த் சைவ உணவையே உண்ண வேண்டும். மாலை தரித்த ஐயப்பன்மார் வீட்டைத்தவிர மற்றவர்கள் வீட்டில் எக்காரணத்தினாலும் உணவு உண்ணக்கூடாது. மிதமாகவே உணவு உட்கொள்வது உகந்ததன்று.

13. பக்தர்கள் மாலை தரித்த பிறகு சந்திக்கின்ற ஆண்களை ஐயப்பா என்றும் பெண்களை மாளிகைப்புறம் என்றும், சிறுவர்களை மணிக்கண்டன் என்றும், சிறுமிகளை கொச்சி என்றும் குறிப்பிட்டு அழைக்க வேண்டும்.

14. சபரிமலை செல்லும் பக்தர்கள் புதிதாக பயணம் வர விரும்புகிறவர்களிடம் "நான் பத்திரமாக கூட்டிக்கொண்டு போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகிறேன். என்னோடு தைரியமாக வரலாம்” என்று சொல்லக்கூடாது. பயணம் புறப்படும்பொழுது “போய் வருகிறேன்” என்று யாரிடமும் சொல்லிக் கொள்ளக் கூடாது. எல்லாப் பொறுப்பினையும் ஐயப்பனிடம் ஒப்படைத்து, அவன்திருவடிகளே சரணம் என்ற பக்தியுணர்வுடன் சரணம் விளித்துப் புறப்பட வேண்டும்.

15. மாலையணிந்த ஐயப்பன்மார்கள்தங்களது கடமைக்கு இடையூறு இல்லாமல், சுறுசுறுப்புடன் தங்கள் பணிகளைச் செவ்வனே செய்ய வேண்டும்.

16. மாலையணிந்தது முதல் பக்தர்கள் நாள்தோறும் 108 சரணங்கள் சொல்லி காலை, மாலை வழிபட்டு, துளசி, கற்கண்டு, நாட்டுச் சக்கரை, பால் இவற்றுள் ஏதாவது ஒன்று சிறிதளவு வைத்து நைவேத்தியஞ் செய்து வணங்க வேண்டும்.

17. யாத்திரைப்புறப்படுவதற்குச் சில நாட்கள் முன்னதாகப் பூஜை நடத்த வேண்டும். எல்லா ஐயப்பன் பக்தர்களும் தங்கள் வீட்டிலோ அல்லது குருசாமி வீட்டிலோ, பொது இடங்களிலோ சற்று விரிவான முறையிற் கூட்டு வழிபாடு (பஜனை) நடத்தி, எல்லோருக்கும் பிரசாதம் வழங்கி, அருள் பெறுவது சாலச் சிறந்தது. கன்னி ஐயப்பன்அடியவர் ஒருவருக்காவது அன்னமிடுதல் அருள்பாலிக்கும். கன்னி சாமிகள் சக்திக்கு ஏற்றவாறு அவசியம் வீட்டில் பூஜை நடத்துதல் வேண்டுமென்பது மரபு.

18. மரணம் போன்ற துக்க காரியங்கள் எதிலும் ஐயப்பன் அடியார்களும், அவர்கள் குடும்பத்தினரும் கலந்து கொள்ளக்கூடாது. தவிர்க்க முடியாத நெருங்கிய உறவில் மரணம் நேரிட்டு கலந்து கொள்ள வேண்டியிருந்தால் தான்அணிந்த மாலையைக் கழற்றி ஐயப்பன் படத்தில் மாட்டிய பிறகுதான் கலந்து கொள்ள வேண்டும். மாலையைக்கழற்ற நேர்ந்தால் மீண்டும் உடனே அணிந்து கொண்டு யாத்திரை செல்ல முற்படக்கூடாது. ஐயப்பன்திருவருளை வேண்டி மறு வருடம் சென்றுவர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. எல்லா விரதங்களிலும் பிரமச்சாரிய விரதம் முக்கியமானதாகும். எனவே எந்தப் பெண்ணைக் கண்டாலும் தாயென்றே கருத வேண்டும். மாத விலக்கான பெண்களைக் காணக்கூடாது. தவறுதலாகக்காண நேர்ந்தால் உடனே நீராடி ஐயப்பனை வழிப்பட வேண்டும். பெண்கள் ருதுமங்களச் சடங்கு விழாவிற்கோ, குழந்தை பிறந்த வீட்டிற்கோ சென்று கலந்து கொள்ளக்கூடாது.

20. இருமுடிக்கட்டு பூஜையை தன்வீட்டிலோ, குருசாமி வீட்டிலோ, கோவில்களிலோ வைத்து நடத்த வேண்டும்.

21. குருவை அடிபணிந்து வணங்கித்தங்களால் இயன்ற தட்சணை கொடுத்து, குருவின் கரங்களால் இருமுடியைத்தலையில் ஏற்றி, வீதிக்கு வந்ததும், வாசற்படியில் விடலைத் தேங்காய் உடைத்து ஐயப்பன்சரண கோஷத்துடன் பின்னால் திரும்பிப்பார்க்காமல் ஒரே நோக்கத்துடன் பயணம்தொடர வேண்டும். யாரிடமும் "போய் வருகிறேன்" என்று சொல்லக்கூடாது.

22. கன்னி ஐயப்பன் அடியார்கள்யாத்திரை புறப்பட்ட நேரத்திலிருந்து ஐயப்பன் சந்நிதானஞ் செல்லும்வரை அவர்களாக இருமுடியைத்தலையிலிருந்து இறக்கிவைக்கவோ, ஏற்றிக் கொள்ளவோ கூடாது. குருநாதர் அல்லது பலமலை ஐயப்பன்அடியாரைக் கொண்டு ஏற்றவோ, இறக்கவோ வேண்டும்.

23. 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளும், ருதுகாலம் நின்ற வயதான பெண்களும் மட்டுமே சபரிமலை யாத்திரையில் கலந்து கொள்ளலாம்.

24. யாத்திரை வழியில், அடர்ந்த வனங்களில் காட்டு யானை, புலி, கரடி முதலான விலங்குகள் இருக்குமாதலால், பக்தர்கள் கூட்டமாகச் சரணம் விளித்துக் கொண்டே செல்ல வேண்டும். இரவு நேரங்களில் காட்டிற்குள் மலஜலத்திற்காக தனியே அதிக தூரம் செல்லக்கூடாது. சரணம் விளித்தல், சங்கு ஒலித்தல், வெடி வைத்தல் பாதுகாப்பிற்குச் சிறந்த வழிகளாகும்.

25. பம்பை நதியில் நீராடும் பொழுது மறைந்த நம்முன்னோர்களுக்கு ஈமக்கடன்கள் செய்து முன்னோர்களின் ஆத்மா சாந்தி பெற வழிவகுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பம்பையில் சக்தி பூஜையின்போது ஐயப்பன் அடியார்கள் சமைக்கும்அடுப்பிலிருந்து சிறிதளவு சாம்பல் சேகரித்து சந்நிதி ஆழியிலிருந்து எடுக்கப்பெற்ற சாம்பல் அத்துடன் கலந்து தயாரிக்கப் பெறுவதுதான் சபரிமலை பஸ்மம். இது மிகவும் சக்தி வாய்ந்ததாகும்.

27. இரு முடியில் ஐயப்பனுக்காக கொண்டு செல்லும் நெய்த் தேங்காயை சந்நிதானத்தில் உடைத்து, அபிஷேகம் செய்து பெற்றுக் கொள்ள வேண்டும். யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும் இந்த நெய்யையும், விபூதி பிரசாதங்களையும் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும்.

28. ஐயப்பனுக்காக காணிக்கையாகச் சுற்றத்தார்களும், மற்றவர்களும் கொடுத்தனுப்பும் காணிக்கையைச் சந்நிதானத்திற் செலுத்தி, அவர்களுக்கு ஐயப்பன்திருவருள் கிடைக்க வேண்டிக் கொள்ள வேண்டும்.

29. குருசாமிக்குத்தட்சணை கொடுக்க வேண்டிய சமயங்களிலெல்லாம் ஐயப்பன் அடியார்கள் தாங்கள் விரும்பியதைத் தங்கள் வசதிக்கேற்றவாறு கொடுத்து குருவின் அருளைப் பெறலாம். இதில் எந்தவித நிபந்தனையும்கிடையாது. ஐயப்பன்அடியார்கள் காணிக்கை எவ்வளவாக இருந்தாலும், அதை மன மகிழ்வுடன் பெரும் பொருளாக ஏற்றுக் குருவின் குருவான ஐயப்பனுக்கே செலுத்தி பேரருள் பெற்றுய்வது குருமார்களுக்குச் சாலச் சிறந்ததாகும்.

30. ஐயப்பன் அடியார்கள் எல்லோரும் குறிப்பாகக்கன்னி ஐயப்பன் அடியார்கள் பெரிய பாதையில் (அழுதை வழி) சென்று வருவது மிகுந்த பயன் விளைவிக்கும். ஆனால் சிலர் தங்கள் தொழில், கடமை, சூழ்நிலை கருதி எருமேலியிலிருந்து சாலக்காயம் வழியாகவும், சிலர் வண்டிப் பெரியாறு வழியாகவும் சபரிமலை செல்லுகிறார்கள். என்றாலும், மேற்குறிப்பிட்ட பெரிய பாதையிற் செல்லும் பொழுது, மலைகளில் விளையும் பல மூலிகைகளின் சக்தி கலந்த காற்றினைப் பெறுவதாலும், பல மூலிகைகளின் சக்தி கலந்த ஆற்று நீரில் குளிப்பதாலும், உடல் நலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுவதாலும் எழில் மிக்க இயற்கைக்காட்சிகளைக் கண்டு களிப்பதாலும், உள்ளம் பூரிப்பதாலும், பேரின்பமும் பெருநலமும் அடைகின்றோம். நீண்ட வழிப்பயணத்தில் ஐயப்பன் சரணமொழி அதிகம் விளிப்பதால் பகவானின் திருநாம உச்சரிப்பு மிகுந்த பக்தி உணர்ச்சி வளர்கிறது.

31. யாத்திரை முடிந்து வீடு திரும்பியதும், ஐயப்பனின் திருவருள் பிரசாதக் கட்டினைத்தலையில் ஏந்தியபடி வாயிற்படியில் விடலைத்தேங்காய் அடித்து வீட்டிற்குள் நுழைய வேண்டும். வழிபாட்டு அறையில் கற்பூர ஆராத்தியோடு கட்டினை அவிழ்த்துப் பூஜை செய்து, பிரசாதங்களை எல்லோருக்கும் வழங்க வேண்டும்.

32. பஜனையில் பதினெட்டாம்படி பாட்டுப்பாடி கடைசியில் மங்களம் பாட வேண்டும்.

33. யாத்திரை இனிது நிறைவேற்றியதும், குருநாதர் மூலம்மாலையைக்கழற்றி ஐயப்பன் திருவுருவப்படத்திற்கு அணிவித்து விட்டு, விரதத்தை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். ஐயப்பன்திருவருளால் எல்லா நலன்களும் வாய்க்கப் பெற்றுப் பல்லாண்டு இனிது வாழ பகவான் நாமம் பாடித்துதிப்போமாக.

## மலை சென்று வர
## மாலை அணியக்கூடாத காலங்கள்

தந்தை இறந்தால் ஒருவருட காலமும், தாய் என்றால் ஆறு மாத காலமும், மனைவி என்றால் மூன்று மாத காலமும், சகோதரன் என்றால் ஒன்றரை மாத காலமும், புத்திரன் என்றால் ஒன்றரை மாத காலமும், பங்காளி என்றால் ஒரு மாத காலமும் மலையேறுவதும், சுப காரியங்கள் செய்வதும் கூடாது. அப்படிச் செய்ய வேண்டும் என நிர்ப்பந்தம் ஏற்பட்டால், “விக்கின விநாயகரை பூஜித்து சாந்தி செய்து, அன்னதானம் செய்து, எல்லாவித சுபகாரியங்களும் செய்யலாம்“ என்று அருளிச் செய்த ஸ்ரீ யோகீஸ்வரராயாக ஏசல்கிய மகரிஷியின் அருள் வாக்கினையே சபரிமலை ஏறுவதற்கு ஐயப்ப பக்தர்கள் கையாள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாலை தரித்துக் கொள்ளும்போது ஜெபிக்க வேண்டிய மந்திரம்

ஞானமுத்ராம் சாஸ்த்ரு முத்ராம் குருமுத்ராம்
நமாம்யஹம்
வனமுத்ராம் சுத்தமுத்ராம் ருத்ரமுத்ராம்
நமாம்யஹம்
சாந்த முத்ராம் ஸத்யமுத்ராம் விரதமுத்ராம்
நமாம்யஹம்
சபர்யாச்ரமஸத்யேன் முத்ராம் பாது ஸதரபிதே
குரு தக்ஷிணயா பூர்வம் த்ஸ்யானுக்ரஹகாரினே
சரணாகத முத்ராக்யம் தவம் முத்ராம் தாரயாம்ஹம்
சின் முத்ராம் கேசரீ முத்ராம் பத்ர முத்ராம்
நமாம்யஹம்
சபர்யாசல முத்ராயை நமஸ்துப்யம் நமோ நம

## மாலை கழற்றுவதற்கான மந்திரம்

அபூர்வ மசலா ரோஹி - திவ்யதர்சன காரண
சாஸ்த்ரு முத்ராத் யஹாதேவ - தேஹி மேவிரத
மோசனம்

## இரு முடிகட்டுப் பூஜை

இருமுடிகட்டுப் பூஜையைத்தன்வீட்டிலோ, குருசாமி வீட்டிலோ, கோவிலிலோ, சக ஐயப்பன் அடியார் வீட்டிலோ, குருநாதர் மூலம் நடத்தலாம். கன்னிச்சாமி தனித்து இருமுடியைக் கட்டுதல் தவிர்க்க வேண்டும்.

## மண்டல பூஜையும் ஐயனின் தங்கக் கவசமும்

கார்த்திகை மாதம் முதல் திகதி தொடக்கம் சந்நிதானம் தொடர்ச்சியாக மண்டல பூஜைக்காக 41 நாள் (ஒரு மண்டலம்) பூஜைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடுகள், பஜனைகள் நடந்த வண்ணமிருக்கும். நெய் அபிஷேகம் காலை 5.00 மணி முதல் பகல் 1.00 மணிவரை நடைபெறும். மாலை நேர தீபாராதனையின்போது சுவாமிக்கு தினசரி ரத்தினக் கிரீடம் அணிவிப்பார்கள். மார்கழி மாதம் மண்டல பூஜை இரண்டு நாட்களுக்கு முன்பே ஐயப்பனுக்கு சமர்ப்பிக்க வேண்டிய தங்க கவசம் அரண்மனை கோவிலிலிருந்து ஒரு அலங்காரத் தேரில் ஆயிரக்கணக்கான ஐயப்பன்அடியார்கள் சூழ்ந்துவர ஊர்வலம், மண்டல பூஜை அன்று (பகல்) சுமார் 2.00 மணி அளவில் பம்பை நதிக்கரையை வந்தடைந்து, பின் நீலிமலை அடிவாரத்திலுள்ள கணபதி கோவில் முன் பக்தன்மார் தரிசனத்திற்காக வைக்கப்படுகிறது. இந்த சமயம் ஒரு கருடன் (கிருஷ்ண பருந்து) கணபதி கோவிலின் மேல் வட்டமிட ஆரம்பிக்கிறது. இது பக்தருக்கு கண் கொள்ளாக் காட்சி ஆகும்.

இலட்சக்கணக்கான பக்தர்கள் கூடும் பம்பையில் சாதாரணமான காகம் போன்ற பறவைகளைக் கூட காண முடியாத போது, கருடப் பறவையை மட்டும் காண்பது தெய்வத்தின் கண்கண்ட காட்சியாக நமக்குப் புலப்படுகிறது. சுமார் 4.00 மணி அளவில் கவசப் பெட்டி ஒரு ஐயப்பன் அடியார் மீது தலைச் சுமையாக சந்நிதானத்தை நோக்கிப் புறப்பட, பக்தன்மாரும் பின்தொடர, கருடனும் மேலே வட்டமிட்ட வண்ணம் சுமார் 5.45 மணி அளவில் சந்நிதியை வந்தடைகிறது. கோவில் மேல் சாந்தியும், உதவியாளர்களும் கவசப் பெட்டியை பெற்று, கருவறைக்குள் எடுத்துச் சென்று, கதவுகள் அடைக்கப்படுகின்றன. உள்ளே சுவாமிக்கு கவசத்தை அணிவித்து புஷ்பலங்காரம் செய்து 6.30 மணி அளவில் மகா தீபாராதனைக்காக கதவுகள் திறக்கப்படுகின்றன. அச்சமயம் கோவிலைச் சுற்றியுள்ள மணிகள் ஒலிக்க இலட்சக் கணக்கான பக்தன்மார் சேர்ந்து எழுப்பும் சரண கோஷம் வானத்தையே பிழந்துவிடும்போல் இருக்கும். அந்த நேரம் வரை கருடன் கோவிலின் மேல் வட்டமிட்ட வண்ணமே இருக்கும்.

## உற்சவம்

மண்டல பூஜைக்காலத்தில் கார்த்திகை மாதம் அஸ்த்த நட்சத்திரத்தன்று. தங்கக் கொடி மரத்தில் கொடி ஏற்றி, 10 தினங்கள் விசேஷ பூஜைகள், சடங்குகள், அலங்காரங்கள், மற்றும் இன்னிசைக் கச்சேரிகள் போன்ற நிகழ்ச்சிகள் நடந்து கொண்டேயிருக்கும். 10ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் காலை ஸ்ரீ தர்மசாஸ்தாவை ஆராட்டு எனப்படும் நீராடலுக்காக பஞ்சவாத்தியம், நாதஸ்வரம் முதலிய வாத்தியங்களுடன், ஊர்வலமாக சுமந்து கொண்டு பம்பைக்கரையில் அதற்கென அமைந்துள்ள நீராட்டுத் துறையை வந்தடைகிறார்கள். பம்பையில் நீராட்டம் செய்வித்து, மாலை தீபாராதனைக்குள் சந்நிதானம் சென்றடைவர். இது மிகவும் விசேஷமான காட்சியாகும்.

## மகரஜோதியும் ஐயப்பன் திருவாபாரணங்களும்

சபரிமலையில் திருவிழாக்களில் பக்தர்கள் பெருவெள்ளம் கூடுவது மகரசங்கராந்தியன்று. இன்று தான் ஐயன் ஐயப்பன் காந்த மலையில் ஜோதியாகக் காட்சி தருகிறார். இதுவே மகர விளக்கு மகரஜோதி என்று அழைக்கப்படுகின்றது. ஜோதி தரிசனம் கிடைக்க வேண்டுமானால், சுவாமிக்கு பந்தள அரண்மனையிலிருந்து கொண்டுவரும் சுவாமியின் திருவாபரணங்கள் கட்டாயம் சுவாமிக்கு அணிவிக்கப்பட்டிருக்க வேண்டும். இந்தப் புனிதமான திருவாபரணங்கள் அடங்கிய பெட்டி பந்தள அரண்மைனையிலிருந்து மகரஜோதி அன்று சந்நிதானம் வந்து சேருகின்றன. அத்திருவாபரணம் பந்தள அரண்மனையிலிருந்து புறப்பட்டு சந்நிதானம் வந்தடையும் வரை வானத்தில் ஒரு கருடன் (கிருஷ்ண பருந்து) வட்டமிட்ட வண்ணமே வரும். இந்த புனித திருவாபரணங்களைச் சுமந்துவரும் அதிகாரிகளும் சுத்த பிரமச்சாரிய விரதம் அனுஷ்டித்தவர்களே. கடமைக்காக அல்லாது ஆத்மார்த்தமான பக்தியுடன் சேவை செய்கின்றனர். பந்தள அரண்மனையிலிருந்து நடையாகவே இதை சுமந்து வருகின்றனர். வழி நெடுகிலும் ஆங்காங்கு மிகச் சிறப்பான வரவேற்புகளையும், ஏராளமான காணிக்கைகளையும் பெற்றுக் கொண்டு மகரஜோதியன்று சந்நிதியை மாலை சுமார் 5.30 மணியளவில் வந்தடைந்து, பதினெட்டாம் படி வழியாக் ஏறி உச்சியை அடைந்ததும் மேல் சாந்தியும், தந்திரியும் உதவியாளர்களும் திருவாபரணங்களைப் பெற்று மூலஸ்தானத்தினுள் எடுத்துச் சென்று பகவானுக்கு திருவாபரணங்களை அணிவிக்கின்றனர். சுமார் 6.45 மணி அளவில் கருவறையின் கதவுகள் மகா தீபாராதனைக்காக திறக்கப்படுகின்றன. அந்த சமயத்தில் கோயிலைச் சுற்றிக் கட்டியுள்ள மணிகள் அடிக்கும் சத்தம் கேட்கும். இந்த நேரத்தில் காத்து நிற்கும் இலட்சக்கணக்கான பக்தன்மாரின் ஏகோபித்த, "சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயப்பா" எனும் ஒலி காந்தமலைக்கு அப்பாலும் எட்டக்கூடும். தீபாராதனையைக் கண்டவுடன், பக்தன்மார் சந்நிதானத்திற்கு வடகிழக்குத்திசையில் காந்தமலையில் அமைந்துள்ள பொன்னம்பல மேட்டை சரணக்கோஷத்துடனே உற்று நோக்குவர். திடீரென்று அங்கு ஒரு தீபம் (ஒளி அல்லது ஜோதி) சிறிதாக தோன்றி வரவர பெரிதாகச் செந்தணல் வடிவத்தில் கற்பூர ஆரத்தி செய்வது போல வட்டமாக சுமார் 5 நிமிடங்கள் வரையில் ஆகாயத்தில் தெரிகிறது. இந்த மகரஜோதியை தரிசனம் கண்டவுடன், பம்பையிலிருந்து சந்நிதானம் வரை சுமார் இருபது இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் எழுப்பும் சரண ஒலியும், பக்தன்மார் ஆவேசத்தையும், எழுத்தில் எழுத முடியாததொரு செயலாகும். ஜோதீஸ்வரூபனான சபரிமலை ஸ்ரீ ஐயப்ப சுவாமியை வழிபட்டு, பெருமானின் அருளால் எல்லா மங்களங்களையும் அடைவீர்களாக.

## எச்சில் இலைக்கு
## ஐயப்பன் அருளிய பெருமை

சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் வழிபாட்டில் கன்னிச்சாமிகள் அவரவர் சக்திக்கேற்ப சக்தி பூஜை நடத்துவது மரபு. ஐயப்பன்மார் சாப்பிட்ட எச்சில் இலைகளை எடுத்து போடுவதில் மிக்க புண்ணியம் கிடைக்கும் என்று கருதுகிறார்கள். இது பம்பையில் நடத்தப்படும் சக்தி பூஜையில் எச்சில் இலை எடுப்பது மிகவும் புண்ணியம்தரும். பம்பா சக்தி ஐயப்பன்மார்கள் பெரும் விருந்தாக தயார் செய்து, வன தேவதைகளுக்கு படைத்து, அப்பளம், வடை போன்றவற்றை தங்கியிருக்கும் தாவளத்தின் உயரத்தில் கட்டி தொங்கவிட, அதை காணும் ஐயப்பன்மார் தாமாகவே சக்தி எனும் விருந்துக்கு வருவது இவையனைத்தும் மனதை பூரிப்படையச் செய்கிறது. இதில் முக்கியத்துவம் வாய்ந்த பம்பா சக்தி ஏலத்தில் விடுவது வசதியுள்ளோரே மிகவும் உயர்வாக ஏலம் கேட்டு எடுக்கின்றனர். ஆனால் கன்னிச்சாமிமார்கள் அனைவருக்கும் எச்சில் இலைகளை பகிர்ந்து எடுக்கும் வண்ணம் செய்வதே நன்மையாகும்.

ஏலத்தில் கிடைக்கும் பணத்தை சபரிமலை ஸ்ரீ ஐயப்பனுக்கு காணிக்கையாக உண்டியலில் செலுத்தி விடுவார்கள். சிலர் மலைப் பயணத்தில் ஏற்படும் பொதுச் செலவுக்கு பயன்படுத்துகின்றனர். தான தருமங்களை செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் குல தெய்வம் எங்கும் நிறைந்தவன்
ஏழைப் பங்காளன்

## பேட்டைத் துள்ளலின் பொருள் என்ன ?

பகவான் ஸ்ரீ ஐயப்பதேவன் நம்மை எருமேலியில் வேட்டையாடச் சொன்னார். எதை வேட்டையாடச் சொன்னார்? நம் உள்ளத்தில் உலாவித்திரியும் (காமம், மோகம், லோபம், மதம், மாற்சரியம் என்ற) ஆசை மிருகங்களை வேட்டையாடச் சொன்னார். ஆயுதம் இல்லாமல் வேட்டையாட முடியுமா ? அம்பு கொண்டு மிருகங்களை அழிக்கச் சொன்னார். எந்த அம்பு ? அம்பு என்றால் சரம். சரம் என்றால் வாசி. வாசி என்றால் பிராணவாயு. சரம் என்ற அம்பு மட்டும் இருந்தால் போதுமா ? வில் வேண்டுமல்லவா ? வில் எங்கே ? நெற்றியில் இரு புருவங்களுக்கும் ஊடே சுசுழுமுனை வில்லில் அம்பை பூட்ட வேண்டும் ! வில் வளைந்து அம்புபூட்டியெய்தால் ஆசை மிருகங்கள் நிச்சயம் அழிந்துவிடும். நாம் வேட்டையாடத் துவங்கும்போது ஐந்து வர்ணமுள்ள சாயப்பொடியை பூசுகிறோம். அதன் உட்பொருள் என்ன? பச்சை, சிகப்பு, வெள்ளை, கறுப்பு, நீலம். இவ்வர்ணங்கள் பஞ்ச பூதங்களையும் (மண், நீர், தீ, காற்று, ஆகாயம்) பஞ்சேந்திரியங்களையும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) குறிக்கும். அலைந்து திரியும்படி விடாமல் ஒன்று சேர்த்தலின் தத்துவமே பஞ்சவர்ணப்பொடி பூசுதல். ஐந்து வர்ணங்களுக்கும் உவமானமாக ஐந்து இந்திரியங்களை சொன்னோம். அந்த இந்திரியங்கள் நம்மை எப்படி எல்லாம் ஆட்டிப் படைக்கின்றன என்பதை கவனிப்போம்.

1வது மெய் - என்ற உடம்பு பல்வேறு உணர்ச்சிகளில் சுகம் காண விரும்புகின்றது.
2வது வாய் - ருசிமிக்க பண்டங்களை உண்ண விரும்புகிறது.
3வது கண் - பல காட்சிகளை வசம் சென்று உலாவுகிறது.
4வது மூக்கு - சுகத்தையே நாடித் திரிகிறது.
5வது செவி - அளவில்லாத சப்தங்களைக் கிரகிக்கிறது.

இவை ஐந்தும் ஜீவனமாகிய ஆன்மாவுக்கு நன்மை செய்கின்றனவா என்றால் இல்லை ஏன் ? அவை தன்னிஷ்டம் போல் திரிந்து, விகார உணர்ச்சிகளில் வீழ்ந்து உண்ணவேண்டாத உணவுகளை உண்டு, மதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு பார்க்கத்தகாத காட்சிகளைப் பார்த்து, நுகரத்தகாத மணங்களை நுகர்ந்து அவைகளின் வழியே செல்கின்ற இந்திரியங்களை அவை வழிசெல்லாது நல்வழி செயல்படுத்தலே பஞ்சவர்ணப் பொடி பூசுவதின் தத்துவமாகும். பஞ்சேந்திரியங்கள் ஒருமைப்பாட்டுடன் விளங்குதலே சுவாமியை அடையும் வழி. பஞ்சேந்திரிய ஒருமைப்பாடுடன் அன்பு என்ற சரத்தைக் கையில் பிடித்துக் கொண்டு எருமேலி, காளைகட்டி, உடும்பாறை, கரிமலை, சபரிபீடம், சரங்குற்றி வழியாகச் சென்று சுவாமியைக் காண வேண்டும். இந்த கோட்டை வாசல் ஆறும். ஆறு ஆதார தத்துவங்களாகும்.

| கோட்டை வாசல் | ஆதாரங்கள் |
|---|---|
| 1 வது எருமேலி | மூலாதாரம் |
| 2 வது காளைகட்டி | சுவாதிஷ்டானம் |
| 3 வது உடும்பாறை | மணிபூரகம் |
| 4 வது கரிமலை | விசுத்தி |
| 5 வது சபரிபீடம் | அணாகதம் |
| 6 வது சரங்குற்றி | சுழுமுனை |
| 7 வது பொன்னம்பலம் | சஹஸ்த்ரா தளம் |

இறைவனாகிய பூதநாதன் இருக்கும் துரியாதீதவெளி ஆதாரங்களின் வழி சென்று சரம் என்ற பிராண வாயுவான அம்பு சரங்குற்றியென்ற சுழிமுனையில் வைக்கப்படுகிறது. அதன் பிறகே துரியங்கடந்து துரியாதீத வெளியில் விளங்கும் சுவாமியின் பொருள் கிடைக்கப் பெறுகிறது. ஈசனை ஆதாரணங்களின் வழிசென்று கண்டு ஆனந்தம் அடைகிறோம். எருமேலி, காளைகட்டி, உடும்பாறை, கரிமலை, சபரிபீடம், சரங்குற்றி வழியாகச் சென்று சுவாமியைத்தரிசித்து அருள் பெறுவோமாக.

## பாத பூஜை எதற்காக ?

குருமார்களுக்கு பாத பூஜை செய்வது இந்துக்களின் பண்பாடு மேலான பரம்பொருளை நாம் அடைவதற்கு மார்க்கமாக இருந்து உதவுபவர்கள் தான் குருமார்கள். அந்த மேலான பரம்பொருள் எதுவென்று நமக்குத் தெரியாது. ஆனால் அதனை நோக்கி நம்மை நிச்சயமாக குருநாதர் வழிநடத்திச் செல்வார் என்பது மட்டும் நமக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாகத் தெரிகிறது. மேலே உள்ள பொருள் தெரியாது. ஆனால் அந்த மேலான பொருளுக்கு நம்மை இட்டுச் செல்பவரின் பாதங்கள் கண்கூடாகத் தெரிகின்றன. மேலான பொருளை மனதில் தியானித்து தெரியும் குருவின் அந்த மேலான பொருளின் குறியீடாகக் கருதி அவற்றிற்கு பூஜை செய்கிறோம். நாம் பாத பூஜை செய்யும்போது குருநாதனும் அந்த பாத பூஜை தனது பாதங்களுக்காகத்தான் செய்யப்படுகின்றதென்று கருதுவதில்லை. தன் பாதங்களுக்கு செய்யப்படும் பூஜை எல்லாம் அவர்தான் உணர்ந்துள்ள மேலான பரம்பொருளுக்கு சமர்ப்பணம் செய்து விடுவார். ஆணவம் என்ற வேண்டாத குணத்திலிருந்து நம்மை விடுவிக்கும் ஓர் அற்புதமான நடைமுறைதான் பாத பூஜை.

உ

கணபதி துணை

ஔவையார் அருளிச் செய்த

# விநாயகரகவல்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கி வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மலச் சுவடும்
இரண்டு செவியு மிலங்குபொன் முடியுந்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
அற்புத நின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயா யெனக்குத்தானெழுந் தருளி
மாயப் பிறவி மயக்க மறுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தெனுளந்தனிற் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத்திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத்தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்கு முபாயம்
இன்புறு கருணை யினிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்
திருவினை தன்னை யறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயி லொருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேரு நிறுத்துப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தில் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பில் னாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட வுரைந்து
மூலா தாரத்தில் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையு மாதித்த னியக்கமுங்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தி னீரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தி னுறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முகமாக வினிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட வெனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப்படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி மத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என்செவியில்
எல்லை யில்லா ஆனந்தம்அளித்து
அல்லல் களைந்தேஅருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத் தினுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணு முற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும்விளங்க நிறுத்திக்
கூடும் மெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும் பொருள் தன்னை
நெஞ்சக்கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத்தந்தெனை யாண்ட
வித்தக விநாயக ! விரைகழல் சரணே !

## விநாயகர் பஜனைப் பாடல்

ஓம் ஓம் ஓம்
ஏகதந்தாய வித்மஹே
வக்ரகுண்டாய தீமஹீ
தன்னோதந்திப்ரஜோதயாது

லம்போதரா ஜெய கஜானனா
லம்போதரா ஜெய கஜானனா
பார்வதி நந்தன பரம தயாகன (2)
லம்போதரா ஜெய கஜானனா
பந்த விமோஷன பவபயபந்தன (2)
பிரணவஸ்வரூபா ஹேசிவனந்தன (2)
பாஹிப்ரபோமாம் பாஹிகஜானனா (2)

(லம்போதரா)

மூஷிகவாகன மோதகஹஸ்த
சாமரகரண விளம்பித சூத்ர
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்னவிநாயக பாதநமஸ்த்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருப்பிரம்மா குருவிஷ்ணு
குருதேவா மஹேஸ்வரா
குரு சாட்சாத் பரப்பிரம்மா
தஸ்மை ஸ்ரீ குருவே நமஹா.

உலகமே அம்மை அப்பன் என்றே உரைத்தவனே
ஓம் எனும் ப்ரணவ ரூபா நாதா கணபதியே
வருவாய் கணபதியே வரம் தருவாய் குணநிதியே
அருள்வாய் கணபதியே அருள் புரிவாய் குணநிதியே
(உலகமே)

கலியுக வரதனே கற்பக விநாயகனே
கண்கண்ட தெய்வம் நீயே கன்னிமூல கணபதியே
உன் பதம் சரணடைந்தேன் உமயவள்
மூலமுதற்பொருளே மூஷிக வாகனனே.
(உலகமே)

வந்தாரே பூமிக்கு கணநாதா
லம்போதரா விக்னேஸ்வரா
கஜமுக நாதா வினைபல தீர்ப்பாய்

பிள்ளையார்பட்டிக்கு வந்தோமையா
பிள்ளைத்தமிழ் பேசும் உனை கண்டோமையா
கலியுக வரதா கஜமுக நாதா (வந்தாரே)

பம்பா நதிக்கரைக்கு வந்தோமையா
பக்தர்களை காத்தருள வேண்டுமையா
பால விநாயகா பம்பை விநாயகா (வந்தாரே)

## முக்கண்ணன் மகனே

முந்தி முந்தி விநாயகரே
முக்கண்ணனார் தன் மகனே
கந்தனுக்கு முன் பிறந்த
கணபதி வாருமையா (முந்தி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானை வயிற்றுக் கணபதியே
பாதுகாக்க வேணுமையா
ஆனை முகம் கொண்டவரே
ஆதரிக்க வேணுமையா
வினை தீர்க்கும் வித்தகரே
வேண்டும் வரமும் தாருமையா
நினைவெல்லாம் நீயே ஐயா
நித்தமுமே வந்தருள்வாய் (முந்தி)

கன்னிமூலக் கணபதியே
கருணை கொண்டே வந்திடுவாய்
கன்னிமார்களும் மலையேற
கற்பகமே முன்நடவாய்
சன்னிதானம்அடைந்திடுவே
சடுதியில் நீயும் வந்திடுவாய்
பொன் ஐயன்முகம் பார்க்க
எனக்கும் துணையாய் வாருமையா (முந்தி)

## கணபதியே சாமி கணபதியே

கணபதியே சாமி கணபதியே
கணபதியே சாமி கணபதியே
மூலமுதற் பொருளே கணபதியே
முக்கண்ணன் தன்மகனே கணபதியே
கந்தனுக்கு முன் பிறந்த கணபதியே
காத்தருள வேண்டுமையா கணபதியே (கணபதி)

வேல்முருகன் சோதரனே கணபதியே
வினை தீர்த்த வித்தகனே கணபதியே
பார்வதியின் புத்திரனே கணபதியே
பண்பு மனம் கொண்டவனே கணபதியே (கணபதி)

தொந்தி வயிற்றோனே கணபதியே
தொழுதிடவே வந்தோம் ஐயா கணபதியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தும்பி முகம் கொண்டவரே கணபதியே
துணையாக வரவேண்டும் கணபதியே (கணபதி)

மூஷிக வாகனனே கணபதியே
முன்னின்று காக்க வேண்டும் கணபதியே
பாசமுடன் ஓடிவந்து கணபதியே
பாதுகாக்க வேண்டுமய்யா கணபதியே (கணபதி)

## முருகன் பஜனை பாடல்

அஞ்சு முகந்தோன்றில் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சலென வேல்தோன்றும் – நெஞ்சில்
ஒரு கால் நினைக்கின்இருகாலும் தோன்றும்
முருகா வென்றோதுவார்முன்.

உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின் செல்வேன் – பன்னிருகை
கோலப்பா வானோர் கொடிய வினை தீர்த்து அருளும்
வேலப்பா செந்தில் வாழ்வே.

ஹர ஹரோ ஹரா சுவாமி
ஹர ஹரோ ஹரா
ஹர ஹரோ ஹரா சுவாமி
ஹர ஹரோ ஹரா

கதிர்காம வேலனுக்கு ஹர ஹரோ ஹரா
கந்தப்ப சுவாமிக்கு ஹர ஹரோ ஹரா
திருப்பரங்கிரித் தீரனுக்கு. ஹர ஹரோ ஹரா
திருச்செந்தூர்த் தேவனுக்கு ஹர ஹரோ ஹரா
திருவேரக பாலனுகரு ஹர ஹரோ ஹரா
குன்றிலாடும் குமரனுக்கு ஹர ஹரோ ஹரா
குஞ்சரி தன் கணவனுக்கு ஹர ஹரோ ஹரா
குறவள்ளி காந்தனுக்கு ஹர ஹரோ ஹரா
குணங்கடந்த கோலனுக்கு ஹர ஹரோ ஹரா
சோலை மலைக் கிழவனுக்கு ஹர ஹரோ ஹரா
சொகுசுக் கார முருகனுக்கு ஹர ஹரோ ஹரா
சிவசக்தி வடிவனுக்கு ஹர ஹரோ ஹரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கார வேலனுக்கு ஹர ஹரோ ஹரா
அகங்கார நாசனுக்கு ஹர ஹரோ ஹரா
அன்பர்களின் நேயனுக்கு ஹர ஹரோ ஹரா
ஓங்கார தத்துவனுக்கு ஹர ஹரோ ஹரா
ஓம்சக்தி தந்தவனுக்கு ஹர ஹரோ ஹரா

## முருகா ! முருகா ! முருகா !

வருவாய் மயில்மீதினிலே
வடிவேலுடனே வருவாய் !
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும் (முருகா)

அடியார் பலரிங் குளரே
அவரை விடுவித் தருள்வாய் !
முடியா மறையின் முடிவே ! அசுரர்
முடிவே கருதும் வடிவேலவனே (முருகா)

சுருதிப் பொருளே வருக !
துணிவே, கனலே, வருக !
கருதிக் கருதிக் கவலைப்படுவோர்
கவலைக்கடலைக்கடியும் வடிவேல் (முருகா)

அமரா வதிவாழ் வுறவே
அருள்வாய் ! சரணம் சரணம் !
குமரா பிணியா வையுமே சிதறக்
குமறும்சுடர் வேலவனே சரணம் (முருகா)

அறிவா கியகோ யிலிலே
அருளா கியதாய் மடிமேல்
பொறிவே லுடனே வளர்வாய் அடியார்
புதுவாழ் வுறவே புவிமீ தருள்வாய் ! (முருகா)

குருவே ! பரமன் மகனே !
குகையில் வளருங் கனலே !
தருவாய் தொழிலும் பயனும் அமரர்
சமராதிபனே சரணம் சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சை மயில் வாகனனே வா வா

பச்சை மயில் வாகனனே - சிவ
பாலசுப்ர மணியனே வா - முருகா
இச்சையெல்லாம் உன்மேல் வைத்தேன்
இனி எள்ளளவும் பயமில்லையே (பச்சை)

கொச்சை மொழியானாலும் - உன்னை
கொஞ்சி கொஞ்சி பாடிடுவேன் - முருகா
மெல்ல மெல்ல புகுந்து விட்டாய் - எந்தன்
கள்ள மெல்லாம் கரைந்த தப்பா (பச்சை)

நெஞ்சமதில் கோவிலமைத்து - இங்கு
நேர்மையெனும் தீபம் வைத்து - முருகா
செஞ்சிலம்பு கொஞ்சிடவே - வா
சேவல் கொடி மயில் வீரா (பச்சை)

அலைகடல் ஓரத்திலே - என்
அன்பான ஷண்முகனே - முருகா
அலையா மனம்தந்தாய் - உந்தன்
இஷ்டம் எந்தம் கஷ்டம் தீரப்பா (பச்சை)

முருகன்தனிவேல் முனி நம் குருவென்று
அருள் கொண்டறியார் அறியும்தரமோ
உருவன் றருவன் றுன்தன் றிலதன்று
இருளன் றொளியன் றென நின் றதுவே.

முருகன் குமரன் குகனென்று மொழிந்து
உருகும் செயல்தந் துணர்வென் றருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவ என குணபஞ்சரனே.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேல்வேல் வடிவேல் வேதாந்த வடிவேல்
நாதாந்த வடிவேல் நான்மறைகள் போற்றும்வேல்
(சிவ) சத்தியவள் தந்தவேல் தேவர் மூவர் போற்றும் வேல்
குழந்தைக் குமரவேல் குன்று தோறும் ஆடும் வேல் (வேல்)

## முருகன் பாடல்

வேல் வேல் வேலவனே வேலாயுதா - எங்கள்
வினைகள் எல்லாம் தீர்த்திடுவாய் வேலாயுதா (வேல் வேல்)

கந்தா கடம்பா வேலாயுதா - எங்கள்
கதிர்காம வேலவனே வேலாயுதா (வேல் வேல்)
திருச்செந்தூர் வேலவனே வேலாயுதா - எங்கள்
திருபரங்கித்தீரனே வேலாயுதா (வேல் வேல்)
சோலைமலை கிழவனே வேலாயுதா எங்கள்
சொகுசுகார குமரனே வேலாயுதா (வேல் வேல்)
பழநிமலை முருகனே வேலாயுதா - எங்கள்
பலவினையை நீக்கிடுவாய் வேலாயுதா (வேல் வேல்)
சுவாமிமலை நாதனே வேலாயுதா - எங்கள்
சுப்பிரமண்ய சுவாமியே வேலாயுதா (வேல் வேல்)
திருத்தணிகை முருகனே வேலாயுதா - எங்கள்
திருமுருக வேலவனே வேலாயுதா (வேல் வேல்)

ஓம் முருகா ஜெய ஓம் முருகா //
சரவணா சண்முகா சிவசக்தி பாலா // (ஓம் முருகா)

ஓம்சரவணபவ தேவாஸ்கந்தா //
சூரசம்ஹாரா மாயோன் மருகா // (ஓம் முருகா)

காவடியாம் காவடி கந்த வேலவன் காவடி //
காவடியாம் காவடி காண வேண்டும் கண் கோடி //
வேல்முருகன் நாமத்திலே வித விதமாய் காவடி //
வெற்றி வேலன் காவடி வீரவேலன் காவடி //
சிங்கார வேலனுக்கு சின்ன சின்ன காவடி //
சுவாமிமலை நாதனுக்கு சந்தனத்தில் காவடி //
பழநிமலை பாலனுக்கு பால் குடத்தால் காவடி //
தென்பழநி வேலனுக்கு தேன் குடத்தால் காவடி //



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுமுக வேலனுக்கு அழகு மயில் காவடி //
வண்ண வண்ண காவடி கந்த வேலன் காவடி //
(காவடியாம்)

சரவணா சிவகுமாரா சண்முகநாதா ஜெய் ஜெய் சண்முகநாதா//
சுப்பிரமண்யா கார்த்திகேயா கதிர்வேலா //
சண்முகநாதா ஜெய்ஜெய் சண்முகநாதா //
சரணம் சரணம் சண்முகநாதா – ஓம்
சரணம் சரணம் சண்முகநாதா.

வள்ளி மோஹனா புள்ளி மயில் வாகனா //
ஆறுமுகக் கந்தனே சுந்தர வதனா //
குமர குரு பரசண்முக வடிவேலவா //
முருகா ஹரி முருகா சிவசக்தி பாலகா // (வள்ளி மோஹனா)

சரவணபவ குக ஓம் முருகா //
இருவினை கெடவர அருள் முருகா //
பக்திபுரிவாசா சாயி முருகா //
சிவ முருகா ஹர ஹர முருகா //

சுப்ரமண்யம் சுப்ரமண்யம்
சண்முகநாதா சுப்ரமண்யம்
சுப்ரமண்யம் சுப்ரமண்யம்
சண்முகநாதா சுப்ரமண்யம்
ஹர ஹர ஹர ஹர சுப்ரமண்யம்
சிவ சிவ ஹர ஹர சுப்ரமண்யம்
ஹர ஹர சிவ சிவ சுப்ரமண்யம்
சிவ சரவணபவ சுப்ரமண்யம்
குரு சரவணபவ சுப்ரமண்யம்
சிவ சிவ ஹர ஹர சுப்ரமண்யம்
ஹர ஹர சிவ சிவ சுப்ரமண்யம்

அன்பருக்கு அன்பனே நீ வா வா முருகா
ஆறுபடை வீடுடையாய் நீ வா வா முருகா
இன்பமய ஜோதியே நீ வா வா முருகா
ஈசனுமை பாலகனே நீ வா வா முருகா
உலகநாதன் மருகனே நீ வா வா முருகா
ஊமைக்கருள் புரிந்தவனே நீ வா வா முருகா
எட்டுக்குடி வேலவனே நீ வா வா முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறுமயில் ஏறியே நீ வா வா முருகா
ஐங்கரனுக் கிளையவனே நீ வா வா முருகா
ஒய்யாரி வள்ளி லோலா நீ வா வா முருகா
ஓங்கார தத்துவமே நீ வா வா முருகா
ஔவைக் குபதே சித்தவா நீ வா வா முருகா
அகில லோக நாயகனே நி வா வா முருகா
ஹரக ரோகரா சாமி ஹரக ரோகரா
ஹரக ரோகரா சாமி ஹரக ரோகரா

# ஸ்ரீ ஐயப்பன் வழிபாடு

## ஐயப்பன் பூஜை

சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம்
ப்ரஸந்த வதனம்த்யா யேத் ஸர்வ வித்நோப
சாந்தயே

பின் விராணாயாமம்செய்து பின்வரும் ஸங்கல்பம் கூறவும்

ப்நாபாத்த ஸமஸ்த்த துரிதஷயத்வாரா ஸ்ரீ பரமேச்வர ப்ரீத்யர்த்தம் ஹணசோபநே முகூர்த்தே, ஆத்யப்ரஹ்மண : த்விதீய பரார்த்தே, ச்வேத வராஹகல்பே, கலியுகே, ப்ரதமே பாதே, ஜம்பூ த்வீபே, பாரத வர்ஷே, பரத கண்டே, மேரோ : தக்ஷினே பார்ச்வே, ச . . தே, அஸ்மிந் வர்த்தமாநே வ்யாவஹாரிகே ப்ரபவாதீ நாம் ஷிஷ்ட்யா : ஸம்வத்ஸராணாம்மத்யே – நாம ஸம்வத் ஸரே. தக்ஷிணாயநே ( அல்லது உத்திராயணே) – வாஸரயுக் தாயம் – நட்சத்திர யுக்தாயாம், சுபயோக சுபகரண ஏவங்குண விசேக்ஷிண விசிக்ஷ்டாயாம் அஸ்யாம் சுபதி தௌ, மமஜந்மாப்யாஸாத் ஜந்தப்ரப்ருதி ஏகத் ஷிண பர்யந்தம்

அஸ்மித் ஹரித்ராபிம்பே மஹா
கணபதிம் த்யாயாமி மஹா
கணபதிம் ஆவா ஹயாமி
மஹாகணாதிபதியே ஆசனம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே அர்க்யம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே பாத்யம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே ஔபசாரிகஸ்நாநம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே ஸ்நாநந்த்ரம் ஆசமநீயம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே வஸ்த்ரார்த்தம் அட்சதாம் ஸமர்ப்பயாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹாகணாதிபதியே யக்நோப வீதார்த்தம்அட்சதாம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே சந்தாந்தாரயாமி ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே கந்தஸ்யோபரி அட்சதாம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே அலங்கரணார்த்தம் அட்சதாம் ஸமர்ப்பயாமி
மஹாகணாதிபதியே ஹ்ரித்ரா குங்குமம் ஸமர்ப்பயாமி
புஷ்பை : பூஜயாமி

கீழ்க்கண்ட மந்திரங்களைச் சொல்லி புஷ்பம், அட்சதையால் மஞ்சள் பிள்ளையாருக்கு அர்ச்சனை செய்யவும்

ஓம் சுமுகாய நம : ஓம் தூம கேதுவே நம :
ஓம் ஏகதந்தாய நம : ஓம் கணாத்யத ஷாய நம :
ஓம் கபிலாய நம : ஓம் பாலசந்த்ராய நம :
ஓம் கஜகர்ணகாய நம : ஓம் கஜா நநாய நம :
ஓம் லம்போதராயநம ஓம் வக்ரதுண்டாய நம:
ஓம் விகடாய நம : ஓம் சூர்ப்பகர்ணாய நம :
ஓம் பணாதிபாய நம : ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம :
ஓம் மஹா கணாதிபதியே நம : ஓம் ஹேரம் பாயநம
ஓம் விகநராஜாய நம

நாநாவித பரிமள புத்ர புஷ்பாணி ஸமர்ப்பயாமிதூபார்த்தம், தீ பார்த்தம் அட்சதாந் ஸமர்ப்பயாமி.

கீழ்க்கண்ட மந்திரம் சொல்லி வெற்றிலை, பாக்கு பழம் வெல்லக் கட்டியை நிவேதனம் செய்யவும்.

ஓம் பூர்புவஸ்ஸுவ : தத்ஸவிதுர் வரேண்யம் பர்கோதேவஸ்ய தீ மஹிதியோயோ ந : ப்ரசோதயாத்தேவ ஸவித ப்ரஸீவ, ஸத்யம் த்வர்த்தேந பரிஷந்சாம், அம்ரு தேபஸ் தரணமஸி.

ஓம் ப்ராணாய ஸ்வாஹா ஓம் அபாநாய ஸ்வாஹா ஓம் வ்யாநாய ஸ்வாஸா ஓம் உதாநாய ஸ்வாஹா ஓம் ஸ்மாநாய ஸ்வாஹா ஓம் ப்ரஹ்மனெ ஸ்வாஹை.

வ்ரஹ்மணிம ஆத்மாம் ருதத்வாய, மஹாகணுதி பதயே குடகண்ட கதளீ பல நிவேதநம் ஸமர்ப்பயாமி.

மத்யே பாநீயம் ஸமர்ப்பயாமி அம்ருதாபிதா நமஸி, உத்தரா போஜநம் ஸமர்ப்பயாமி தாம் பூலம் ஸமர்ப்பயாமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீராஜநம் ஸமர்ப்பயாமி (கற்பூரம் காண்பிக்கவும்) நீராஜ நாநந்தரம் ஆசம நீயம் ஸமர்ப்பயாமி.

ஏகத்க்ஷிண பர்யந்தம் மத்யே ஸம்பாதவிதா நாம் ஸர்வேஷாம் பாபாநாம் ஸத்ய : அபநோத நார்த்தம் அஸ்மாகம் ஸஹகுடும்பா ஐச்வர்யாணாம் அபிவ்ருத்யர்த்தம், ஸமஸ்தமங்களா வாப்த்யர்த்தம், ஸமஸ்தது ரிதோப சாந்த்யர்த்தம், தர்மார்த்ம், காம் மோக்ஷசதிர்விதபல புலுஷால்த்த ஸித்யார்த்தம், துர்தேவதாபீடித ஸமஸ்த தாபஜ்வராதீனாம் நிவிருத்யர்த்தம், ஸ்ரீதர்ம சாஸ்து : சரணார விந்தையோ நிரந்தர அசஞ்சலா பக்தி ஸித்யர்த்தம், அரோக திடகாத்ர தீர்க்காயுஷ்ய ஸித்யர்த்தம், ஸ்ரீ பூர்ண புஷ்களாம் பிகா சக்தி த்யான, ஆவாஹனாதி சோட சோபசார பூஜாம், அஷ்டோத்ர அர்ச்சனாம் கரிஷ்யே, ததங்கம கலசம் பூஜாம் கரிஷ்யே.

கையிலுற்ற புஷ்பம்அட்சதை வடக்குப் பக்கம் போட்டு விட்டு, மஞ்சள் பிள்ளையாரை வடக்குப் பக்கமாக நகர்த்தி வைக்கவும்.

## ஸ்ரீ தரம்மசாஸ்த்தா அஷ்டோத்திர ஸதநாமங்கள்

| | | |
|---|---|---|
| ஓம் | மஹா சாஸ்தரே | நம: |
| ஓம் | மஹா தேவாய | நம: |
| ஓம் | மஹா தேவஸுதாய | நம: |
| ஓம் | அவ்யயாய | நம: |
| ஓம் | லோக கர்த்ரே | நம: |
| ஓம் | லோக பர்த்ரே | நம: |
| ஓம் | லோக ஹர்த்ரே | நம: |
| ஓம் | பராத் பராய | நம: |
| ஓம் | த்ரிலோக ரக்ஷகாய | நம: |
| ஓம் | தன்வினே | நம: |
| ஓம் | தபஸ்வினே | நம: |
| ஓம் | பூத ஸைனிகாய | நம: |
| ஓம் | மந்த்ரவேதினே | நம: |
| ஓம் | மஹாவேதினே | நம: |
| ஓம் | மாருதாய | நம: |
| ஓம் | ஜகதீச்வராய | நம: |
| ஓம் | லோகாத்யக்ஷாய | நம: |
| ஓம் | அக்ரண்யே | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | ஸ்ரீமதே | நம: |
| ஓம் | அப்ரமேய பராக்ரமாய | நம: |
| ஓம் | ஸிம்ஹாரூடாய | நம: |
| ஓம் | கஜாரூடாய | நம: |
| ஓம் | ஹயாரூடாய | நம: |
| ஓம் | மஹேச்வராய | நம: |
| ஓம் | நாநாசஸ்த்ரதாய | நம: |
| ஓம் | அநர்க்காய | நம: |
| ஓம் | நா நா வித்யா விசாரதாய | நம: |
| ஓம் | நா நா ரூப தராய | நம: |
| ஓம் | வீராய | நம: |
| ஓம் | நாநாப்ராணி நிஷேவகாய | நம: |
| ஓம் | பூஜேசாய | நம: |
| ஓம் | பூஜிதாய | நம: |
| ஓம் | ப்ருத்யாய | நம: |
| ஓம் | புஜங்கபரணோத்தமாய | நம: |
| ஓம் | இக்ஷீதன்வினே | நம: |
| ஓம் | புஷ்ப பாணாய | நம: |
| ஓம் | மஹா ரூபாய | நம: |
| ஓம் | மஹாப்ரபுவே | நம: |
| ஓம் | மாயாதேவீஸுதாய | நம: |
| ஓம் | மான்யாய | நம: |
| ஓம் | மஹா நீதாயே | நம: |
| ஓம் | மஹா குணாய | நம: |
| ஓம் | மஹா சைவாய | நம: |
| ஓம் | மஹா ருத்ராய | நம: |
| ஓம் | வைஷ்ண வாய | நம: |
| ஓம் | விஷ்ணு பூஜகாய | நம: |
| ஓம் | விக்னேசாய | நம: |
| ஓம் | வீரபத்ரே சாய | நம: |
| ஓம் | பைரவாய | நம: |
| ஓம் | ஷண்முகத்ரு வாய் | நம: |
| ஓம் | மேருச்ருங்க ஸமாஸீனாய | நம: |
| ஓம் | முனிஸங்கநிஷேவிதாய | நம: |
| ஓம் | தேவாய | நம: |
| ஓம் | பத்ராய | நம: |
| ஓம் | ஜகந்நாதாய | நம: |
| ஓம் | கணநாதாய | நம: |
| ஓம் | கணேச்வராய | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | மஹா யோகினே | நம: |
| ஓம் | மஹா மாயினே | நம: |
| ஓம் | மஹா ஞானினே | நம: |
| ஓம் | மஹா ஸ்திராய | நம: |
| ஓம் | தேவ சாஸ்த்ரே | நம: |
| ஓம் | பூத சாஸ்த்ரே | நம: |
| ஓம் | பீமஹாஸ பராக்ரமாய | நம: |
| ஓம் | நாக ஹாராய | நம: |
| ஓம் | நாக கேசாய | நம: |
| ஓம் | வ்யோம கேசாய | நம: |
| ஓம் | ஸநாதனாய | நம: |
| ஓம் | ஸுகுணாய | நம: |
| ஓம் | நிர்குணாய | நம: |
| ஓம் | நித்யாய | நம: |
| ஓம் | நித்ய த்ருப்தாய | நம: |
| ஓம் | நிராச் ரயாய | நம: |
| ஓம் | லோகாச் ரயாய | நம: |
| ஓம் | கணாதீசாய | நம: |
| ஓம் | சது: ஷஷ்டி கலாமயாய | நம: |
| ஓம் | ரிக்யஜுஸ்ஸாமாதர்வண ரூபிணே | நம: |
| ஓம் | மல்லகா ஸுரபஞ்ஜணாய | நம: |
| ஓம் | த்ரிமூர்த்தயே | நம: |
| ஓம் | தைத்ய மதனாய் | நம: |
| ஓம் | ப்ரகருதயே | நம: |
| ஓம் | புருஷோத்தமாய | நம: |
| ஓம் | கால ஞானினே | நம: |
| ஓம் | மஹா ஞானினே | நம: |
| ஓம் | காமதாய | நம: |
| ஓம் | கமலேக்ஷணாய | நம: |
| ஓம் | கல்பவ்ருஷாய | நம: |
| ஓம் | மஹாவ்ருக்ஷாய | நம: |
| ஓம் | வித்யா வ்ருக்ஷாய | நம: |
| ஓம் | விபூதி தாய | நம: |
| ஓம் | ஸம்ஹார தாபவிச்சேத்ரே | நம: |
| ஓம் | பசுலோக பயங்கராய | நம: |
| ஓம் | ரோக ஹந்தரே | நம: |
| ஓம் | ப்ராண தாத்ரே | நம: |
| ஓம் | பரகர்வ விபஞ்ஜனாய | நம: |
| ஓம் | ஸர்வ சாஸ்த்ராத்த தத்வக்ஞாய | நம: |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஓம் | நீதி மதே | நம: |
| ஓம் | பாப பஞ்ஜனாய | நம: |
| ஓம் | புஷ்கலா பூர்ணா ஸம்யுக்தாய | நம: |
| ஓம் | பரமா த்மயே | நம: |
| ஓம் | ஸதாங்க தயே | நம: |
| ஓம் | அனந்தாதித்ய ஸம்காசாய | நம: |
| ஓம் | ஸுப்ரஹமண்யானு ஜாய | நம: |
| ஓம் | பலினே | நம: |
| ஓம் | பக்தானு கம்பினே | நம: |
| ஓம் | தேவே சாய | நம: |
| ஓம் | பகவதே | நம: |
| ஓம் | பக்த வத்ஸலாய | நம: |

"ஓம் நானாவித பரிமள பத்ர (மந்திர)
புஷ்பாணி ஸமர்ப்பயாமி"

குழந்தையுளம் கொண்டவர்க்கு
குளத்துப்புழைப் பாலனவன்
குலங்காத்துத் துணையிருப்பான் !
கோடிசுகம் தினந்தருவான்.

## அருள்மிகு ஸ்ரீ ஐயப்பன்
## நூற்றெட்டு சரணக் கோவை

| | | |
|---|---|---|
| ஓம் | கன்னிமூல கணபதி பகவானே | சரணம் ஐயப்பா |
| ஓம் | காந்தமாலை ஜோதியே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஹரிஹர சுதனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | அன்னதான பிரபுவே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆறுமுகன் சோதரனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஆபத்தில் காப்போனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இன்தமிழ்ச் சுவையே | சரணம் ஐயப்பா |
| ஓம் | இச்சை தவிர்ப்பவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈசனின் திருமகனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஈடில்லாத் தெய்வமே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உண்மைப் பரம் பொருளே | சரணம் ஐயப்பா |
| ஓம் | உலகாளும் காவலனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊமைக்கருள் புரிந்தவனே | சரணம் ஐயப்பா |
| ஓம் | ஊழ்வினை அழிப்பவனே | சரணம் ஐயப்பா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் எளியோர்க்கு அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் எங்கள் குலதெய்வமே சரணம் ஐயப்பா
ஓம் ஏழைப் பங்காளனே சரணம் ஐயப்பா
ஓம் ஏகாந்த மூர்த்தியே சரணம் ஐயப்பா
ஓம் ஐங்கரன் தம்பியே சரணம் ஐயப்பா
ஓம் ஐயமெல்லாம்தீர்ப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் ஒப்பில்லாத் திருமணியே சரணம் ஐயப்பா
ஓம் ஒளிரும் திருவிளக்கே சரணம் ஐயப்பா
ஓம் ஓங்காரப் பரம்பொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஓதும் மறைபொருளே சரணம் ஐயப்பா
ஓம் ஔடதங்கள் அருள்பவனே சரணம் ஐயப்பா
ஓம் சௌபாக்கியம்அளிப்பவனே சரணம் ஐயப்பா
ஓம் கலியுக வரதனே சரணம் ஐயப்பா
ஓம் சபரிமலை சாஸ்தாவே சரணம் ஐயப்பா
ஓம் சிவன் மால் திருமகனே சரணம் ஐயப்பா
ஓம் சிவவைணவ ஐக்கியமே சரணம் ஐயப்பா
ஓம் அச்சங்கோவில் அரசே சரணம் ஐயப்பா
ஓம் ஆரியங்காவு ஐயாவே சரணம் ஐயப்பா
ஓம் குளத்துப் புழைப் பாலனே சரணம் ஐயப்பா
ஓம் பொன்னம்பல வாசனே சரணம் ஐயப்பா
ஓம் வில்லாளி வீரனே சரணம் ஐயப்பா
நந்தினி யானாய் நங்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா.

வேதமும் நீயே வேதியள் நீயே
வேகமும் நீயே துர்க்கையளே
நாதமும் நீயே நாற்றிசை நீயே
நாணமும் நீயே நாயகியே
மாதமும் நீயே மாதவம் நீயே
மானமும் நீயே மாயவளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா.

கோவுரை ஜோதி கோமள ஜோதி
கோமதி ஜோதி துர்க்கையளே
நாவுறை ஜோதி நாற்றிசை ஜோதி
நாட்டிய ஜோதி நாச்சியளே
பூவுறை ஜோதி பூரண ஜோதி
பூதநற் ஜோதி பூரணையே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய ஜெய சைல புத்திரி ப்ரஹம
சாரிணி சந்த்ர கண்டினியே
ஜெய ஜெய கூஷ் மாண்டினி ஸ்கந்த
மாதினி காத்யா யன்யயளே
ஜெய ஜெய கால ராத்திரி கௌரி
ஸித்திதா ஸ்ரீநவ துர்க்கையளே
ரோகநி வாரணி சோகநி வாரணி
தாபநி வாரணி ஜெய துர்க்கா.

## ஸ்ரீ காஞ்சி காமாட்சி துதி

| | |
|---|---|
| அருளே அழகே | காமாட்சி |
| அமுதே அரசியே | காமாட்சி |
| அணியே அங்கே | காமாட்சி |
| அனைத்தும் நீயே | காமாட்சி |
| அன்னையும் நீயே | காமாட்சி |
| அகிலம் போற்றும் | காமாட்சி |
| அச்சத்தை போக்குவாய் | காமாட்சி |
| அபயம் தந்திடுவாய் | காமாட்சி |
| ஆனந்த வாழ்வே | காமாட்சி |
| ஆதாரமும் நீயே | காமாட்சி |
| ஆதி சக்தியும் நீயே | காமாட்சி |
| ஆதி சங்கரர் போற்றும் | காமாட்சி |
| ஆதரவு தருவாய் | காமாட்சி |
| ஆடும் மயிலே | காமாட்சி |
| ஆனைமுகனின் அன்னையே | காமாட்சி |
| ஆரம்பவன் நாயகியே | காமாட்சி |
| இமய வாணியின் மகளே | காமாட்சி |
| இன்னல் தீர்ப்பாய் | காமாட்சி |
| இன்பத்தை தருவாய் | காமாட்சி |
| இணையும் உனக்குண்டோ | காமாட்சி |
| இடது பாகம் பெற்றாய் | காமாட்சி |
| இருளை நீக்கிடுவாய் | காமாட்சி |
| இருவிழியால் காத்திடுவாய் | காமாட்சி |
| இயற்கையின் வடிவே | காமாட்சி |
| ஈசனின் துணையே | காமாட்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈஸ்வரி எனையாளும் காமாட்சி
ஈகையின் உருவே காமாட்சி
ஈடில்லா சக்தியே காமாட்சி
ஈருருவானவளே காமாட்சி
ஈரிருங்கரங் கொண்டாய் காமாட்சி
ஈர்த்திடும் பரம்பொருளே காமாட்சி
உலக நாயகியே காமாட்சி
உயர்வுக்கு வழிவகுப்பாய் காமாட்சி
உமையம்மையே காமாட்சி
உண்மை யுருவே காமாட்சி
உள்ளம்கோயில் கொண்டாய் காமாட்சி
உற்றாரும் நீயே காமாட்சி
உறுதுணையாய் வந்திடுவாய் காமாட்சி
உன்னையே தொழுகிறேன் காமாட்சி
ஊசிமுனையில் நின்றவளே காமாட்சி
ஊமையை பேச செய்தவளே காமாட்சி
ஊருக்கெல்லாம் உபகாரியே காமாட்சி
ஊழ்வினை களைவாள் காமாட்சி
ஊக்கம் தருவாள் காமாட்சி
ஊறுகள் போக்குவாய் காமாட்சி
ஊட்டி வளர்ப்பாய் காமாட்சி
ஊரெல்லாம் உன் கோயிலே காமாட்சி
எங்கும் நிறைந்த சக்தியே காமாட்சி
எல்லையில்லா இன்பம் தரும் காமாட்சி
எண்ணத்தில் கலந்து நிற்கும் காமாட்சி
எலுமிச்சை பழவடிவில் காமாட்சி
எந்த நாளும்துணை நிற்பாள் காமாட்சி
எருதேறும் ஈசன் துணையே காமாட்சி
எதையும் தருவாய் துதித்தாளே காமாட்சி
எத்திசையிலும் காட்சி தருவாய் காமாட்சி
ஏற்றம்தரும் அன்னையே காமாட்சி
ஏற்றி வைத்த தீப ஒளியே காமாட்சி
ஏற்றமுடன் காட்சி தருவாய் காமாட்சி
ஏழிசை நாத ஒளியே காமாட்சி
ஏகம்ப உயிரே காமாட்சி
ஏழைக்கிரங்குவரி காமாட்சி
ஏகாந்தமாய் நிற்கும் காமாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏந்துவாள் கரும்பினையே காமாட்சி
ஐங்கரனின் அன்னையே காமாட்சி
ஐந்தரும்பு ஏந்தியவளே காமாட்சி
அந்தணனின் தவம் செய்தாய் காமாட்சி
ஐமுகப் பெருமானின் பக்தியே காமாட்சி
ஐந்தெழுத்தை உச்சரிப்பாள் எப்பொழுதும் காமாட்சி
ஐஸ்வரியத்தை அளித்திடுவாள் காமாட்சி
ஐயத்தை போக்கிடும் அன்னையே காமாட்சி
ஐந்து பூத வடிவினிலே காமாட்சி
ஒடுக்கிடுவாய் கவலையெல்லாம் காமாட்சி
ஒன்பது சக்தி வடிவானவளே காமாட்சி
ஒய்யாரமாய் வீற்றிருப்பாய் காமாட்சி
ஒட்டியாண பீடத்திலிருப்பாள் காமாட்சி
ஒழுக்கத்தை தருவாள் காமாட்சி
ஒற்றை மாவடியில்தவம் செய்தாள் காமாட்சி
ஒன்றே சக்தியென உணர்த்திடுவாள் காமாட்சி
ஒற்றியூரில் வடிவோடு காட்சி தரும் காமாட்சி
ஓம் காரத்திலே உறைத்திடுவாய் காமாட்சி
ஓயாத துன்பத்தை போக்கிடும் காமாட்சி
ஓடிவரும் அடியாரைக் காத்திடுவாய் காமாட்சி
ஓலமிடும் வறுமையை ஓட்டிடுவாய் காமாட்சி
ஒரு கண்ணாலே ஒளி வழங்கும் ஒய்யாரியே காமாட்சி
ஓசைகள் தரும் நாதமே காமாட்சி
ஓங்கும் புகழ் மாங்காட்டின்தெய்வமே காமாட்சி
கவலைகளை தீர்க்கும் கற்பகமே காமாட்சி
கம்பையில் கணவனை தொழுதிட்டாய் காமாட்சி
கருணைக் கனியை காத்தருள் காமாட்சி
கச்சிநாகர்மத்தியிலே விளங்கிவரும் காமாட்சி
கயிலை நாதனின் பத்தினியே காமாட்சி
கதம்ப வனத்தில் வாசம்செய்தாய் காமாட்சி
கற்புக்கு அணிகலமாய் இருந்திடுவாய் காமாட்சி
கண்ணே மணியே என் அம்மையே காமாட்சி
மதுரை மீனாட்சியே என் காமாட்சி
மாயங்கள் பலதை செய்து மயக்கிடுவாய் காமாட்சி
மாளாத துயரினை ஒழித்திடும் காமாட்சி
மாங்கல்யம் வரமருள் மங்கையே காமாட்சி
மாசற்றமணியே அம்மா நீ காமாட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாத தேவியார் சூழ கொழுவிதிருக்கும் காமாட்சி
மாதாவாய் உயிர்க்கெல்லாம்இருந்திடுவாய் காமாட்சி
சிந்தனையை துண்டிக்கும் சின்னமே காமாட்சி
சிங்கார கோயில் கொண்ட அன்னையே காமாட்சி
சித்துக்கள் பலபுரியும் சக்தியே காமாட்சி
சிவனாரின் இடது பாகத்திலிருந்திடுவாய் காமாட்சி
ஸ்ரீ சக்கர நாயகியே சிங்கார காமாட்சியே
ஜெய ஜெய ஸ்ரீ காமாட்சி சரணம்

## ஸ்ரீ மீனாட்சி துதி

### மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் 108 போற்றி

ஓம் அங்கயற்கண் அம்மையே போற்றி
ஓம் அகிலாண்ட நாயகியே போற்றி
ஓம் அருமறையின் வரம்பே போற்றி
ஓம் அறம் வளர்க்கும் அம்மையே போற்றி
ஓம் அரசிளங் குமாரியே போற்றி
ஓம் பிணிமருந்தே போற்றி
ஓம் அமுத நாயகியே போற்றி
ஓம் அருந்தவ நாயகியே போற்றி
ஓம் அருள்நிறை அம்மையே போற்றி
ஓம் ஆலவாய்க் கரசியே போற்றி
ஓம் ஆறுமுகத்தின் அன்னையே போற்றி
ஓம் ஆதியின் பாதியே போற்றி
ஓம் ஆலால சுந்தரியே போற்றி
ஓம் ஆனந்த வல்லியே போற்றி
ஓம் இளவஞ்சிக் கொடியே போற்றி
ஓம் இமயத் தரசியே போற்றி
ஓம் இடபத்தோன் துணையே போற்றி
ஓம் ஈசுவரியே போற்றி
ஓம் உயிர் ஓவியமே போற்றி
ஓம் உலகம்மையே போற்றி
ஓம் ஊழ்வினை தீர்ப்பாய் போற்றி
ஓம் எண்திசையும் வென்றோய் போற்றி
ஓம் ஏகன் துணையே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஐங்கரன் அன்னையே போற்றி
ஓம் ஐயந் தீர்ப்பாய் போற்றி
ஓம் ஒப்பிலா அமுதே போற்றி
ஓம் ஓங்காரசுந்தரியே போற்றி
ஓம் கற்றோர்க் கினியோய் போற்றி
ஓம் கல்லார்க்கும் எளியோய் போற்றி
ஓம் கடம்பவன சுந்தரியே போற்றி
ஓம் கலியாண சுந்தரியே போற்றி
ஓம் கனகமணிக் குன்றே போற்றி
ஓம் கற்பின் அரசியே போற்றி
ஓம் கருணை யூற்றே போற்றி
ஓம் கல்விக்கு வித்தே போற்றி
ஓம் கனகாம் பிகையே போற்றி
ஓம் கதிரொளி சுடரே போற்றி
ஓம் கற்பனை கடந்த கற்பகமே போற்றி
ஓம் காட்சிக்கினியோய் போற்றி
ஓம் காலம் வென்ற கற்பகமே போற்றி
ஓம் கிளியேந்திய கரத்தோய் போற்றி
ஓம் குளச்சிறை காத்தோய் போற்றி
ஓம் குற்றம் பொறுக்கும் குணமே போற்றி
ஓம் கூடற்கலாப மயிலே போற்றி
ஓம் சம்பந்தன் ஞானத்தாயே போற்றி
ஓம் சக்தி வடிவே போற்றி
ஓம் சங்கம் வளர்த்தாய் போற்றி
ஓம் சிவகாம சுந்தரியே போற்றி
ஓம் சிவானந்த வல்லியே போற்றி
ஓம் சிங்கார வல்லியே போற்றி
ஓம் செந்தமிழ்த் தாயே போற்றி
ஓம் செல்வத்துக் கரசியே போற்றி
ஓம் சேனைத் தலைவியே போற்றி
ஓம் சொக்கர்நாயகியே போற்றி
ஓம் சைவநெறி நிலைக்கச் செய்தோய் போற்றி
ஓம் ஞானம்பிகையே போற்றி
ஓம் தமிழர்க்குலச் சுடரே போற்றி
ஓம் தண்டமிழ்த்தாயே போற்றி
ஓம் திருவுடை யம்மையே போற்றி
ஓம் திசையெலாம் புரந்தாய் போற்றி
ஓம் திரிபுர சுந்தரியே போற்றி
ஓம் திருநிலை நாயகியே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் தீந்தமிழ்ச் சுவையே போற்றி
ஓம் தெவிட்டாத தெள்ளமுதே போற்றி
ஓம் தென்னவன் செல்வியே போற்றி
ஓம் தேன்மொழி யம்மையே போற்றி
ஓம் தையல் நாயகியே போற்றி
ஓம் நற்கனியின் சுவையே போற்றி
ஓம் நற்றவத்தின் கொழுந்தே போற்றி
ஓம் நல்ல நாயகியே போற்றி
ஓம் நீலாம் பிகையே போற்றி
ஓம் நீதிக் கரசியே போற்றி
ஓம் பக்தர்தம் திலகமே போற்றி
ஓம் பழமறையின் குருந்தே போற்றி
ஓம் பரமானந்தப் பெருக்கே போற்றி
ஓம் பண்ணமைந்த சொல்லே போற்றி
ஓம் பவளவாய்க் கிளியே போற்றி
ஓம் பல்லுயிரின் தாயே போற்றி
ஓம் பசுபதி நாயகியே போற்றி
ஓம் பாகம்பிரியா அம்மையே போற்றி
ஓம் பாண்டிமா தேவியே போற்றி
ஓம் பார்வதி அம்மையே போற்றி
ஓம் பிறவிப்பிணி தீர்ப்பாய் போற்றி
ஓம் பெரிய நாயகியே போற்றி
ஓம் பொன்மயிலம்மையே போற்றி
ஓம் பொற்கொடி அன்னையே போற்றி
ஓம் மலையத்துவசன் மகளே போற்றி
ஓம் மங்கல நாயகியே போற்றி
ஓம் மழலைக் கிளியே போற்றி
ஓம் மணோன்மணித் தாயே போற்றி
ஓம் மண்சுமந்தோன் மாணிக்கமே போற்றி
ஓம் மாயோன் தங்கையே போற்றி
ஓம் மாணிக்க வல்லியே போற்றி
ஓம் மீனவர்கோன் மகளே போற்றி
ஓம் மீனாட்சியம்மையே போற்றி
ஓம் முழுஞானப் பெருக்கே போற்றி
ஓம் முக்கண்சுடர் விருந்தே போற்றி
ஓம் யாழ்மொழியம்மையே போற்றி
ஓம் வடிவழகம்மையே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் வேலனுக்கு வேல்தந்தாய் போற்றி
ஓம் வேதநாயகியே போற்றி
ஓம் வையகம் வாழ்விப்போய் போற்றி
அம்மையே அம்பிகையே போற்றி போற்றி
அங்கையற்கண் அம்மையே போற்றி போற்றி.

## ஸ்ரீ கருமாரியம்மன் ஸ்தோத்திரம்

கற்பூரநாயகியே கனகவல்லி
காளி மகமாயி கருமாரியம்மா!
பொற்கோவில் கொண்டசிவ கருமாரியம்மா!
பூவிருந்த வல்லிதெய்வ யானையம்மா!
விற்கோல வேதவல்லி விசாலாட்சி!
விழிக்கோல மாமதுரை மீனாட்சி!
பொற்கோவில் தானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழ்விப்பாய் என்னைநீயே (கற்பூர)

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி!
புரமெரித்தோன் புளமிருக்கும் பரமேஸ்வரி!
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி!
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி!
கவலைகளைத்தீர்த்துவிடும் காளீஸ்வரி!
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி!
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி. (கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறுஎந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயே எந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில் மற்ற
அன்னியரைக்கெஞ்சிடுதல் முறையோ - அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா!
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா!
சின்னவனின் குரல்கேட்டுன் முகம்திருப்பு !
சிரித்தபடி என்னைத்தினம் வழிஅனுப்பு! (கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னையே நாடவேண்டும்
பண்ணமைக்கும்நாஉனையே பாடவேண்டும்
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடைய தாகவேண்டும்
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா!
மகனுடைய குறைகளை நீ தீருமம்மா! (கற்பூர)

நெற்றியினுள் குங்குமமே நிறையவேண்டும்
நெஞ்சினிலும் திருநாமம் வழியவேண்டும்
கற்றதெல்லாம்மென்மேலும் பெருகவேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்
சுற்றமெலாம்நீடுழி வாழவேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆ்ளவேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா!
மடிமீது பிள்ளைஎன்னைத் தள்ளலாமா! (கற்பூர)

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ !
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ !
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ !
கன்றுக்கு பசுவன்றி சொந்தமுண்டோ !
முன்னைக்கும் பின்னைக்கும்பார்ப்பதுண்டோ !
முழுமைக்கும் நீஎந்தன் அன்னையன்றோ !
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ !
என்றைக்கும்நானுந்தன் பிள்ளையன்றோ ! (கற்பூர)

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்
அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்கவேண்டும்
வஞ்சத்தை என்னெஞ்சம்அறுக்கவேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசைவேண்டும்
பரிவுக்கே நான்என்றும் பணியவேண்டும்
என்பக்கம் இவையெல்லாம்இருக்கவேண்டும்
என்னோடு நீஎன்றும் வாழவேண்டும் (கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை!
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை!
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை!
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை
செம்பவள வாயழகி ! உன்னெழிலோ
சின்னஇரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னைஎன்றும்
அடிபணியும்ஆசைக்கோர் அளவில்லை. (கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய் !
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயேஉன்னை
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை
(கற்பூர)

## ஸ்ரீ காளியம்மன் அருள்மாலை

கந்தவீர மாகாளி கமல மங்கலை
கருணையான வடிவழகி கனிந்து நின்றனை
விந்தையாகி விளக்குமாகி விளங்கி வந்தனை
விண்ணுமாகி மண்ணுமாகி வெற்றி கண்டனை
மந்தமான புத்தியோட்டி மணமும்தந்தனை
மலரில்வேதன் உன்னைப்பாட மயக்கம் தீர்த்தனை
சொந்தமான காளியம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வளிக்க என்றும்தங்குவாய் !

நந்தவீர மாகாளி நயன மாலினி
நம்பிவந்த எம்மிடையேநலனும் காட்டுவாய்
இந்தவாழ்வில் உன்னையன்றி இங்கு யாருளார்
இன்றுநல்ல காலைவந்து இனிமை கூட்டுவாய்
மந்தையாடு போலவாழ்வில் மயங்கி நில்லாமல்
முத்தியொடு செல்வபோகம் முழுவதும் நாட்டுவாய்
சொந்தமான காளியம்மா இந்த் நாள்முதல்
எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குவீர மாகாளி பொய்மை தீர்மணி
பொறுமையோடு பெருமையாகிப் பொருளும் கூட்டினாய்
எந்தையான சிவனைத்தூது எடுத்து அனுப்பினாய்
எழிலியாகி எண்ணமாகி என்னுள் ஆடினாய்
பந்தணைந்த விலரிநீயும்பகைமை என்றதும்
பரந்துவந்து படைகளோட்டிப் பசுமை காட்டினாய்
சொந்தமான காளியம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய்!

விந்தைவீர மாகாளி விரைந்து வந்திடின்
சொந்தநோயும் வந்தநோயும் தொலைவில் ஓடிவிடும்
எந்தமாயம் எம்மைத்தேடி வந்த போதிலும்
என்னையீன்ற தாய்நினைப்பில் எரிந்து போய்விடும்
சிந்தைவாழும் உந்தன்மஞ்சள் சிறிது பூசிடின்
கந்தனோடு கரியன்நீல கண்டன் காணலாம்
சொந்தமான காளியம்மா இந்த நாள்முதல்
எந்தனோடு வாழ்வளிக்க என்றும் தங்குவாய்!

ஆதிசக்தி சோதிசக்தி ஆளவந்த சக்தியே
ஆகமங்கள் ஆனசக்தி ஆத்மசோதி சக்தியே
நீதிசக்தி நித்யசக்தி நீறுபூசும்சக்தியே
நீலிசக்தி நிருத்தசக்தி நீலமேனி சக்தியே
காதிசக்தி கானசக்தி காணுமின்ப சக்தியே
காளிசக்தி காயசக்தி காட்சிதந்த சக்தியே
வீரசக்தி தீரசக்தி வீடுகாக்கும் சக்தியே
சூரசக்தி சூலிசக்தி சூழும்சக்தி சக்தியே.

## சந்தோஷி மாதா துதி

அருண கிரண மணி கோடிகள் ஒலிசெய
அமுத மதுர மலர் அரியணை மீதினில்
அகிலம்முழுவதும் கொலு வீற்றிருந்தருள் தரும்
ஆதி தேவியே அம்மா - எனை
ஆற வா வா வா அம்மா.
ஜயசந் தோஷி ஜெயசந் தோஷி
ஜெயசந் தோஷி மாதா . . . !
ஜெயசந் தோஷி ஜெயசந்தோஷி
ஜெயங்களும் நீயே தாயே . . . !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெயமங் களமே ஜெயமங் களமே
ஜெயமங் களமே தேவி . . . !
சுபமங் களமே சுபமங் களமே
சுபமங் களமே தாயே . . . !
ஜெயங்களும் நீயே தாயே
சுபங்களும் நீயே தாயே . . !
ஜெயங்களும் நீயே தாயே . . !
சுபங்களும் நீயே தாயே . . !

## இலக்குமி துதி

சித்தம் தெளிந்திடும், செய்வினை யாவும் திருத்தமுறும்
நித்தம்மறிந்தெழு செல்வமும்தங்கி நிலைபெறும் நல்
முத்தர்க்குரிய பெரும்பதம் வாய்க்கும், இம்மூதுலகில்
பக்தர் கருளும்திருமகள் பாதம் பணிபவர்க்கே

–தேசிகவிநாயகம்பிள்ளை

நித்தமுனை வேண்டி மனம்
நினைப்பதெல்லாம்நியாயப்
பித்தனைப் போல் வாழ்வதிலே
பெருமையுண்டோ ? திருவே !
சித்தவுறுதி கொண்டிருந்தார்
செய்கையெல்லாம் வெற்றி கொண்டே
உத்தமநிலை சேர்வரென்றே
உயர்ந்த வேதமுரைப்ப தெல்லாம்
சுத்த வெறும் பொய் யோடி ?
சுடர் மணியே ! திருவே !
மெத்தமயல் கொண்டு விட்டேன்
மேவிடுவாய் திருவே !

–பாரதியார்

பொன்னரசி நாரணனார் தேவி, புகழரசி
மின்னு நவ ரத்தினம் போல் மேனியழகுடையாள்
அன்னையவள் வையமெல்லாம் ஆதரிப்பாள் ஸ்ரீ தேவி
தன்னிரு பொற்றாளே சரண்புகுந்து வாழ்வோமே.

–பாரதியார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மங்கையர்க்கு ஏற்ற குங்குமக்கவசம்

இல்லத்தில் மாலைப்பொழுதில் விளக்கு ஏற்றி வைத்துக் குங்குமத்திலகம் இட்டுக் கொண்டு படிக்க ஏற்ற கவசம்.

குங்குமமாவது குறைகளைத்தீர்ப்பது
குங்குமமாவது குடியினைக் காப்பது
குங்குமமாவது குணமது அளிப்பது
குங்குமமாவது கொல்வினைத் தீர்ப்பதே.

விதிதனை வெல்வது விமலையின் குங்குமம்
நிதிகளை ஈவது நிமலையின் குங்குமம்
பதிதனைக் காப்பது பதிவிரதை குங்குமம்
கதிகளை ஆள்வதும் கருத்தான குங்குமம்

தஞ்சமென் றோரைத்தடுத்தாட் கொள்வது
பஞ்சமா பாதகம் பரிந்துமே தீர்ப்பதும்
அஞ்சின பேருக்கு அபய மளிப்பதும்
காஞ்சி காமாக்ஷி கருணைக் குங்குமம்

நற்பத மீவது நாரணிக் குங்குமம்
பொற்பிணை ஈவது பூரணிக் குங்குமம்
சிற்பர மாவது ஸ்ரீசக்ர குங்குமம்
கற்பினைக் காப்பதும் காரிகைக் குங்குமம்

செஞ்சுடர் போன்றது சீரான் குங்குமம்
கொஞ்சும் அழகைக் கொடுப்பதும் குங்குமம்
ஐந்து புலன்கள் அடக்கி யருள்வதும்
காசி விசாலாக்ஷி சனிவாம் குங்குமம்

நோயினைத்தீர்ப்பதும் நுண்ணறி யீவதும்
பேயினைத் தீர்ப்பதும் பெரும் புகழீவதும்
சேயினைக் காப்பதும் செல்வம் தருவதும்
தாயினை அருச்சித்த தன்னொளிக் குங்குமம்

சக்தி கொடுப்பதும் சத்தியம்காப்பதும்
பக்தி அளிப்பதும் பரகதி யீவதும்
முக்தி கொடுப்பதும் மும்மலம் தீர்ப்பதும்
சித்தி தருவதும் சிறந்த குங்குமம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சிற் கவலைகள்நீக்கி யருள்வதும்
செஞ்சொற் கவிபாடும் சீரினை யீவதும்
வஞ்சப் பகைவரை வாட்டி யருள்வதும்
மதுரை மீனாக்ஷி மங்கலக் குங்குமம்

சிவசிவ என்றுமே திருநீறணிந்த பின்
தவமான மேலோருந் தரித்துக் களிப்பதும்
சிவகாமி யேஎன சிந்தித் தணிவதும்
பவவினைத்தீர்ப்பதும் பராசக்தி குங்குமம்

எவையெவை கருதிடின் அவையவை யீவதும்
நவவகை சக்தியின் நலனைக் கொடுப்பதும்
குவிசெய் கரத்துடன் கும்பிட்ட பேருக்கு
குவிநிதி யீவதும் குலநலக் குங்குமம்

அஷ்டலெக்ஷ்மி அருள் தந்தளிப்பதும்
இஷ்டங்களீவதும் ஈடற்ற குங்குமம்
கஷ்டம் தவிர்த்தென்னை காத்தருள்வதும்
அஷ்டஸ்ரீ சக்ர ஆனந்தக் குங்குமம்

குஷ்ட முதலான மகாரோகந் தீர்ப்பதும்
நஷ்டம் வராதொரு நலனைக் கொடுப்பதும்
எட்டிரண்டோர் அறிவித்தோர் வீடினைக்
கிட்டவே செய்வதும் கேண்மைக் குங்குமம்

பட்ட காலிலே படுமெனக் கஷ்டங்கள்
விட்டி டாமலே வந்து வாட்டினும்
பட்டான பார்வத பாதம் பணிந்தே
இட்டார் இடர்தவிர்க்கும் இனிய குங்குமம்

சித்தந்தனைச் சுத்தி செய்வதர்க் கெளியதோர்
எத்துத் தெரியாதே ஏமாந்த மாந்தரே!
நித்தம் தொழும் அன்னை குங்குமம் தன்னை
நித்தியம்தரித்துமே மேன்மை அடைவோம்.

மிஞ்சும் அழகுடன் குங்கும ஆடைகள்
செஞ்சுடர்ஆகுமோர் ஸ்ரீசக்கரம் ஈஸ்வரியின்
கஞ்சமலர் முகம் தன்னில் திகழ்வதும்
பஞ்ச நிதிதரும் பண்புக் குங்குமம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன விருத்தி மாலை

1. தனலெக்ஷ்மி

பொங்கு தனக்கரத்தாள் பொற்புடைய சக்கரத்தாள்
எங்குநலம்தருகின்ற எழிற்கரத்துத் தாமரையாள்
தங்குகின்ற கமலத்தில் தளிரடிகள் தாம்வைத்தாள்
தங்கரத்தால் தண்மைதரு தனமகளே போற்றியம்மா!

2. ஆதிலெக்ஷ்மி

சோதிமிக வுடையாள் சோம்பற்ற மனமுடையாள்
தாதியரின் புடைசூழத் தாவிவரும் தார்மிகத்தாள்
பூதிமிகு மலரபய பூரணநல் வரதத்தாள்
ஆதியிலும் ஆதியளே ஆதித்திரு போற்றியம்மா !

3. தான்யலெக்ஷ்மி

எண்கரத்தில் ஏற்புடைய எழிற்படைகள் ஏற்றவளே
பண்புடைய பகவதியே பலக்கதையும் பெற்றவளே
கண்படைத்த பயனாகக் களிப்படைய வந்தவளே
மண்செழிக்கத்தானியநல்மணிதந்தாய் போற்றியம்மா !

4. வீரலெக்ஷ்மி

சூலமொடு அபயத்தாள் சூழ்ச்சியற்ற வரதத்தாள்
காலனவன் கால்நடுங்கு கதிர்ஒளியின்சக்கரத்தாள்
நீலத்திரை யமுதத்தாள் நீற்காநற் புகழுடையாள்
மாலவனார் மனமகிழும்வீரத்திரு போற்றியம்மா !

5. கஜலெக்ஷ்மி

தடாகத் தாமரையாள் தண்மைமிகு தவவடிவாள்
அடாஅத் துயரமதை அழிக்கின்ற அருளடியாள்
வீடாநற் றனமழையாள் விளங்கானைத் துதியடியாள்
படாகக் கரியிலர்வாள் பண்ணடிகள் போற்றியம்மா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **சந்தானலெக்ஷ்மி**

அன்புடையாள் அறுகரத்தாள் அன்னையிலும் அன்னை யவள்
இன்புடையாள் கேடகத்தாள் இடர்நீக்கு வாளுடையாள்
மன்புகழின் மலர்க்கரத்தே மகவுடனே யாதுடையாள்
சந்தனத்தாய் சந்தானப் பெருக்குடையாய் போற்றியம்மா!

7. **விஜயலெக்ஷ்மி**

வாளுடனே சாரங்கம் வார்புகழின் சுதர்சனமும்
ஆளுடைய கேடயமும் ஆண்டருளும் எண்கரத்தி ;
நாளுடனே நாற்புகழும் நாரணர்க்குத்தாமளித்த
தாள்மலரும் தனிவெற்றித் தாயே நீ போற்றியம்மா !

8. **ஐஸ்வர்யலெக்ஷ்மி**

நாற்கரத்து நாயகியாள்நாற்றிசையின் நல்வினையாள்
கார்மேகம் போல் தனத்தைக் காத்திடவே பெய்திடுவாள்
நூற்புலவர் தம்முகத்தாள் நூதனத்தின் ஒருவடிவாள்
பாற்புணியும்அயிசுவரியப்பாவையளே போற்றியம்மா !

**பலன் மொழி:**

அட்டத்திரு மகளாண் அருள்வீசும் அன்னைபுகழ்
இட்டவெள்ளிமங்களத்தில் இருந்தபடி இரந்துரைப்பார்
துட்டத்துயர் தொலைவேகும்; துணிவுபுகழ் அருகாகும் ;
முட்டமுட்டப் பொருள்குவித்து முன்னின்று வாழ்ந்திடுவார் !

## அஷ்டலெட்சுமி வணக்கம்

எந்தத் தேவியானவள் சகல உயிர்களிலும் சக்தி உருவில் நிற்கிறாளோ அந்தத் தனலெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் புத்தி உருவில் விளங்குகிறாளோ அந்த வித்யா லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் பசியைத்தீர்க்கும்தான்ய உருவில் உள்ளவளோ அந்தத் தான்ய லெட்சுமியை நான் வணங்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் மகிழ்ச்சி உருவில் உள்ளவளோ அந்த வீரலெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் மகிழ்ச்சி உருவில் உள்ளவளோ அந்த சௌபாக்ய லெட்சுமியை நான் வணங்குகின்றேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிர்களுக்கும் தாயாக விளங்குகிறாளோ அந்தச் சந்தான லெட்சுமியை நான் வணங்குகின்றேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிர்களுக்கும் கருணை உருவில் காட்சி தருகிறாளோ அந்தக் காருண்ய லெட்சுமியை நான் வணங்குகிறேன்.

எந்தத் தேவியானவள் எல்லா உயிரினங்களிலும் மங்கள நாயகியாய் விளங்குகிறாளோ அந்த மகாலெட்சுமியை நான் வணங்குகிறேன்.

## சரஸ்வதி துதி

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்து வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம்வைத்த தாய்.

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வளென் உள்ளத் தினுள்ளே
இருப்ப ளிங்கு வாரா திடர்.

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரை போற்கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமுந் துதித்தாற்
கல்லுஞ் சொல்லாதோ கவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபர சுவாமிகள் அருளிய

# சகலகலா வல்லிமாலை

## உள்ளக் கமலத்தில் உறைய வேண்டுதல்

வெண்டா மரைக்கன் றிநின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மலைக்குத் தகாதுகொ
லோ சகமேழுமளித்
துண்டா னுறங்கவொழித் தான்பித்
தாகவுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

## நாற்கவி பாட நல்லருள் தருவாய்

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைப்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

## கலைமகள் அருளிற் குறிக்க விரும்புதல்

அளிக்கும் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியும் வாக்கும் பெருகிடச் செய்வாய்

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே.

## நெஞ்சத் தடத்தினில் நிலவ வேண்டும்

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத்தடத்தல ராததென்
னேநெடுந் நாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந்
நாவு மனமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய்
சகல கலாவல்லியே.

## பண்ணும் பரதமும் நல்கிட வேண்டுதல்

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும் யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமரையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங்காலுமன்பர்
கண்ணுங் ,கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

## பாட்டும் பொருளும் பயனும் கூட்டுவாய்

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டுதொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும் வெள்ளோ திமப்பேடே
சகல கலாவல்லியே.

## சொல்லின் வன்மை பருகிட வேண்டுதல்

சொல்விற் பனமு மவதான
முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யந்தத்தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே.

## சொற்கும் பொருட்கும் உயிராய் இருப்பவள்

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின்தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலத் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே.

## மன்னர்தன்னையும் பணியச் செய்வாய்

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பினுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மன் பஜனை பாடல்

சமயபுரத்தாளே மாரியம்மா - அம்மா
சங்கரியே எங்கள் முன்னே வாருமம்மா (சமயபுரத்தாளே)

மல்லிகைச் சரம் தொடுத்து மாலையிட்டோம்
அரிசி மாவிளக்கு ஏற்றி வைத்து
பொங்கலும் வைத்தோம்
துள்ளியே எங்கள்முன்னே வாருமம்மா
அம்மா தூயவளே என் தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)

பட்டு பீதாம்பரத்தில் தாவணியும் - உனக்கு
பாவாடை சேலைகளும் கொண்டு வந்தோம்
எட்டு திசைகளையும் ஆள்பவளே
அம்மா ஈஸ்வரியே என் தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)

கத்தி கதறுகிறோம் கேட்கலையோ
தாயே கல்லேதான் உன் மனமும் கரையலையோ
உலகமே ஆடுதம்மா உன் சிரிப்பிலே
எங்கள் உமையவளே தாயே மாரியம்மா (சமயபுரத்தாளே)

காலிற் சலங்கை ஒலி காதைத் துளைக்குதம்மா
பாவாடை தாவணியும் தானாக ஆடுதம்மா
பூவாடை வீசுதம்மா பூமுகளே உனக்கு
பாமாலை கொண்டு வந்தோம் பாரம்மா (சமயபுரத்தாளே)

உலகத்து நாயகியே எங்கள் முத்து மாரியம்மா
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
உன் பாதம் சரண்அடைந்தோம்
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
கலகத்தரக்கர் பலர்
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
கருத்தினுள்ளே புகுந்துவிட்டாள்
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
பலகற்கும் பலகேட்கும்
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
பயனொன்றும் இல்லையடி
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையெங்கும் காணவில்லை
எங்கள் முத்துமாரியம்மா - எங்கள் முத்துமாரி
நின்பாதம் சரணடைந்தோம்
எங்கள் முத்துமாரியம்மா - உங்கள் முத்துமாரி

ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீ மாதா ஜெய ஜகன்மாதா
ஓம் மாதா ஓம் மாதா
ஸ்ரீ மாதா ஜெயலலிதாம்பா

சந்தமௌலீஸ்வரி சங்கரி சங்கரி //
மங்களப் ரதாயினி மதனகோடி சுந்தரி //
மாதவஹரி சோதரி தேவி ஜெகன் மோகினி //
(சுந்ரமொளி)

அஞ்சாத செஞ்டாச்சி மாகாளி
ஆதிசிவன்பத்தினியே திரிசூலி (அஞ்சாத)

கொஞ்சும் சதங்கை ஒலி கேட்குதம்மா - உன்
கெண்டை கூத்துக்கண்டு மனம் குளிருதம்மா (அஞ்சாத)

செஞ்சடையை அலங்கரிக்கும் நாகம்மா - உன்
தேகமெல்லாம் விளையாடும் நாகம்மா (அஞ்சாத)

பாலாபிஷேகம் செய்து மாகாளி - உன்
பாதம் தனை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)

தேனாபிஷேகம் செய்து மாகாளி - உன்
சேவடியை சேவித்திடுவோம் திரிசூலி (அஞ்சாத)

செவ்வரளி மாலை போட்டு மாகாளி - உனக்கு
செய்திடுவோம் பூஜைகளும் திரிசூலி (அஞ்சாத)

மல்லிகைப்பூ சரம் தொடுத்து மாகாளி - உந்தன்
மலரடியை தொழுதிடுவோம் திரிசூலி (அஞ்சாத)

சமயபுர மாரியம்மா மாகாளி - எங்கள்
சஞ்சலங்கள்தீர்த்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்காட்டு கருமாரி மாகாளி - அம்மா
எங்களை நீ காத்திடுவாய் திரிசூலி (அஞ்சாத)

அம்மா முத்துமாரி எங்கள் அழகு முத்துமாரி
ஆனந்தமாய் வீற்றிருப்பாள் அன்னை முத்துமாரி
எங்கும் நிறைந்திருப்பாள் எங்கள் முத்துமாரி
எங்கள் குலம் காக்க வந்திடுவாள்அன்னை முத்துமாரி
(அம்...)

மஞ்சள் முகத்தழகி எங்கள் முத்துமாரி
மங்காத ஜோதி அவள் எங்கள் முத்துமாரி
உலகனைத்தும் காப்பவளே அம்மா முத்துமாரி
உன்பாதம் சரணடைந்தோம் அம்மா முத்துமாரி
(அம்...)

சபரியிலே கோயில் கொண்ட எங்கள் மஞ்சமாதா
மங்கயரை காத்தருளும்அன்னை மஞ்சமாதா
மாங்கல்யம் தந்திடுவாய் எங்கள் மஞ்சமாதா
மாளிகை புரத்தழகி அன்னை மஞ்சமாதா

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்
ஷுந்தரவதனி ஸுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்காலமுடனே
தந்திடுவா யுந்தன்தரிசனமே

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ்பாடிடுதே.

தங்கச்சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன்மகிழ்ந்திட
பொங்கு மானந்தமுடன் புலிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய்

வேதங்கள் உன்னை வேண்டிப்பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
ஸதானந்த மான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயபுர மாரியம்மன்

சக்தி மிகுந்தவளே சமயபுர மாரியம்மா
உன் புகழைப்பாடிடவே ஓடி வருவாயம்மா
பாலாபிஷேகம்செய்து பார்த்து மகிழ்ந்து இருந்தோம்
நெய்யாபிஷேகம் செய்து நெக்கு உருகப் பாடி நின்றோம்.
பூ மஞ்சள் காரியே சமயபுர மாரியம்மா
புன் சிரிப்பு உள்ளவளே சமயபுர மாரியம்மா
கேட்டவரம் கொடுக்கும்கீர்த்தி உள்ள சமயபுரம்.
வந்தேன் தந்தேன் என்று அபயம் அளித்திடுவாள்
பாடுகின்றோம் தேடுகின்றோம் உன்னையே காணாது
வேண்டியே காணுகின்றோம் தரிசனமே தாருமம்மா
அன்னை நீ என்று நான் உன்னைத் துதிக்க
அழைத்தால் வந்திடுவாய் ஆனந்தமே தந்திடுவாய்
சஞ்சலங்கள் போக்கிடுவாள் சமயபுர மாரியம்மா
சந்தோஷம்அளித்திடுவாள் சமயபுர மாரியம்மா
வேப்பிலைக்காரி அவள் சமயபுர மாரியம்மா
வேண்டும் வரம் தருவாள் சமயபுர மாரியம்மா.

## மீனாட்சி அம்மா

அன்பின் உருவமவள்மீனாட்சி . . . !
ஆற்றலில் சக்தியவள் மீனாட்சி . . . !
இன்னல்கள் தீர்த்திடுவாள் மீனாட்சி . . .!
ஈசனின் உடல் பாதி மீனாட்சி . . . !
உலகத்தை ஆள்பவளாம் மீனாட்சி . . . !
ஊக்கங்கள் தந்திடுவாள்மீனாட்சி . . . !
எதிலும் விளங்கிடுவாள் மீனாட்சி . . . !
ஏற்றம் பல கொடுப்பாள் மீனாட்சி . . . !
ஐயம் போக்கிடுவாள் மீனாட்சி . . . !
ஒப்பில்லா நாயகியாம் மீனாட்சி . . . !
ஔவிடதம் நீ வாழ்வினிலே மீனாட்சி . . . !
ஃதே நான் வேண்டுவதும் மீனாட்சி . . . !

காஞ்சி காமாட்க்ஷி மதுரை மீனாட்க்ஷி
காசி விசாலாட்க்ஷி
கருணா நிலயே யோக ஹ்ருதயே
ஆதி பராசக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிபராசக்தி ஜய ஜய ஆதி பராசக்தி
ஆதிபராசக்தி ஜய ஜய மாத பராசக்தி
கன்ய குமாரி திரிபுரசுந்தரி
ஆதி பராசக்தி
ஆதி பராசக்தி ஜய ஜய ஆதி பராசக்தி
ஆதி பராசக்தி ஜய ஜய மாத பராசக்தி

யாதுமாகி நின்றாய் - தாயே
எங்கும்நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல் களன்றி யில்லை
போதுமிங்கு மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்
ஆதிசக்தி தாயே என் மீ
தருள்புரிந்து காப்பாய்.

எந்த நாளும் நின்மேல் - தாயே
இசைகள் பாடி வாழ்வேன்
கந்த னைப்ப யந்தாய் - தாயே
கருணை வெள்ள மானாய்
மந்த மாரு தத்தில் - வானில்
மலையினுச்சி மீதில்
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன்
செம்மை தோன்றுமன்றே. (யாது)

## அனாதை நான் அம்மா

அனாதை நான் ஆதரிப்பாய் அம்மா !
அகிலாண்ட நாயகியே . . ! ஆதிபராசக்தி நீயே . .
(அனாதை)

கவலை தீர்க்கும் கற்பகமாய் காஞ்சியிலே விளங்குகின்றாய் !
காலமெல்லாம்நலம் பெறவே காசியிலே வீற்றிருப்பாய் !
மானிடர்க்கு வாழ்வளிக்க மதுரையிலே அமர்ந்திருப்பாய் - நம்
மனக்குறையைத்தீர்ப்பதற்கே மாங்காட்டில் வடிவெடுத்தாய்!
(அனாதை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறுவாரம் தொடர்ந்து வந்து வணங்கிடுவேன் உன்னையம்மா
அருள்மாரி பொழிந்திடுவாய் அகத்தினில் நிறைந்திடுவாய்
என்குறையை நீயறிவாய் என்துயர் நீ உணர்வாய் !
உன்பதமே என்னிதயம் எந்நாளும் நினைக்கச் செய்வாய்
(அனாதை)

தாயுண்டு தந்தையுண்டு, பந்தமுண்டு சொந்தமுண்டு
யாரிருந்தும் என்ன பயன் தாயே உன் அருளிலையேல்
சேயாக ஏற்றிடுவாய் சேவடி வணங்குகின்றேன் !
தாய் சேயை அணைப்பது போல் அரவணைத்துக்காத்திடுவாய்
(அனாதை)

"ஓம் சக்தியே"

## சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி
## மேல்மருவத்தூர்

மாதா வாழும் மருவத்தூர் - அருள்
வாக்குப் பிறக்கும்மருவத்தூர்
ஓதா நாவும் ஓதும் வண்ணம்
ஒளியை ஏற்றும் மருவத்தூர் !
(அந்த மாதா வாழும்)

அணி அணியாக அடியார் கூட்டம்
அம்மா முன்னே தேடி வருக
மணிமணியான வார்த்தைகளாலே
வந்தவர் துன்பம் ஓடிவிடும்
(அந்த மாதா வாழும்)

தன்னையும் அறியாள் தாயையும் அறியால்
சஞ்சலத்தோட ஒரு பிள்ளை
அன்னியம் இல்லை அவளையும் அன்பால்
அரவணைப் பாளே நம்அன்னை
(அந்த மாதா வாழும்)

பொன்னல் எடுத்த கோயிலிலே சில !
பூதம்புகுந்து நடமாடும்
அன்னையின் கையில் வேப்பிலையால்அது!
ஆண்டவன் வாழும் இடமாகும் !
(அந்த மாதா வாழும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேற்று நடந்தது இன்று சொல்வாள்; நாளை
நேரே வருவது கண்டு சொல்வாள் !
மாற்று நினைத்தால் மாற்று வைப்பாள் ; அவள்
வழித்துணையாகவும்முன்பு சொல்வாள் !
(அந்த மாதா வாழும்)

அம்மா அம்மா என்றவர் தோளில்
ஆயிரம் ஆயிரம் மாலைகளாம் !
சும்மா கிடந்த தரிசு நிலத்திலும்
சொர்க்க சுகந்தரும் சோலைகளாம் !
(அந்த மாதா வாழும்)

பெற்றவள் அறிவாள் அத்தனை நினைவும்
பேதை மனமே துள்ளாதே !
பற்றிய கொள்கை விட்டு விடாதே
பலன் உண்டாகும்அவளாலே.
(அந்த மாதா வாழும்)

## பகவதி சரணம் ஜகதாம்பா

சரணம் சரணம் ஜகதாம்பா சரணம் தருவாய் - ஓம்காளி
சோட்டானிக் கரையில்நின்றிடுவாய் சொல்லிபய - குறைகளைத்
தீர்த்திடுவாய்
மதுரையில் வாழ்ந்திடும்மீனாட்சி மனக்குறையெல்லாம் தீர்த்திடுவாள்
அங்கயற்கன்னி என்பவளாம் அடியார் சக்தியை
கொண்டவளாம் சரணம் சரணம் ஜகதாம்பா
நெல்லையிலே அவள் காந்திமதி தில்லையிலே அவள் சிவகாமி
காஞ்சியிலே வாழ்ந்திடும் காமாட்சி காசியில் வாழும் விசாலாட்சி
திருக்கடையூரில் அபிராமி திருவேற்காட்டில் கருமாரி
அழைத்ததும் ஓடி வந்திடுவாள் அல்லலையெல்லாம் போக்கிடுவாள்
சரணம் சரணம் ஜகதாம்பா
சமரச குணத்தைக்கொண்டவளாம் சமத்துவ நிதியை சொல்பவளாம்
சமய புரத்து மகமாயி தக்க சமயத்தில் வந்திடுவாள்
தேவி மஹாத்மம் சொல்பவருக்கு இந்த தெய்வங்கள்அனைத்தும்
அருள் தருமாம்
தேவி ராஜேஸ்வரி ஊகாவாள்அவள் தெய்வீகச்சக்தியை யாரறிவார்
குங்கும மகிமையா தந்தவளாம் வங்கண பூஷிக
ரெங்கனியாம்மங்கள கௌரி என்பவளாம் மங்காத
ஒளியாய் இருந்திடுவாள் சரணம் சரணம் ஜகதாம்பாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புன்னை நல்லூர் தாயே

உலகம் ஓங்கிட அருள்பொழிகின்ற
ஓம்மகா மாயிபள் ளியெழுச்சி நான்பாட
கலைநலம் ஞானம் காரிய வெற்றியும்
கணத்திலே தருமகா கணபதி போற்றி
அலை தமிழ்ப் புனலில் அகத்தினைத்தோய்த்தே
அகப்படுகின்ற பொருளினைச் சேர்த்தே
நிலைதரும் பாவை நின்று நான்பாட
நித்தமு மருள்வாய் மத்தகத்தோனே !
பாற்கடல் வந்தெனப் பாற்குடம் தூக்கிப்
பக்தர்தம் பாடற் கடலொலி போட
வேப்பிலைக் கரம் உடுக்கை ஒலிக்க
விரைந்துமே யுன்றன் கோயில் புகுந்தார்
காத்திடு தாயே மாரியே யென்று
கன்னத்தில் போட்டு வேண்டிடு கின்றார்
ஏந்துவோர் கட்கெல்லாம் எழில் நலமளிக்க
எழுந்தருள் வாயே புன்னைநல்லூர் தாயே !

## காளியம்மா ஓடி வாம்மா

ஓசை மணிக் காளியம்மா ஓடிவாம்மா
ஓடி வந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
சலங்கையொலி சலசலக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
பட்டாடை பளபளக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
மஞ்சள் முகம் மினுமினுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
தங்க முகம்தளதளக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
செங்கை நீரும் கிலுகிலுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
மகிழ்ச்சியுடன் சிலுசிலுக்க ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா
வேதங்கள் முழங்கிடவே ஓடிவாம்மா
வேதனைகள் தீர்த்திடவே ஆடிவாம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செம்பவளப் பேரழகி ஓடிவாம்மா
செல்வ மழை பொழிந்திடவே ஆடிவாம்மா
உன் குழந்தை குரல் கேட்டு ஓடிவாம்மா
குறைகளெல்லாம்தீர்த்திடவே ஆடிவாம்மா
அருளமுது பருகுதற்கு ஓடிவாம்மா
ஆசிகளைத்தந்திடவே ஆடிவாம்மா
ஓசை மணிக் காளியம்மா ஓடிவாம்மா
ஓடிவந்து ஒலியெழுப்பி ஆடிவாம்மா

## நாராயணன் துதிகள்

ஓம் நமோ நாராணயா !

(பெரிய திருமொழி)

வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துயர்இடும்பையில் பிறந்து
கூடினேன் கூடி இளையவர் தம்மொடு
அவர் தரும் கல்வியே கருதி
ஓடினேன் ஓடி உய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதம் தெரிந்து
நாடினேன் நாடி நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும்நாமம்.

ஆசியே ! அமுதே ! எனநினைந் துருகி
அவரவர் பணைமுலை துணையா
பாவியே னுணராது எத்தனை பகலும்
பழுது போ யொழிந்தன நாள்கள்
தூசிசே ரன்னம்துணையோடும் புணரும்
சூழ்புனற் குடந்தையே தொழுது என்
நாவினா லுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம்.

குலம்தரும் செல்வம் தந்திடும்
அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
அருளோடு பெருநிலம்அளிக்கும்
வலந்தரும்மற்றுந் தந்திடும்
பெற்ற தாயினும்ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும்நாமம்.

திருமங்கையாழ்வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சைமா மலைபோல் பவளவாய்க் கமலச்செங்கண்
அச்சுதா அமர ரேறே ஆயர்தம் கொழுந்தே இன்னும்
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே

கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என்உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோனணி அரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள்மற்றொன்றினைக் . காணாவே.

கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே.

## ஸ்ரீ குருவாயூரப்பன் தோத்திரம்

விச்சு மந்தாரை துளசி
தாமரை பூ மாலை சாத்தி
அச்சுதனே உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்.

கோயில் முன்னே கூடி நின்று
கோடி ஜன்ம பாபம் தீர
குருவாயூரப்பா உன்னை
நமஸ்காரம்செய்கின்றோம்.

திருமேனி தரிசனம்
நிர்மல்யமாகவே கண்டு
கிரிதரா உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்.

எண்ணை ஸ்நானம்செய்து
கையில் வாழைப் பழத்துடன் நிற்கும்
நீல வய்யா உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடம் குடமாகப்பாலை
அபிஷேகம் செய்யும் வேளை
கோவிந்தனே உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்.

கொண்டைமயிர் சீவிபின்னி
மஞ்சள்பட்டுக்கட்டிக்கொண்டு
குழலூதும் கிருஷ்ணா உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்.

தீராத வினைதீர்த்து வைத்து
கோரும் வரம் அள்ளித்தரும்
நாராயணா உன்னை
நமஸ்காரம் செய்கின்றோம்

துலாபாரம் செய்யும்போது
குருவாயூரப்பா உன்னை
பாதநமஸ்காரம் செய்கின்றோம்.

(குழந்தை வேண்டுவோர் சந்நிதியில் சோறு ஊட்டுவதாகப் பிரார்த்தனை செய்து கொள்ளுவது மரபாகும்)

## குருவாயூரப்பன் துதி !

குருவாயூர் அப்பனைத் தொழுதால்
கோடி நலம் தேடிவரும்.
திருவான செல்வம் எல்லாம்
உருவாகி ஒளியும்தருமே.

கலிகாலப் பிரளயத்தில்
கண்ணன்சிலை மிதந்துவந்து
பொலிவான கேரளத்தில்
புகுந்து நின்ற அருளினாலே

குரு-வாயு இருவருமே
உருவாக்கி வைத்ததனால்
குருவாயூர் ஆனதம்மா
குழந்தை நலம் அருளுதம்மா !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடி கண்கள் இல்லையம்மா
குழந்தை அழகின் எல்லையம்மா
தேடி அருளை வழங்குதம்மா
திக்கெட்டும் புகழ் முழங்குதம்மா

"உன்னுடைய சந்நிதியில்
ஊட்டுகிறேன் சோறென்றால்"
கண்ணனே பிறந்திடுவான்
கவலையைத்தீர்த்திடுவான்.

ஓம் ... ஓம் ... ஓம் ... ஓம்
அமர ஜீவிதம் ஸ்வாமி அமுதவாசகம்
பதித பாவனம் ஸ்வாமி பக்த சாகதம் ஓம் ...
முரளி மோஹனம் ஸ்வாமி அசுர மர்த்தனம்
கீத போதகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம் ஓம் ...
நளின தைவதம் ஸ்வாமி மதனரூபகம்

நாக நர்த்தனம் ஸ்வாமி மான வஸ்தகம்
பஞ்ச சேவகம் ஸ்வாமி பாண்ட்டிய சாயகம்
சீத போதகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம் ஓம் ...
சந்திய பங்கஜம் ஸ்வாமி அந்நிய புஷ்பகம்
சர்வ ரக்ஷகம் ஸ்வாமி தர்ம தத்துவம்
நாக பந்தணம் ஸ்வாமி நாக ல்லகம்
கீத போதகம் ஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண மந்திரம்
ஓம் ... ஓம் ... ஓம் ... ஓம்

## கிருஷ்ணன் பஜனை பாடல்

கோவிந்த கிருஸ்ண ஜெய்
கோபால கிருஸ்ண ஜெய்
கோபால பால பால ராதா
கிருஸ்ண ஜெய் (கோவி)

கிருஸ்ண ஜெய் கிருஸ்ண ஜெய்
கிருஸ்ண கிருஸ்ண கிருஸ்ண கிருஸ்ண ஜெய்
கிருஸ்ண ஜெய் ராதா கிருஸ்ண ஜெய்
ராமாகிருஸ்ண கிருஸ்ண கிருஸ்ண கிருஸ்ண ஜெய்
(கோவி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபிக மால ஹாரி பியாரி
மாயி மீரா மன விஹாரி
மதன மோகன முரளி தாரி
கிருஸ்ண ஜெய் (கோவி)

ஹே கிரதர கோபாலா ஹேகிரிதர கோபாலா
ஹே கிரிதர கோபாலா
மாதவ முரஹர மதுர மனோகர கிரிதர கோபாலா
நந்த குமார சுந்தர காரா
பிருந்தாவன சஞ்சாரா முரளீ லோலா
முனி ஜன பாலா கிரிதரகோபாலா (ஹேகிரி)

கோபரி பாலா கோபி லோலா
ராதா ஹ்ருதய விஹாரா
பக்தோத்தாரா பால கோபாலா (ஹேகிரி)

கௌஸ்துப ஹாரா மௌக்திகா தாரா
வேணு கான லோலா
நல்லனி பாலா நவநீத சோரா (ஹேகிரி)

கோவிந்த கிருஸ்ண விட்டலே - வேணு //
கோபால கிருஸ்ண விட்டல - ஸ்ரீ //
ரங்க ரங்க விட்டலே - ஸ்ரீ //
பாண்டு ரங்க விட்டலே //

மதுர மதுர முரளி கனஸ்யாமா
மதுராதி பதே ராதேஸ்யாமா
சூரதாச பிரபு ஹே கிரிதாரி
மீராகே பிரபு ஹ்ருதய விஹாரா (மதுர)

ராதே ராதே ராதே கோவிந்தா
ப்ருந்தாவன ச்சந்தா அநாத நாத தீனபந்தோ
ராதே கோவிந்தா
பண்டரிநாதா பாண்டுரங்கா ராதே கோவிந்தா
ப்ருந்தாவன ச்சந்தா அநாதநாத தீனபந்தே
ராதே கோவிந்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தகுமார நவநீத சோரா ராதே கோவிந்தா
ப்ருந்தாவன ச்சந்தா அநாத தீனபந்தே
ராதே கோவிந்தா

ஆனந்த ஸாகரா முரளீதரா
மீரா பிரபு ராதே ஸ்யாம வேணு கோபாலா
நந்த யசோதா ஆனந்த கிசோரா
ஜெய் ஜெய் கோகுல பாலா ஜெய் ராஜ கோபாலா

## பஜகோவிந்தம்

பஜகோவிந்தம் பஜகோவிந்தம் - கோவிந்தம் பஜ மூடமதே
பஜகோவிந்தம் பஜகோவிந்தம் - கோவிந்தம் பஜ மூடமதே
பகவான் பண்ணன் பதமேல் சொந்தம்
அறிவாய் உன்தன் பாடமதே
(பஜகோவிந்தம்)

உலகினில் பலகோடி உயிர்வகை உருவாகும்
நிலையன்று விளையாடி நிழலென்று தெளிவாகும்
ஆசைகள் அறியாத அருள்வழிந்தேடு
தீதையின்நாயகன்கிருஷ்ணனின்துதிபாடு
(பஜகோவிந்தம்)

நானெனும்அஹங்காரம் - எனது எனும்மமகாரம்
ஞானத்தின் எதிர்வேதம் - ஊனத்தின்அடையாளம்
பிளவிகள் வாராத பேரின்ப நிலைதேடு
குழலிசை கோவிந்தன் புகழினை தினம்நாடு
(பஜகோவிந்தம்)

## கண்ணன் பாடல்

கோகுலத்திலே வளர்ந்தாய் கண்ணா கண்ணா
ஆகுலம் தவிர்க்க வந்தாய் கண்ணா கண்ணா
யோகு செய்யும் சிந்தையர் கண்ணா கண்ணா
நோகுமுன் களைவாய் துயர் கண்ணா கண்ணா

அஞ்ச லென்றே யுரைப்பாய் கண்ணா கண்ணா
சஞ்சலமே தீர்த்து வைப்பாய் கண்ணா கண்ணா
பஞ்சைப் போல் உள்நினைப்பாய் கண்ணா கண்ணா
தஞ்ச மென்றே என்னைவைப்பாய் கண்ணா கண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களும் இன்புறவே கண்ணா கண்ணா
தவசியர் குறையறவே கண்ணா கண்ணா
தேவகியின்அன்புருவே கண்ணா கண்ணா
அவனியின் சத்குருவே கண்ணா கண்ணா

இன்பமனம் கோகுலமே கண்ணா கண்ணா
அன்பருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா
தூயமனம் கோகுலமே கண்ணா கண்ணா
சேயருள்ளம் கோகுலமே கண்ணா கண்ணா.

கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார்மேக வண்ணனாம்
வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்

குழலினாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்
கூட்ட மாகக் கோபியர்
கூட ஆடும் கண்ணனாம்

மழைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனாம்
நச்சுப் பாம்பு மீதிலே
நடன மாடும் கண்ணனாம்

கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனாம்
தூது சென்று பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனாம்

-ஆழ்வள்ளியப்பா

சங்கு சக்ர கஜாவாணீ த்வயூரீதா நிலையா
கோவிந்த ரட்சமாம் சரணாகதம் சரணாகதம்

சேஷசைல வாசா நாராயணா
பக்த பாரீஜாதா நாராயணா (சேஷசைல)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வ ஜீவ வாசா நாராயணா
சாமகாண லோலா நாராயணா
ஸ்ரீ தர்மசாஸ்தா நாராயண (சேஷசைல)

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
சர்வேதனா சுகினோ பவந்து
லோபாசமஸ்தா சுகினோ பவந்து

## கிருஷ்ணன் பாடல்

கோவிந்த கோபாலா ஹேநந்த லாலா
ராதே கோபாலா கோபி கோபாலா
(கோவிந்த)

மீராஹே நாதபிரபு முரளி கோபாலா
மீராஹே நாதபிரபு முரளி கோபாலா
கோவர்த நோதார கோபாலா பாலா
ராதே கோபாலா கோபி கோபாலா
(கோவிந்த)

குருவாயூர் குலஸ்ரீஹரி கிருஸ்ண நாராயண கோபால்
முகுந்த மாதவ முரளீதாரி நாராயண கோபால்
(குருவாயூர்)

மாதவா மதுசூதனா ஹரி நாராயண கோபால்
கோவர்த்தன கிரிதாரி முராரி நாராயண கோபால்
நாராயண கோபாலசாயி நாராயண கோபால
நாராயண கோபால சத்தியநாராயண கோபால
(குருவாயூர்)

மாதவா மாதவா மதுசூதன ஹரி மாதவா
மதுரா தீபதே கேசவா (2)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகனமுரளீ முகுந்த மாதவ
பாவனபர்த்தி முரஹர மாதவ
ஜெய ஜெயஜெயஹே ஜெயஹரி மாதவா (மாதவா)

பஜனகரோ ஹரி நாமம் மதுரம்
த்யானகரோ பகவான் சாயீ நாதம் (பஜனகரோ)

பிரசாந்தி நிலையம் பிரேம அமிர்தம்
தியானகரோ மன மதுரம் மதுரம்
பவபயதரணம் பக்தி நிவாஸம் (பஜனகரோ)

நித்யானந்த ஆத்மானந்த கேசவா கோவிந்தா
கோவிந்த கோபாலா ஜெய ஆனந்த முகுந்தா

பிரம்மாநந்த ரூபா ஸ்ரீ தர்மசாஸ்தா
பிருந்த விகயூரா ஆனந்தச்சந்ரா (பிரம்மாதந்த)

நித்யானந்த ஆத்மானந்த கேசவா கோவிந்தா
கோவிந்த கோபால ஜெய ஆனந்த முகுந்தா (பிரம்மாதந்த)

திருஞானசம்பந்தர் அருளிய

## கோளறு திருப்பதிகம்

(நவக்கிரத்தோத்திரம்)

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் திருமறைக் காட்டில் (வேதாரண்யம்) எழுந்தருளி இருந்தனர். பாண்டி நாட்டில் சைவம் இளைத்துச் சமணம் தழைத்திருந்த காலம். மங்கையர்ககரசி அரசியார் மனம் வருந்தி ஞானசம்பந்தப் பெருமானை பாண்டி நாட்டுக்கு எழுந்தருளும்படி அழைப்பு அனுப்பினார். சம்பந்தரும் பாண்டி நாடு புறப்பட்ட போது நாளும் கோளும் நன்றாக இல்லை என்றார் திருநாவுக்கரசர். சிவனையே சிந்தனை செய்யும் நம்மை நாளும் கோளும் என்ன செய்யும்? யாவும் அவன் பாரமன்றோ? அடியார்கள்நவக்கிரக தோஷங்கள்அணுகாது என்று கூறி இக்கோளறு திருப்பதிகத்தைப் பாடினார் சம்பந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவக்கிரகத்தால்பீடிக்கப்பட்டோர் இப்பதிகத்தைப் பக்தியுடன் பாராயணம் செய்தால் கிரகதோஷம்நீங்கும். நன்மை பெருகும். (பண்: பியந்தைக் காந்தாரம்).

வேய்உறு தோளிபங்கன், விடம்உண்ட கண்டன்,
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பு இரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல, அவைநல்லநல்ல,
அடியார் அவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொடு ஆமை இவைமார்பி லங்க
எருதேறி ஏழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனங்சூடிவந்து, என்
உளமே புகுந்த அதனால்,

ஒன்பதொடு ஒன்றொடுஏழு பதினெட்டொடு ஆறும்
உடனாய் நாள்கள் அவைதாம்
அன்பொடு நல்லநல்ல, அவைநல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே
உருவளர் பவளமேனி ஒளிநீறு அணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகுஅலர் கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்

திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல, அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

மதிநுதன் மங்கையோடு வடபால்இருந்து
மறையோதும் எங்கள்பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்து அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதியுறு காலன்அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்கள் ஆன பலவும்
அதிகுண நல்லநல்ல அவை நல்ல நலல
அடியார் அவர்க்கு மிகவே

நஞ்சுஅணி கண்டன்எந்தை மடவாள்த னோடும்
விடையேறும்நங்கள் பரமன்
தஞ்சுஇருள் வன்னிகொன்றை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்

வெஞ்சின அவுணரோடும் உருமுஇடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே

வாள்வரி அதளதாடை வரிகோவ ணத்தர்
மடவாள்த னோடும் உடனாய்
நாள்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்து, என்
உளமே புகுந்த அதனால்

கோள்அரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடுகரடி
ஆள்ரி நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே

செப்பிள முலை நன்மங்கை ஒருபாகம் ஆக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

வேள்பட விழிசெய்துஅன்று விடைமேல் இருந்து
மடவாள்த னோடும் உடனாய்
வாள்மதி வன்னிகொன்றை மலர்சூடிவந்து என்
உளமே புகுந்த அதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழ்கடல் சூழ்இலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்ல நலல அவைநல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும்பரன்நாரி பாகன்
பசுஏறும் எங்கள்பரமன்
சலமக ளோடுஎருக்கு முடிமேல் அணிந்து, என்
உளமே புகுந்த அதனால்

மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகாலம் ஆன பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

கொத்து அலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்

புத்தரோடு அமணைவாதில் அழிவிக்கும்அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவை நல்லநல்ல
அடியார் அவர்க்கு மிகவே.

தேன் அமர்பொழில்கொள் ஆலைவிளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொன் எங்கும்நிகழ
நான் முகன்ஆதியாய பரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்

தான்உறு கோளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலைஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வன் ஆணைநமதே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனிபகவான் கவசம்

நவக்கிரக மண்டலத்தின் தலைவன் சூரியபகவானே. சூரியனின் புத்திரன் சனிபகவான். எல்லாக் கிரகங்களும்சக்தியும் வலுவும் உள்ளனவே. அதிலும் பாவ கிரகமான சனி பார்த்தாலும், கொடுத்தாலும் அதிகப் பலனைச் செய்பவன். சனி மகாதிசை நடப்பவர்கள், ஏழரை நாட்டுச் சனியால் இன்னலுறுவோர், அஷ்டமத்துச்சனி, கண்டச் சனியால் அவதியுறுவோர், இன்னும் கோசார ரீதியாகச் சனிக் கிரகத்தால் பாதிக்கப்படுவோர் சனிகவசத்தைப் பாராயணம் செய்து வழிபடுதல் நல்லது. சனிப் பெயர்ச்சிக் காலங்களிலும், சனிவக்கிர காலங்களிலும் நிவர்த்திக்காகவும் இக்கவச தோத்திரங்களைப் படித்துக் கோவிலில் சென்று எள் பொட்டலம் போட்டு எண்ணை ஊற்றிச் சனிபகவானை வழிபடலாம்.

## காப்பு

தேவரெண் டிசைக்கதிபர் சித்தரோடு கிம்புருடர்
மூவர் முனிவர் முதலோரை - மேவியுறுந்
தாரணிந்த மார்பன் சனிபகவான் கதை புகலக்
காரணிந்த யானைமுகன் காப்பு.

ஆதிவேதாந்தமுதல் அரியஞானம்
ஐந்தெழுத்தினுட்பொருளை அயன்மாலோடும்

சோதிசிற்றம் பலத்திலாடி நின்ற
சுடரொளியை நீ பிடித்த தோஷத்தாலே

பாதிமதி சடைக்கணிய அரவம் பூணப்
பதியிழக்கச் சுடலைதனிற் பாடியாடச்

சாதியிலா வேடனெச்சிற்திண்ணவைத்தாய்
சனியனே காகமேறுந் தம்பிரானே

வேலவனை வேங்கமர மாக்கிவைத்தாய்
விறகுகட்டுச்சொக்கர்தமை விற்கவைத்தாய்

மாலினியை யுரலோடு கட்டுவித்தாய்
வள்ளிதனைக் குறவரது வனத்தில் வைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலனைமார்க் கண்டணுக்கா அரனுதைத்த
காரணமும் நீ பிடித்த கருமத்தாலே

சாலவுனை யான்றொழுதே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

மஞ்சுதவ ழயோத்தியில்வாழ் தசரதன்றன்
மக்களையும் வனவாசமாக்கிவைத்தாய்

பஞ்சவர்கள் சூதினால் பதியிழந்து
பஞ்சுபடும் பாடைவர் படச்செய்வித்தாய்

எஞ்சிலா வரிச்சந்திரன் பெண்டை விற்றே
இழிகுலத்தி லடிமையுற இசையவைத்தாய்

தஞ்ஞமென புனைப்பணிந்தே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

அண்டமாயி ரத்தெட்டு தரசுசெய்த
அடல்துர பத்மனையு மடக்கிவைத்தாய்

மண்டலத்தை யாண்டநளச் சக்ரவர்த்தி
மனைவியொடு வனமதனி லலையச் செய்தாய்

விண்டலத்தை யாண்டநளச் சக்ரவர்த்தி
மனைவியொடு வனமதனி லலையச் செய்தாய்

தெண்டனிட்டே னெந்நாளு மெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

அண்டர்கோன் மேனியிற்கண் ணாக்கிவித்தாய்
அயன்சிரத்தை வயிரவனா லறுக்கவைத்தாய்

திண்டிறகொள் கௌதமான லகலிகைதான்
சிலையாகவேசாப முறவேசெய்தாய்

தண்டரள நகையிரதி ம்ாரன்றன்னைச்
சங்கரனார் நுதர்தவிழியிற் றணல் செய்வித்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டமிலாதுணைத் தொழுதே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

பாருலவு ப்ரிதியைப்பல் லுதிரவைத்தாய்
பஞ்சவர்க்குத் தூதுபீதாம்பரனைவைத்தாய்

தாருலவும் வாலிசுக் ரீவன்றம்மைத்
தாரையினாற் றீராத சமர்செய்வித்தாய்

சூரனெனு மிலங்கைரா வணன்றன்தங்கை
சூர்ப்பனகி மூக்குமுலை துணிசெய்வித்தாய்

தாரணியு மணிமார்பாவெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.

சுக்ரன்றன் கண்ணிழந்தான் லங்கையாண்டு
துலங்கும்ரா வணன் சிரங்கண்டீக்கவீழ்ந்தான்

மிக்கபுக ழிரணியென்றான்வீறழிந்தான்
விளங்குதிரி பிராதிகளும் வெந்துமாண்டர்

சக்ரத்தா லுடலறுந்தான் சலந்தரன்றான்
தாருகாசூரனுமே சமரில் மாண்டான்

தக்கன்மிகச் சிரமிழந்தா னின்தோஷத்தால்
சனியனே காகமேறுந் தம்பிரானே.

அந்தன ஐங்கரன்கொம் பறவேசெய்தாய்
அறுமுனிவர் மனைவிகள்கற் பழியச்செய்தாய்

சந்திரன்றன்கலையழிந்து தழைக்கச் செய்தாய்
சங்கரனைப் பிச்சைதா னெடுக்கச் செய்தாய்

தந்திமுகச் சூரனுயிர் தளரச் செய்தாய்
சாரங்க தரன்கரத்தை தறிக்கச் செய்தாய்

சந்ததமு முனைப்பணிவே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதைதனை இராவணனாற் சிறைசெய்வித்தாய்
தேவர்களைச் சூரனாற் சிறைசெய்வித்தாய்

மாதுதுரோ பதைதுயிலை வாங்குவித்தாய்
மகேச்சுரனை யுமைபிரியும் வகைசெய்வித்தாய்

போதிலயன் றாளிற்றனைப் பூட்டிவித்தாய்
பொதிகையினிலகத்தியனை பொருந்தச் செய்தாய்

தாதுசேர் மலர்மார்பா வெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

அப்பர்தமை கருங்கலலோ டலையிற்சேர்த்தாய்
அரனடியின் முயலகனை யடங்கச்செய்தாய்

செப்புமா ணிக்கர் தமைச் சிறையிலிட்டாய்
ஒலிகடலி னஞ்சையரன் உண்ணவைத்தாய்

தப்பிலா துணைதொழுதே னெனைத்தொடாதே
சனியனே காகமேறுந் தம்பிரானே

நீரினையுண் டெழுமேக வண்ணா போற்றி
நெடுத்தபத்தி லறுகமலக் கண்ணா போற்றி

சூரியன்றன் றவத்தில்வந்த பாலா போற்றி
துலங்குநவ கிரகத்துண் மேலா போற்றி

காரியென் பெயர்களுப காரா போற்றி
காசினியிற் கீர்த்திபெற்ற தீரா போற்றி

மூரிகொளு நோய்முகமா முடவா போற்றி
முதுமகளின் முண்டகறாள் போற்றி போற்றி

